# மனச்சான்று

(ஓரங்க நாடகங்கள்)

75
1280

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

UNIVERSITY EXTENSION LIBRARY
7 [illegible] 1961
MADURAI

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 1-12-0

மூன்றும் பதிப்பு : நவம்பர் 1956
உரிமை ஆசிரியருக்கு

ஆசிரியரின்
மற்ற நாடக நூல்கள் :

பச்சையப்பர்
இளங்கோ
காதல் எங்கே ?

நாயக வெளியீடு, சென்னை - 30

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

## நன்றியுரை

கல்லூரிக் கழகங்களில் நடிப்பதற்கென்று யான் அவ்வப்போது எழுதிய நான்கு ஓரங்க நாடகங்களின் தொகுதியே இந் நூல். நாடகமாக நடித்த இளைஞர்களின் ஆர்வமும் ஊக்கமுமே இந் நூல் வெளிவரக் காரணமாக அமைந்தன. அவர்களுக்கு என் அன்பார்ந்த நன்றி உரியதாகும்.

மு. வ.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மனச்சான்று | ... | 5 |
| 2. | கிம்பளம் | ... | 41 |
| 3. | ஏமாற்றம் | ... | 77 |
| 4. | பொதுநலம் | ... | 107 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# மனச்சான்று

## காட்சி : 1

**இடம் முதலியன :** செங்கொழுந்து முதலியார் வீடு - கூடத்தில் நான்கு நாற்காலிகளும் இடையில் ஒரு சோபாவும் - அலங்காரமான சின்ன பெஞ்சு - அதன்மேல் பின்னல் வேலைப்பாடுள்ள ரோஜாநிறத் துணி - அதன்மேல் வெள்ளித் தட்டில் வெற்றிலைபாக்கு ஆரஞ்சுப்பழம் முதலியவை - செங்கொழுந்து முதலியார் சோபாவில் படுத்திருத்தல் - அவருடைய பார்வைக்கு எதிரே காந்தி படம் - அவர் அதைப் பார்த்துக் கொண்டே ஏதோ சிந்தனையில் இருக்கிறார் - பகல் 12 மணி.

**செங்கொழுந்து :** (பெருமூச்சு விட்டு) அட உலகமே! (வீட்டினுள் அவருடைய மனைவி தும்முகிறாள்.) (மறுபடியும் பெருமூச்சு) டேய்! டேய்! (கொஞ்சம் பொறுத்து) டேஎய்!

**மாணிக்கவல்லி :** (உள்ளே இருந்தபடியே)யாருங்க? பிரகுவா? பிரகு இன்னும் வர்லேங்க! நேரம் கழித்துத்தான் போனான். வந்துவிடுவான்.

**செங் :** நீ சாப்பிட்டாச்சா ?

**மாணிக் :** ஆச்சுதுங்க, இதோ வந்துவிட்டேன். (கையை முன்தானையால் துடைத்துக்கொண்டே வருகிறாள்.) என்னங்க! ஏன் வெற்றிலே போட்டுக்கொள்ளாமலே இருக்கிறீர்கள் ?

**செங் :** இல்லே மாணிக்கம்! ஏதோ யோசனையா(க) இருந்துவிட்டேன். வேறு ஒன்றும் இல்லே.

மாணிக் : (நாற்காலியில் உட்கார்ந்து) சாப்பிட்டுக் கொஞ்சம் கண்ணயராமல், யோசனை என்ன ? எந்நேரமும் யோசனை பண்ணினால் உடம்புக்குத்தான் ஆகுமா ? (ஆரஞ்சுப் பழம் உரித்துக் கொடுத்தல்.)

செங் : இதெல்லாம் என்ன பண்ணும் ? (ஆரஞ்சுப் பழத்தை விழுங்குகிறார்.)

மாணிக் : அப்படி இல்லைங்க ! நம்ம டாக்டர் போன வாரம் இங்கே வந்தபோது இதைச் சொன்னார். அய்யா அடிக்கடி யோசனை பண்ணுகிறாரா என்று கேட்டார். சாப்பிட்ட பிறகு கவலை இல்லாமல் தூங்குகிறாரா என்று கேட்டார். இப்படியெல்லாம் கவனிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனாருங்க. இல்லாவிட்டால் என்னென்னவோ நோய் வருமாம். என்னவோ அல்ஸராம், மூத்திர வியாதியாம், இரத்த நோயாம், என்னென்னவோ சொன்னாருங்க.

செங் : நல்ல காலம்! பைத்தியம் பிடிக்கும் என்று சொல்லவில்லையே ? அதுதான் குறைச்சலா(க) இருக்கிறது.

மாணிக் : அது டாக்டர் சொல்லவில்லைங்க. நம்ம பக்கத்து வீட்டுப் பாட்டியம்மா சொன்னார்கள். நம்ம பையனைப் பற்றித்தான் சொன்னார்கள். வெள்ளைக் காகிதத்திலே கருப்பெழுத்தை எந்தநேரமும் பார்த்துக் கொண்டே இருந்தால், ஒவ்வொருத்தருக்கு அப்படி ஆய்விடும் என்று சொன்னார்கள். டாக்டரைக் கேட்டால், அதெல்லாம் பொய் என்று சொன்னாருங்க.

செங் : நம்ம பையனைப் பற்றி அந்தப் பாட்டிக்கு என்ன தெரியும் ? அது ஒரு கருநாடகம். டாக்டர் சொன்னது தான் சரி.

மாணிக் : (வெற்றிலையை மடித்துக் கொடுத்துக்கொண்டே) அப்படி இருக்கும் போது, நீங்கள் மட்டும் டாக்டர் பேச்சை ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள் ? ஏன் யோசனை பண்ணுகிறீர்கள் ?

**சேங் :** (வெற்றிலையை மென்றுகொண்டே) நான் அந்தக் காந்தி படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேனே தவிர, வேறே யோசனை பண்ணலை. எவ்வளவு பெரியவர்! எவ்வளவு பாடுபட்டார்! கடைசியில் ஒருகாசும் சேர்க்க வில்லை. சுட்டுப் போட்டுவிட்டார்கள். என்னத்தைக் கண்டார்?

**மாணிக் :** அதற்கு நாம் என்ன செய்யலாம்? அவர் கேட்டு வந்தது அவ்வளவுதான்.

**சேங் :** என்ன உலகம்! அட உலகமே! இப்போது அவருடைய பேரைச் சொல்லி நாம் எல்லாம் எவ்வளவு பணம் சேர்க்கிறோம்? எவ்வளவு சுகமாக இருக்கிறோம்? எல்லாம் அவரால்தானே. அதனால்தான் நான் காந்தி பேரைச் சொல்லிக்கொண்டு யார் வந்தாலும் தருமம் செய்கிறேன். நேற்றுக் கூட, ஒரு சங்கத்துக்கு நூறு ரூபாய் கொடுத்தேன். பெரிய காந்தி படம் - இதைவிடப் பெரிய படம் - நிற்கிற மாதிரி காந்திபடம் - என்ன விலையானாலும் சரி - அவர்களுக்கு ஒன்று வாங்கிக் கொடுக்கப் போவதாகச் சொல்லி யிருக்கிறேன்.

**மாணிக் :** ஆமாங்க, ஏதோ இன்கம்டேக்ஸ், இன்னும் என்னவோ கணக்கு என்னவோ தகராறு இருப்பதாகப் போன வாரம் சொன்னீர்களே, அது என்ன ஆச்சு?

**சேங் :** அதுவா? அதற்காகத்தான் நேற்று அந்தக் காந்தி சங்கத்தாருக்கு நூறு ரூபாய் கொடுத்தேன். அந்தச் சங்கத்தில் இருப்பவர்களுக்கு ஆபீசர்கள் தெரியுமாம். அதனால் அந்தப் படத்தைச் சீக்கிரத்தில் வாங்கிக் கொடுக்கப் போகிறேன். அதுவரையில் வழக்கு ஒத்தி வைக்கும்படியாக வக்கீலுக்குச் சொல்லியிருக்கிறேன்.

**மாணிக் :** காந்தி படம் கொடுத்தால் விட்டுவிடுவார்களா? அப்படியானால்—.

**சேங் :** நீ ஒரு பைத்தியம்! உனக்கு யார் சொல்லுவார்கள்? (எழுந்துபோய் வெற்றிலை துப்பிவிட்டு வந்து நடந்துகொண்டே) உனக்கு ஒன்றும் தெரியாது. சும்மா இரு.

**மாணிக் :** சரி! நான் வாயை மூடிக்கொள்கிறேன். இப்படியே கவலையை யெல்லாம் உங்கள் மனசிலேயே வைத்துக்கொண்டிருந்தால்—.

**சேங் :** சீ! இது ஒன்றும் கவலை இல்லை. தந்திரம். லஞ்சமா(க)க் கொடுத்தால் கைநிறையக்கொடுக்கவேண்டும். அதற்காக இப்படிச் செய்யலாம் என்று பார்க்கிறேன்.

**மாணிக் :** எப்படியோ செய்யுங்கள். ஆனால் பையனுக்கு இதெல்லாம் எப்படிக் கற்றுக்கொடுப்பது?

**சேங் :** இந்த வருஷம் எம். ஏ. பரீட்சைக்குப் போகிறான். இதை முடித்துவிட்டால், அவன் என் வியாபாரத்துக்கு வர'ணும்? பெரிய உத்தியோகத்துக்குப் போனால், அவனுடைய கால்மாட்டில் எத்தனையோ வியாபாரிகள் விழுந்து கிடப்பார்களே! அவனுக்கு என்ன குறைச்சல்?

**மாணிக் :** உத்தியோகத்திலே அவ்வளவாகச் சம்பாதிக்க முடியாது என்று பையன் சொன்னானே!

**சேங் :** யார் சொன்னது! அவனே சொன்னானா? திருவேங்கடமா?

(நடப்பதை விட்டு நிற்கிறார்.)

**மாணிக் :** ஆமாம்; பையன்தான்!

**சேங் :** அட தெய்வமே! இதற்காகவா அவனை இவ்வளவு படிக்க வைத்தேன்? புலி வயிற்றில் பூனைக் குட்டி பிறக்க வேண்டுமா? அங்கங்கே நாற்பது ரூபாய் குமாஸ்தா நாலாயிரம் ஐயாயிரம் என்று சேர்த்து வைக்கிறான். இவனுக்கு இப்போதே கையாலாகாத பேச்சா?

**மாணிக் :** ஏன்? பையன் விருப்பம் போல் வியாபாரமே செய்யட்டுமே! நமக்கு என்ன? உங்களுக்குப் பின்

ஞல் மண்டிக்கு ஆள் வேண்டுமே! உங்களுக்கும் துணை வேண்டுமே!

செங் : அடி பைத்தியமே! வியாபாரத்தில் நானும் சம்பாதித்தேன். என்னைப்போல் திறமை இவனுக்கு வருமா? உத்தியோகத்தில் கண்ணுக்கு மறைவாக நாலு காசு வாங்கிக் கைநிறையச் சேர்க்கத் தெரியாதவன், இவனு வியாபாரம் செய்ய முடியும்? வியாபாரம் என்ருல் சும்மாவா? தலை போகிற வேலை ஆச்சே! போன மாதத்தில் சர்க்கரைப் பஞ்சம் வந்தது. திடீரென்று நூறுமூட்டையைப் பதுக்கி வைத்தேன். எங்கே வைத்தேன், எப்படி வைத்தேன், எந்த வகையில் செலவு செய்தேன், எத்தனை ஆயிரம் எனக்கு லாபம் வந்தது - இதெல்லாம் யாருக்காவது தெரியுமா? உனக்குச் சொல்லியிருப்பேனு? யாருக்காவது மூச்சு விட்டிருப்பேனு? தெரிந்திருந்தால் என்ன ஆயிருக்கும்? தலை போயிருக்கும். வீடு, வாசல், மானம் எல்லாம் போயிருக்குமே! எத்தனை பேருக்கு என்னென்ன லஞ்சம் கொடுத்தேன். இந்தக் காசுக்கெல்லாம் ஒரு துண்டுக் காகிதத்தில் கணக்கு உண்டா? எல்லாம் இங்கேதான்!

(தன் நெற்றியைச் சுட்டிக்கொள்கிருர்.)

மாணிக் : ஏனுங்க இவ்வளவு பயமான வேலை?

செங் : சே! நீ சும்மா இரு. என்னவோ நடுங்குகிருயே!

மாணிக் : அப்படியானல் பையனுக்கு வேண்டாங்க வியாபாரம். (தெருவில் தபால்காரர் கதவைத் தட்டி, 'தபால்' என்கிருர்.)

செங் : வா'ங்க.

தபால் : ஒரு வி. பி. பி. இருக்கிறது. உங்கள் பையன் பேருக்கு இருக்கிறது. (புத்தகக் கட்டை எடுத்துக்காட்டல்)

செங் : (நாற்காலியில் உட்கார்ந்து) சரி, நல்லது. எவ்வளவு பணம் கட்ட'ணும்? நான் கட்டுகிறேன்.

தபால் : ஒன்பது ரூபாய் பத்தணு.

செங் : மாணிக்கம் ! போய்க் கொண்டுவா.

(தபால்காரர் கையெழுத்துக்கு இடம் காட்டுகிருர். செங்கொழுந்து முதலியார் கையெழுத்துப் போடுகிருர். மனைவி உள்ளே போய்ப் பணம் கொண்டு வந்து கொடுக்கிருள். தபால்காரர் பணத்தைப் பெற்றுக்கொண்டு புத்தகக் கட்டைக் கொடுத்துவிட்டு விடைபெறுகிருர்.)

தபால் : வ'ரேனுங்க.

செங் : ஐயா ! ஒரு சின்ன உதவி.

தபால் : என்ன சொல்லுங்க.

செங் : இந்த வாரத்தில் மண்டித் தெருவில் யாருக்காவது கல்கத்தாவிலிருந்து ஏதாவது பாஸ் வந்திருக்குமா ?

தபால் : நேற்று, ச. மு. க. தா. வுக்கு (சண முண கணதாணுவுக்கு) ஒன்று வந்தது. அது என்னவோ தெரியாதுங்க.

செங் : பம்பாயிலிருந்து ?

தபால் : நினைவு இல்லைங்க. இனிமேல் வந்தால் சொல்கிறேன்.

செங் : கொஞ்சம் நினைவு இருக்கட்டும். வியாபாரம், லாட்டரிச் சீட்டு மாதிரிதான். உங்கள் உதவியெல்லாம் இருந்தால்தான் நாங்கள் பிழைக்க முடியும். உதவியை மறக்க மாட்டோம்.

தபால் : அதற் கென்னங்க ! போய் வ'ரேனுங்க.

செங் : (அவரைப் பார்க்காமல் புத்தகக் கட்டைப் பிரித்துக் கொண்டே) போய் வாங்க, போய் வாங்க.

(புத்தகங்களை ஒவ்வொன்ருக எடுத்துப் பெயர் படிக்கிருர்.)

உத்தம வாழ்க்கை
சத்திய சோதனை
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
காந்தி அண்ணல்

அணுசக்தி யோகம்
மாணவர்க்குக் காந்தியடிகள்

அடதெய்வமே ! மாணிக்கம் ! இது என்ன தொல்லை ! என்னவோ என்று பார்த்தால், இந்தப் பையன் எல்லாம் காந்தி காந்தி காந்தி என்று புத்தகங்களைத் தருவிக்கிறான். இதற்கு வேறே ரூபாய் தண்டமா ?. இது தான் எம். ஏ. படிக்கிற அழகா ! சரிதான் ! என்ன பாடு பட்டாலும் அவன் போக்கு இப்படிப் போகிறதே ! சரி தான். சரிதான். சீச்சீ ! மடப்பையன்! (என்று சொல்லிக் கொண்டே எழுந்து பக்கத்து அறைக்கு நடக்கிறார்.)

## காட்சி : 2

**இடம் முதலியன :** செங்கொழுந்து முதலியார் வீட்டின் எதிரே தெருவில். அவருடைய வேலையாள் பிரகஸ்பதியை ஒரு போலீஸ்காரனும் மற்றொரு சி. ஐ. டி. யும் மடக்கி நிற்கிறார்கள்.

போலீஸ் : நீதானே செங்கொழுந்து முதலியாரின் வேலையாள் ?

பிரகஸ்பதி : ஆமாங்க.

போலீஸ் : அவர் என்னவோ கேட்கிறாரே, பதில் சொல்லி விட்டுப்போ.

பிர : அவசரமாகப் போக'ணுமே. அய்யா கோவிச்சுக் கொள்வார்.

போலீஸ் : ஐந்து நிமிஷத்தில் தலைமுழுகிப் போகாது. அய்யா கேட்டால் சொல்லு. நாங்கள் உன்னை நிறுத்தி வைப்பது, கேட்பது எல்லாம் சர்க்கார் வேலை, தெரியுமா ?

பிர : அய்யாவுக்குச் சொல்லிவிட்டு ஓடிவந்துடுறேனுங்க.

போலீஸ் : அதுதான் முடியாது. ஏதாவது பேசினால் அரெஸ்டு. நேராகக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கே கேட்டுக்கொள்வோம். என்ன சொல்கிறாய் ?

பிர : இங்கேயே சொல்'றேனுங்க.

சி.ஐ.டி : உன் பேர் என்ன ?

பிர : பிரகஸ்பதி.

சி.ஐ.டி : (கலகல எனச் சிரித்து) புதுமையான பெயராக இருக்கிறதே ! யார் வைத்தது இந்தப் பெயர் ?

(போலீஸ்காரனைப் பார்த்து) கேட்டாயா'ப்பா இந்தப் பெயரை, இதுவரைக்கும் ?

**போலீஸ் :** நான் இது வரையிலும் கேட்டதில்லையே. நான் முதல் முதலில் வேலைக்குச் சேர்ந்தபோது, ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருந்தார். அப்போது நான் ஏதாவது தவறு செய்தால், சொல்லத் தெரியாமல் சொன்னால், என்னைப் பார்த்து, 'பிரகஸ்பதி நீ தானடா' என்று சொல்வார்.

**பிர :** என்னைக்கூட ஒருத்தர் அப்படித்தான் சொன்னாருங்க.

**சி.ஐ.டி :** அப்படிச் சொல்லு. எடுத்த எடுப்பிலேயே என்னை ஏமாற்றப் பார்த்தாயே !

**பிர :** ஏமாற்ற'லீங்க.

**சி.ஐ.டி :** உன் உண்மையான பேர் என்ன ? சொல்லப்பா.

**பிர :** பிரகஸ்பதி என்றுதான் பேருங்க. எனக்கு வருகிற சாவுக் கடிதம் கலியாணக் கடிதம் எல்லாம் பிரகஸ்பதி என்றுதான் வருங்க.

**சி.ஐ.டி :** அம்மா அப்பா உனக்கு வைத்தபேர் என்ன'டா ?

**பிர :** எனக்கு அப்பா இல்லீங்க. அம்மாதான். அவள் மட்டும் குழந்தை குழந்தை என்று கூப்பிடுவாள். மற்றவர்கள் எல்லாம் பிரகஸ்பதி என்றுதான் சொல்வார்கள். நான் சின்ன பையனாக இருந்தபோது, ஒரு வாத்தியாரின் வீட்டில் வேலைக்காரப் பையனாக அனுப்பினார்கள். அவர் ஒன்று சொன்னால் நான் அதைவிட வேறே ஒன்று செய்தேனாம். அதனால் அவருக்கு மனம் சந்தோசமாகி, பிரகஸ்பதி என்று முதல் முதலிலே பேர் வைத்தாரு என்று சொல்வார்கள்.

**சி.ஐ.டி :** சரி. அது தொலையட்டும். நீ இங்கே எத்தனை காலமாக வேலையாளாக இருக்கிறாய் ?

**பிர :** மூன்று வருசமா.

**சி.ஐ.டி :** இந்த வீட்டிலே எத்தனை அறை இருக்கிறது ?

பிர : ஒண்ணு, ரண்டு, மூணு, நாலு, அஞ்சி, ஆறு—

சி.ஐ.டி : ஆறு தானு ?

பிர : இதோ வ'ரேன் இருங்க. ஒண்ணு, ரண்டு, மூணு, நாலு, அஞ்சி, ஆறு, எழு, எழு, எழு.

சி.ஐ.டி : அட என்னடா ? எத்தனை எழு'டா ?

பிர : இதோ வ'ரேன் இருங்க. (எங்கேயோ பார்த்துக்கொண்டு சுட்டுவிரலால் எதையோ எண்ணிக்கொண்டு) ஒண்ணு, ரண்டு, மூணு, நாலு, அஞ்சி, ஆறு, எழு, எட்டு, எட்டு, எட்டு.

சி.ஐ.டி : அட என்னடா ? பைத்தியமா ?

பிர : பைத்தியம் இல்லேங்க ! பிரகஸ்பதி'ங்க.

போலீஸ் : இதெல்லாம் கேட்கிற இடத்தில் கேட்க'ணுங்க கொடுக்கிற உதை கொடுக்க'ணுங்க.

பிர : (நடுங்கிப்போய்) இல்லேங்க ! எட்டுக்கு மேலே என்னவோ சொல்வார்களே. அது வர'லேங்க !

சி.ஐ.டி : ஒன்பதாடா ?

பிர : ஆ(ம்)! ஆ(ம்)! ஒம்பத்து, ஒம்பத்து. அதுதானுங்க.

சி.ஐ.டி : ஒன்பது அறையா'டா ?

பிர : இல்லேங்க ! இன்னும் இருக்குதுங்க.

சி.ஐ.டி : பத்தா'டா ?

பிர : நீங்க பூசை அறையை மட்டும் சொல்கிறீர்கள் ! அதற்குள்ளே இன்னொரு கதவு வைத்திருக்குதுங்க !

போலீஸ் : கன்னத்திலே பத்து அறை கொடுங்கள். அப்போதுதான் பதினோராவது அறையைப் பற்றிச் சொல்வான்.

சி.ஐ.டி : பதினொன்று ? சொல்லித் தொலே.

பிர : அதுக்குமேலே தெரியாதுங்க ! ஒருநாள் கலெக்டர், காந்தி செட்டியார் எல்லாம் வந்து பார்த்தார்கள். என்னை வெளியிலேயே நிற்க வைத்திட்டார்கள்.

சி.ஐ.டி : சரிதான்! சரியான ஆள்தான். அது போகட்டும், பிரகஸ்பதி! இராத்திரியிலே, அவர் வீட்டுக்கு ஏதாவது லாரி வரு'தா? பார்த்திருக்கிருயா?

பிர : இராத்திரியிலே நான் துங்கிடு'றேனே! அம்மா என்னை மூதேவி மூதேவி என்று திட்டுவார்கள்.

சி.ஐ.டி : அதிருக்கட்டும் மூதேவி! நீ—.

பிர : மூதேவி என்று பேர் வைக்க'லேங்க.

சி.ஐ.டி : சரி! பிரகஸ்பதி! நீ போன வாரத்தில் இராத்திரியிலே ஏதாவது லாரி பார்த்தாயா?

பிர : மண்டியிலே, கடைத்தெருவிலே பார்த்தேனுங்க!

சி.ஐ.டி : அட சனியனே! அதைக் கேட்க'லே. வீட்டிலே இராத்திரியிலே!

பிர : இராத்திரியிலே தூங்கிடு'றேனுங்க.

சி.ஐ.டி : தூங்குவதற்கு முன்னே!

பிர : பார்த்ததில்லேங்க.

சி.ஐ.டி : தூங்கும்போது ஏதாவது சத்தம் கேட்டு விழிக்கிறதில்லையா?

பிர : நாய் குலேக்கிற சத்தம் கேட்டு விழிப்பேனுங்க. ஆனல், எமன் வரும்போது நாய் குலேக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனலே கண்ணைத் திறக்காமலே இருந்துவிட்டுத் தூங்கிவிடுவேன்.

சி.ஐ.டி : சரி, நீ போய்த் தொலே.

பிர: அப்படியே ஆகட்டுங்க. போய்வ'ரேன் சாமி. (போகிருன்.)

சி.ஐ.டி : (அவன் போவதைப் பார்த்துக்கொண்டே, போலீஸ் காரனிடம்) இவன் ஒன்றும் பிரயோஜனமே இல்லே. இவனைக் கேட்பதும் ஒன்றே; கேட்காததும் ஒன்றே. பைத்தியக்காரன் சாட்சி சொன்னதுபோல்தான் முடியும்.

போலீஸ் : வேறே வழி இல்லேங்க. யாரைக் கேட்டாலும் உண்மை சொல்லமாட்டார்களே! செங்கொழுந்து

முதலியார் முன்னெல்லாம் ஈயாப் பத்தர். இப்போது கள்ளமார்க்கெட்டு அதிகமாக ஆக, தான தருமம் அபிஷேகம் அருச்சனை எல்லாம் தடபுடலாகச் செய்கிறார்.

சி.ஐ.டி : எதுவும் ஒன்றும் நடக்காது. ஊரில் உள்ள மக்கள் கிளம்பினால், எல்லாவற்றையும் பார்த்துவிடுவார்கள். ஊரார் கவலை இல்லாமல் இருக்கிற வரையில் சர்க்காருக்கும் நமக்கும் என்ன அக்கறை ?

போலீஸ் : என்னவோ, நம்ம வேலை, மாட்டை மேய்த்தோமா கோலைப் போட்டோமா என்று—

சி.ஐ.டி : சரி நாளைக்குப் பார்க்கலாம். இன்றைக்குப் போதும். போய் வரட்டுமா ? (பிரிகிறார்கள்.)

## காட்சி : 3

**இடம் முதலியன :** செங்கொழுந்து முதலியார் வீடு—கூடத்தில் மேசையின் பக்கத்தில் மல்லிகைப் பூமாலை காந்திபடத்துக் காகக் கட்டிக்கொண்டு மாணிக்கவல்லி நிற்கிருள். வேலையாள் பிரகஸ்பதி வெங்காயம் உரிக்கிருன், கீழே உட்கார்ந்தபடியே. மாலைநேரம்-மணி 5-30.

**மாணிக் :** நீ என் அதெல்லாம் சொல்லித் தொலேச்சே ? (கவலேயோடு, கையில் மாலையை முடிக்காமல் குறையாகத் தொங்கவிட்டுக்கொண்டே) சும்மா வந்து தொலேக்கிறது தானே ?

**பிர :** நான் என்ன'ம்மா பண்ணட்டும்? இல்லாவிட்டால், வா, போலீஸ் ஸ்டேஷனுக்கு; உதை கொடுத்தால் சொல்வாய் என்று வம்பு பண்ணிஞர்களே.

**மாணிக் :** போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வருவது தானே ! கால் தேய்ந்தா போயிடும்? தெரிந்ததும் தெரியாததும் சொல்லித் தொலேத்தால், யார்பிழைப்பிலே மண்ணைப் போடுவது ?

**பிர :** (வெங்காயம் உரித்துக்கொண்டே கண்ணைத் துடைத்துக் கொண்டு) அப்படியே ஆகட்டும் அம்மா !

**மாணிக் :** (அதட்டும் குரலில்) என்னடா இது? உளறுகிருயே.

**பிர :** இல்லே'மா. நான் ஒண்ணுமே சொல்லலே'மா.

**மாணிக் :** (அவன் எதிரில் வந்து நின்று) இப்போது சொன்ஞயே, இந்த அறை அந்த அறை எல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னதாக.

**பிர :** இல்லே'மா. சொல்லவே இல்லே'மா.

மாணிக் : ஐயா வரட்டும். என்ன என்ன பொய் சொல்லி எங்கள் பிழைப்புக்கு உலே வைக்கிருயோ ? வருவதெல்லாம் வம்பாக வருது !

(வெளியே இருந்து மகன் திருவேங்கடம் டக் டக் என்று நடந்தபடியே உள்ளே நுழைதல்.)

என்ன கெட்ட காலமோ? சனியன்! சோதிடக்காரன் சொன்னது சரியா(க) இருக்குது. வேலேக்காரனே போதும் எங்களுக்கு விரோதி.

திருவேங்கடம் : (இருவர் முகத்தையும் பார்த்து) என்ன'ம்மா இது. அவன் ஒரு பைத்தியக்காரன். அவனிடத்தில் எந்த நேரமும் கோபித்துக்கொள்கிருய். என்ன'டா இது பிரகு ? (கோட்டை கழற்றுதல்)

பிர : ஒண்ணும் இல்லே'ப்பா. போலீஸ்காரரிடத்தில் நான் ஒண்ணுமே சொல்லலே'ப்பா.

திரு : என்னடா இது! (கழற்றிய கோட்டைத் தோளில் மாட்டிக் கொண்டு) என்னடா போலீஸ் ! நீ ஏன்'டா அவர்களிடம் போனுய் ?

மாணிக் : அவனே ஒன்றும் கேட்காதே'ப்பா. நான் கேட்டதே போதும். அவனு பைத்தியக்காரன் ? காரியப் பைத்தியக்காரன். பக்கத்து வீட்டிலும் எதிர் வீட்டிலும் வெற்றிலேப் பாக்கு பிச்சை வாங்கிப் போட்டுக் கொள்கிற புத்தி, சொன்னுலும் போகாது. சொல்வார் பேச்சைக் கேட்டுக்கொண்டு போலீஸ்காரரிடம் என்னென்னவோ சொல்லிக் கலகம் பண்ணிவிட்டு வந்திருக்கிருன். அப்பாவுக்குச் சொல்லி—

பிர : அம்மா அம்மா ! (எழுந்து கைகட்டி நின்றுகொண்டு) உங்கள் பிள்ளே போல அம்மா ! எனக்கு ஒண்ணும் தெரியாதம்மா !

திரு : நீ ஏன்'டா போலீஸ்காரரிடம் போனுய் ? என்னடா சொன்னுய் ?

மாணிக் : அதைக் கேள'ப்பா. (உள்ளே நுழைகிருள்.)

பிர : நான் போகவில்லே'ப்பா. பகலுக்குமேலே சாப்பிட்டு வரும்போது வழியில் மடக்கிக்கொண்டார்கள்.

திரு : காரணம் இல்லாமலா ? என்னடா இது ? (மேலே நிமிர்ந்து பார்த்தபடி யோசிக்கிறன். வேலேக்காரனே உற்றுப் பார்க்கிறன்.) என்னடா அழுகிறய் ! யார் என்ன பண்ணினர்கள் ? ஏதாவது வழக்கா அம்மா ? (உரக்க)

மாணிக் : (உள்ளேயிருந்து கூடத்திற்கு வந்து) வழக்கோ என்ன வம்போ ? யாருக்கு என்ன பொருமையோ ?

திரு : ஆமாம் ; இவன் ஏன் அழுகிறன் ?
(பிரகஸ்பதி கண்ணேத் துடைக்கிறன்.)

மாணிக் : இவன் மெய்யாகவா அழுகிறன் ? நீ சொன்னதால் பாசாங்கு செய்கிறன். வெங்காயம் உரித்தால் கண்ணில் தண்ணீர் வராதா ? செய்ததையும் செய்துவிட்டுப் பாசாங்கும் பண்ணுகிறன் ?

திரு : என்ன செய்தான் ! என்ன சொன்னன் ? அதைச் சொல்லித் தொலே'மா. அதைச் சொல்லாமல்—.

மாணிக் : அப்பா வரட்டும். அப்பாவிடத்தில் சொல்லிக் கொள்கிறேன். உனக்கு ஏன் இந்தக் கவலே ? நீ போ'ப்பா.

திரு : அப்படியானல் நீங்களும் ஏதோ இவனுக்குக் கொடுமை செய்கிறீர்கள் என்று தெரிகிறது—சரிதான். அதனல்தான் அழுகிறன். டே ! பிரகு ! என்ன'டா கேட்டார்கள் போலீஸ்காரர்கள் ?

பிர : நம் வீட்டுக்கு இராத்திரியிலே லாரி வரு'தா, வீட்டிலே எத்தனே அறை, இப்படியெல்லாம் கேட்டார்கள். எனக்கு ஒண்ணுமே தெரியாது என்று சொல்லிட்டேன்'பா.

திரு : இதனல் என்ன'ம்மா தப்பு ?

மாணிக் : சரி சரி. நீ உன் படிப்பைப் பார். உனக்கு ஒன்றும் தெரியாது. காலம் இருக்கிற கேடு என்ன ? போலீஸ்காரரிடத்தில் வாயை விற்கலாமா ?

திரு : அவன்தான் ஒன்றும் சொல்ல’லேயே !

மாணிக் : நீ பார்த்தாயா ? கேட்டாயா ?

திரு : இவன்தான் சொல்கிறானே.

மாணிக் : இவனை இனிமேல் ஒரு காசுக்கும் நம்பாதே. நம்ம வீட்டுக்கு லாரி வரும், இது வரும், அது வரும். அதெல்லாம் இவனுக்கு என்ன ?

திரு : என்ன’மா இது ? இவனுக்குப் பைத்தியம் என்று பார்த்தால் உனக்கே பைத்தியமாக இருக்குது ! காரணம் இல்லாமல் இப்படிப் பேசுகிறாயே. (சிறிது எண்ணுகிறான்.) ஓ ஓ ! தெரிந்துகொண்டேன். குற்றமுள்ள நெஞ்சுதான் குறுகுறு என்னும். அப்பா வியாபாரத்தில் ஏதோ தப்பு செய்கிறார். அதனாலேதான் நீ இப்படிப் பேசுகிறாய். சரி, சரி—பிளாக்மார்க்கெட் காந்திபடத்தின் நிழலிலே வந்துவிட்டதா ? கல்லூரிப் பிள்ளைகள் என்னைக் கேலி செய்தது சரிதான்.—

(அப்போது எதிர்பாராமல் சிவக்கொழுந்து இன்னொருவருடன் நுழைகிறார். மாணிக்கவல்லி மகனைக் கையைப்பிடித்து உள்ளே அழைத்துச் செல்கிறாள். வேலைக்காரன் கண்ணைத் துடைத்துக் கொண்டே பரபரப்பாக இங்கும் அங்கும் பார்க்கிறான். அவன் முகத்தில் கலக்கம்.)

சிவக் : வாங்க, சார், உட்காருங்க, அதிலே வேண்டாம், சோபாவிலே உட்காருங்க. (நாற்காலியில் உட்காரப் போனவரைச் சோபாவில் உட்கார வைத்துவிட்டுத் தாம் ஒரு நாற்காலியில் உட்காருகிறார்.) சரி ! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

நண்பர் : எல்லாம் சரிப்படுத்திவிடலாம். ஆனால் நீங்கள் கொஞ்சம் தாராளமாக இருக்க வேண்டும்.

சிவக் : நான்தான் முதலிலேயே சொன்னேனே. நீங்கள் சொல்கிறபடியே நடக்கும். சொன்னால் பதில் இல்லை. நான் வீட்டுக்கு வரட்டுமா ?

நண்பர் : ஆ ஆ ! தாராளமாக வா'ங்க. நான் என்ன சர்க்கார் உத்தியோகஸ்தனு ? என் மைத்துனர் ஆபீசராக இருந்தால், என் வீட்டுக்கு வரக்கூடாதா, என்ன ? தாராளமாக வா'ங்க. ஆனல் ஒன்று. (மெல்ல) உங்கள் மண்டிக் குமஸ்தா, வீட்டு வேலைக்காரர் எல்லோருக்கும் சொல்லிவைத்துவிடுங்கள். எதை விற்ருலும் வாயை மட்டும் விற்கக்கூடாது. (புறப்பட எழுகிருர்.)

சிவக் : அதை நான் பார்த்துக்கொள்கிறேன். என் அவசரம் ! இருந்து போகலாமே ! டே பிரகு !

பிர : ஐயா !
(சிவக்கொழுந்து ஏதோ சைகை செய்கிருர். அதைப் பார்த்து) அப்படியே ஆகட்டுங்க.

நண்பர் : இப்போது ஒன்றும் வேண்டாங்க. உள்ளன்பு இருந்தால் போதும். நானும் அவசரமாகப் போக'ணும். வரட்டுங்களா ? (கைகூப்பிப் பிரிகிருர் )

சிவக் : செய்யுங்கள். நாளைக் காலையிலேயே வந்துவிடுகிறேன்.

(அவர் போகிருர். விடைகொடுத்துவிட்டுச் சிவக்கொழுந்து திரும்புகிருர். அப்போது பிரகஸ்பதி கலர் உடைத்துக் கண்ணுடிக் குவளையில் வார்த்துத் தட்டில் எடுத்துவந்து மேசைமேலே வைத்து நிற்கிருன்.)

சிவக் : என்ன'டா இது ? மடையனு(க) இருக்கிருயே !

பிர : (பயந்து மருண்டு) அப்படியே ஆகட்டுங்க !

சிவக் : என்ன'டா உளறுகிருயே !

பிர : (மிகுதியாக மருண்டு) அப்படியே ஆகட்டுங்க !

சிவக் : (உரக்க) என்னடா இது ! எங்களைப் பிடித்த சனியன் !

பிர : அப்படியே ஆகட்டுங்க. உங்க பிள்ளைமாதிரி'ங்க.
(உள்ளே இருந்து மனைவியும் மகனும் வருகிருர்கள்.)

மாணிக் : (நிலைமையைத் தெரிந்துகொண்டு) அவனோடு என்ன? காலையிலே இருந்து அவன் என்னவோ பைத்தியம் மாதிரி இருக்கிறான்—விட்டுவிடுங்கள் பாவம் !

பிர : ஐயா, அம்மா ! நான் ஒண்ணுமே சொல்லலீங்க.

மாணிக் : டே ! நீ இங்கே இருக்காதே. வீட்டுக்குப் போய் விடு. இல்லாவிட்டால், தோட்டத்துக்குப் போய்ப் பேசாமல் கிணற்றங்கரையில் படுத்துக்கொள். நீ வேலை செய்யாவிட்டால் போகட்டும், போ. போய்விடு. (கணவனைப் பார்த்து) நல்ல பைத்தியம், எல்லாம் நம்ம தீவினை ! யாரைச் சொல்லி என்ன பயன் ?

திருவேங் : (ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு) அம்மா! அவனாவது ஏழைப் பைத்தியம் ! நாம் பணக்காரப் பைத்தியம் ஆகாமல் பார்த்துக்கொள்ளணும் அம்மா ! இதோ காந்திபடம் இருக்கிறது. மனத்தைத் தொட்டுப் பார்த்து—(தாயின் பார்வை அவனுடைய பேச்சைத் தடுக்கிறது. சிவக்கொழுந்து ஒன்றுமே விளங்காமல் மாறி மாறி மனைவியின் முகத்தையும் மகனுடைய முகத்தையும் பார்க்கிறார்; மனம் தடுமாறுகிறார் ; பெருமூச்சு விடுகிறார். திருவேங்கடத்துக்குப் பேச வாய் எழவில்லை. பேசாமல் வெளியே போகிறான்.)

## காட்சி : 4

**இடம் முதலியன :** காலை நேரம்—ஒரு பூங்கா—திருவேங்கடம் ஒரு மேடையில் ஒரு காலை வைத்துக்கொண்டு, முழங் காலின்மேல் ஒரு கையையும் அதன்மேல் முகத்தையும் ஊன்றியபடி சாய்ந்து நிற்கிறான். எண்ணுகிறான். மற்றொரு கையில் 'உத்தம வாழ்க்கை' என்ற புத்தகம் இருக்கிறது. சிறிது நேரத்தில் நிமிர்கிறான். இப்படியும் அப்படியுமாக உலாவுகிறான். பெருமூச்சு விடுகிறான். கையிலிருந்த புத்த கத்தைத் திறக்கிறான். படிக்கிறான்.

(திருவேங்கடம் நிறுத்திப் படித்தல்.)

**நூல் :** ஒருவருடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஒரு சாமானை வாங்கிக்கொண்டபோதிலும் அந்தச் சாமா னுக்கு நம்மிடம் உபயோகம் இல்லாவிட்டால் அதை யும் திருடு என்றே கூறவேண்டும். ஆகவே தேவைக்கு மிகுதியாகப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ள லாகாது. உணவுப் பொருள்களைப் பொருத்தவரையில் இத்தகைய திருடுகள் நடப்பது உண்டு. எனக்குத் தேவையில்லாத பழத்தை நான் பெற்றுக்கொள்வ தும், என் தேவைக்குமேல் அதிகமாகப் பெற்றுக் கொள்வதும் 'திருடு'தான்... இந்தச் சட்டத்திலிருந்து தவறுகிறவர் பலர் உலகத்தில் இருப்பதால்தான் உல கத்தில் தாங்கமுடியாத வறுமை நிறைந்திருக்கிறது...

(தலை நிமிர்ந்து மேலே பார்த்து ஏதோ எண்ணுகிறான். தலை அசைக்கிறான். மறுபடியும் புத்தகத்தைப் பார்க்கிறான். அடுத்த பக்கத்தைப் புரட்டுகிறான். நிறுத்திப் படிக்கிறான் முன்போலவே.)

தூல்: "திருடாதிருப்பதும் சேமிக்காதிருப்பதும் ஒன்று என்று நான் கருதுகின்றேன். தேவையில்லாதபோது ஒருவன் ஒரு பொருளைத் தன்னிடம் சேமித்து வைத்திருந்தால் அதையும் திருட்டுச் சொத்தாகவே எண்ண வேண்டியிருக்கிறது.........பணக்காரர்களிடம் ஏராளமான பொருள்கள் தேவைக்கு மிஞ்சிக் கிடக்கின்றன. அவைகள் வீணுகின்றன. அதே சமயத்தில் கோடிக் கணக்கான மக்கள், வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் பட்டினி கிடந்து சாகின்றூர்கள்.—"
(உடனே புத்தகத்தை மூடுகிறுன். மெல்ல நடக்கிறுன். இடையிடையே பெருமூச்சு.)

திருவேங்: ஆமாம்! உண்மைதான்! திருடு திருடுதான்.

தூல்: உலகத்தின் வறுமைக்குக் காரணம் இந்தத் திருடுதான். ஏழைகளின் பட்டினிக்குக் காரணம் இந்தத் திருடுதான். போருக்கும் பஞ்சத்துக்கும் காரணம் இந்தத் திருடுதான். இதுவரையில் உலகத்தில் எந்த ஞானியும் சொல்லாத பெரிய உண்மை இது. காந்தியடிகள் ஒருவர்தான் இதைத் தெளிவாக்கிய உத்தமர்.

திருவேங்: (பெருமூச்சு. சுட்டு விரலை அசைத்தல். கீழே எதையோ உற்றுப் பார்த்தல்.) சொல்லிவிட்டேனே!

தூல்: நீ சொன்னதில் தவறு என்ன? உண்மையைத் தானே சொன்னுய்? உன் தந்தையார் காந்தி பக்தரா? காந்தி படத்தை வீட்டில் மாட்டிவிட்டால் போதுமா? சங்கங்களுக்குக் காந்தி படத்தைப் பெரிய அளவில் வாங்கிக் கொடுத்தால் போதுமா? காந்தி பிறந்த நாளில் நூறு ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்துவிட்டால் போதுமா? உன் வீட்டில் - நீ வளரும் வீட்டில் - காந்தி வெறுத்த திருடு நடக்கிறதே. இதை நீ கண்ணுல் பார்த்துக்கொண்டு, காதால் கேட்டுக்கொண்டு, வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டுமா? (பெருமூச்சு. நிற்கிறுன். தலையை அசைக்கிறுன். கையை நொடிக்கிறுன்.)

நீ கோழை. வாயை மூடிக்கொண்டிருந்தால் நீ கோழை. படிப்பது காந்தி புத்தகம். பார்ப்பது காந்தி படம். நம்புவது காந்தி நெறி. பேசுவது காந்தி புகழ். தின்பது திருட்டுச் சோறு — சீ! சீ! இந்தத் துரோக வாழ்க்கை, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்ருக வாழும் வாழ்க்கை, ஏமாற்றும் வாழ்க்கை, ஏழைகளை உறிஞ்சும் வாழ்க்கை—இந்தச் சீர்கெட்ட வாழ்க்கையில் உனக்கும் பங்கு இருக்க வேண்டுமா? (பரபரப்பாக உலவுகிருன்.)

திருவேங் : உலகம் என்னைப் பழிக்கும். என்னை நன்றி கெட்டவன் என்று உலகம் பழிக்கும். பெற்ற தகப்ப னுக்குத் துரோகம் செய்தவன் என்று உலகம் பழிக் கும். நான் துரோகியா?

தூரல் : தகப்பனை விட, குடும்பத்தை விட அறம் பெரியது அல்லவா? பெற்ற தாயின் பசியைக் கண்டாலும் காணலாம். சான்ருேர்களின் அற நெறியை விட்டு அப்பால் செல்லக் கூடாது என்று திருவள்ளுவர் வற் புறுத்தவில்லையா? காந்தியடிகள் காட்டிய அறம் பெரியது அல்லவா? தந்தைக்கு அடங்கி வாழ்வதா பெரியது? தாயின் கண்ணீரா பெரியது? திருவள்ளு வரை வணங்கும் நீ, திருக்குறளைப் படிக்கும் நீ, அறத் தையே கடவுளாகக் கொண்ட தமிழரின் மரபில் பிறந்த நீ, தாயின் கண்ணீருக்காகத் தயங்குவதா? தந் தையின் ஆத்திரத்துக்காக அஞ்சுவதா? திருவள்ளுவ ரைப் படித்த தமிழனுகிய நீ காந்தியைப் போற்ருவிட் டால், காந்தி நெறியில் நடக்காவிட்டால், உலகத்தில் வேறு எந்த நாட்டார் போற்றுவார்கள்? வேறு எந்த நாட்டார் நடப்பார்கள்? (தயக்கம், அமைதி.)

திருவேங் : போகட்டும். போனுல் போகட்டும். படிப் புத்தானே? எம். ஏ. பட்டம் போய்விடுமா? போனுல் போகட்டும். இன்னும் ஆறுமாதம் படிப்பதற்குத்

தந்தையார் பணம் கொடுக்க மாட்டார். அவ்வளவு தானே! இந்த உலகத்தில் வேறு யாரும் உதவ மாட்டார்களா? பார்க்கலாம். (துணிவு) — சரி.

தூரல்: என்ன ஆனாலும் ஆகட்டும். இனி அந்த வீட்டு வழியே எட்டிப் பார்க்கக் கூடாது. கள்ளமார்க்கெட்டும் காந்தி நெறியும் ஒன்ருக வாழவே முடியாது. உன்னை யார் என்ன பழித்தாலும் பழிக்கட்டும். பூசை அறை, அதற்குள்ளே கள்ள வியாபாரம்—பிளாக் மார்க்கெட் கணக்கு—கடவுளுக்குத் துரோகம், அறத்துக்குத் துரோகம், மனித சமூகத்துக்குத் துரோகம், தமிழினத்துக்கே துரோகம், உனக்கு நீயே துரோகம் செய்துகொள்ள வேண்டுமா?

திருவேங்: சீ! சீ! இனி அந்த வீட்டு வாசற்படியில் கால் வைக்கவே மாட்டேன். என் படிப்புக்கு, என் வாழ்வுக்கு, இன்ருேடு முற்றுப்புள்ளி வைத்தாலும் சரியே! என்ன வந்தாலும் வரட்டும் —

(பரபரப்பாக நடந்து போய்விடுகிருன்.)

## காட்சி : 5

**இடம் முதலியன :** கல்லூரி மாணவர் விடுதி—128-ம் எண்ணுள்ள அறை—'புகை பிடிக்கக் கூடாது' என்ற ஓர் அட்டை தொங்குகிறது--மாணவன் ஒருவன் தனியே உட்கார்ந்து 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதியார் பாட்டை இசையோடு பாடிக்கொண்டிருக்கிறான். மற்றொரு மாணவன் மெல்ல வந்து எட்டிப் பார்க்கிறான்—மாலை 5 மணி.

**முதல் மாணவன் :** (கடிகாரத்தைப் பார்க்கிறான்.) சரி, மணி ஐந்து ஆய்விட்டது.

**இரண்டாம் மாணவன் :** என்'பா எங்கே போக வேண்டும்? (உள்ளே வருகிறான்.)

**முதல் :** அட! நீயா! எவ்வளவு நேரமாக எட்டிப் பார்க்கிறாய்?

**இரண் :** இப்போதுதான் வந்தேன். என்ன? (நாற்காலியில் உட்கார்ந்து) இரண்டாம் காட்சிக்குப் போக வேண்டுமா? என்ன படத்துக்கு?

**முதல் :** அட போ'ய்யா. உனக்கு எந்த நேரமும் சினிமாப் பேச்சுத்தானா? உலகத்தில் சினிமா தவிர வேறு ஒன்றுமே இல்லையா?

**இரண் :** உனக்குத்தான் வேறு உலகமே தெரியாதே! கிரிக்கெட் பந்தயத்துக்கா போகப் போகிறாய்?

**முதல் :** சும்மா அப்படியே எங்காவது நடந்து போய்ச் சுற்றிவிட்டு வரலாம் என்று இருக்கிறேன்.

**இரண் :** (பக்கத்தில் இருந்த புதுப் பெட்டியைப் பார்த்து) இது என்ன? புதுப் பெட்டி! யாராவது ஊரிலிருந்து வந்தார்களா?

**முதல் :** இல்லைப்'பா. நம்ம திருவேங்கடம் இருக்கிறானே, அவனுடையது.

இரண் : ஆமாம், அவனுக்கு என்ன இங்கே பெட்டி பேழை! அருமையான வீடு—நல்ல மாடிவீடு இருக்கிறது. பெரிய பணக்காரன் என்று சொல்கிறார்கள். உள்ளூரானுக்கு இங்கே என்ன வேலை?

முதல் : திருவேங்கடம் காரணம் இல்லாமல் இங்கே வந்து தங்குவானா?

இரண் : என்னப்பா அது? குடும்பத்தில் ஏதாவது சண்டையா? ஒரே பிள்ளை ஆயிற்றே!

முதல் : ஒரே பிள்ளையோ எத்தனை பிள்ளையோ, மனம் வேறுபட்டால் சண்டை தோன்ற எவ்வளவு நேரம் ஆகும்?

இரண் : அப்படியா செய்தி? அந்த அளவுக்கு வந்து விட்டதா கதை?

(சட்டைப் பையில் கையை விட்டுத் தேடுகிறான்.)

முதல் : என்னப்பா தேடுகிறாய்?

இரண்: தெரியாதா? எனக்குப் பிடிக்காத பொருள்தான்—

முதல் : ஓ ஓ! இதோ பார்! (புகை பிடிக்கக் கூடாது என்று எழுதிய அட்டையைக் காட்டுகின்றான்.)

இரண் : (அட்டையைப் பார்த்து) அப்படியா? இருக்கட்டும். நான் கொண்டுவர மறந்துவிட்டேன். (விட்ட காரணத்தை நினைத்துப் பார்க்கிறான்.) அதெல்லாம் என்னிடம் செல்லாது. எந்த விதிக்கும் விலக்கு உண்டு அல்லவா?

முதல் : சினிமாக்கொட்டகையிலே புகை பிடிக்கக் கூடாது என்று கடுமையான உத்தரவு போடும் காலம் இது. ஐரோப்பியர்கள் வந்தாலும் இரண்டுமணி நேரம் சிகரெட் இல்லாமல் பட்டினி இருந்துவிட்டுப் போகிறார்களே!

இரண் : எல்லாம் செய்வார்கள்! நீ என் நண்பன் தானே! ஆமாம்! இது என்ன இப்படி அட்டையில்

எழுதி மாட்டினாயே, வெட்கமாக இல்லையா? நீ ஒரு கல்லூரி மாணவனாக நடந்துகொள்ளவில்லையே!

முதல்: நான் இல்லேப்பா.

இரண்: அப்படியானால் வேறு யார்?

முதல்: திருவேங்கடம்தான்!

இரண்: வந்தது வராததற்குமுன் தொடங்கிவிட்டானா காந்தி பைத்தியத்தை! காந்திகூட இப்படி யாரையும் வற்புறுத்த மாட்டாரே!

முதல்: அவனும் வற்புறுத்தவில்லை. என்னைக் கேட்டான். சரி, செய்யலாம் என்றேன். உடனே எழுதி மாட்டிவிட்டான்.

இரண்: நீதான் கோழை! ஏன்? முடியாது என்று சொல்வதுதானே?

முதல்: அவன் யோசனை எனக்குச் சரி என்று பட்டது.

இரண்: போதும் நிறுத்தய்யா. இதெல்லாம் பைத்தியக்காரத்தனம். Practical Life - வாழ்க்கை வேறு. Ethics - நீதி வேறு. இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்க்கக் கூடாது. நாம் பரீட்சைக்குப் படிக்கிறோம்; அதனால் அறிவு வளர்கிறதா! அறிவு வளர்வதற்கு வேறே வழி தேடிக்கொள்ள வேண்டும். அதுபோல் தான் இதுவும். திருவேங்கடம் இருக்கிறானே அவன் பைத்தியக்காரன். சென்ற ஆண்டில் தமிழ் மன்றத்தில் அவன் பேசினானே, அப்போதே நான் சொல்லவில்லையா? அவன் உருப்படியாக மாட்டான் என்பது அவன் பேச்சாலேயே தெரிந்துவிட்டது. திருக்குறளும் சத்தியசோதனையும் படித்துவிட்டால், அப்படியே நடக்க வேண்டுமா, என்ன? படிக்கிறவர்கள் எல்லோரும் நடக்கிறார்களா? நமக்கு என்னப்பா தொல்லை! Eat, Live and Be Merry, உண்க வாழ்க களிக்க: இதுதான் நம்ம வேதாந்தம்.

முதல் : Eat Smoke Be Merry உண்க புகைக்க களிக்க என்று சொல்லய்யா !

இரண் : அப்படிச் சொல்லப்பா ; நம்ம கட்சியில் எப்படியோ சேர்ந்துவிட்டாயே !

முதல் : ஆனாலும் திருவேங்கடத்தின்மேல் எனக்கு என்னவோ அன்புதான்.

இரண் : அன்பு இருக்கட்டுமே ! யார் வேண்டாம் என்று சொன்னார்கள். நம்ம விடுதிக்குப் பால் கறக்கும் பசுவைப் பார்த்தாலுங்கூட நமக்கு அன்பு தோன்றவில்லையா ? அதுபோல்தான் அன்பு. ஆமாம். திருவேங்கடம் இனிமேல் இங்கேயே இருக்கப் போகிறானா ? எப்படி ? அது ஒரு தொல்லை அப்பா !

முதல் : இல்லை, இல்லை ! வார்டனைக் கேட்டுக்கொண்டு வேறே அறைக்கு ஏற்பாடு செய்துகொள்ளப் போகிறானாம்.

இரண் : தொலையட்டும். Intelligent fool. Educated idiot. ஆமாம். என்ன சண்டையாம் ?

முதல் : கேட்டால் சரியாகச் சொல்ல மாட்டேன் என்கிறான். ஆனால் அவனுடைய தெருவிலிருந்தே ஒரு பையன் வருகிறானே, கந்தசாமி என்று, அவனைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

இரண் : என்ன, என்ன ?

முதல் : அப்பா பெரிய கள்ளமார்க்கெட் பேர்வழி. அது இவனுக்குப் பிடிக்கவில்லை. அதிலேயிருந்து வளர்ந்திருக்கிறது...

இரண் : அட பைத்தியமே. சர்வம் கள்ளமார்க்கெட் மயம் ஜகத். இவனுக்கு ஏன் இந்த மூளைக் கோளாறு? இவனா செய்கிறான் ? எவனோ அப்பன் சம்பாதிக்கிறான். அந்தக் கிழம் சம்பாதித்துச் சேர்த்து வைத்துவிட்டுச் சாகட்டுமே. இவன் ஜம் என்று பிற்காலத்தில் அனுபவிக்கலாமே.

முதல் : அதுதானே திருவேங்கடத்தால் முடியாது. அவனுக்கு மனச்சாட்சி Conscience என்று ஒன்று இருக்கிறதாமே.

இரண் : அடடா ! அது என்ன பண்ணுகிறதாம் ! குடைகிறதா ?

முதல் : வேதனை பண்ணுகிறதாம்.

இரண் : வேதனை பண்ணினால் என்னிடம் உபதேசம் கேட்டுக்கொள்ளட்டும். ஒருமணிக்கு ஒரு பாக்கெட் சிகரெட்—அப்புறம் வந்தால் கேளு !

முதல் : புத்தருக்கு அசுவமேத யாகம் உபதேசம் செய்தாலும் செய்யலாம்; காந்திக்கு அணுக்குண்டு உபதேசம் செய்தாலும் செய்யலாம்; திருவேங்கடத்துக்கு இந்த உபதேசம் முடியாதப்பா !

இரண் : கேட்காவிட்டால் போகட்டும். கல்காலத்துக்குப் போகட்டும், உலோக காலத்துக்குப் போகட்டும். இந்த மனச்சான்றின் வேதனை போதாது என்றால், இரண்டு தேளையும் நாலு குளவியையும் பிடித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு தூங்கச் சொல்லு.—

முதல் : உஸ் உஸ், அதோ வருகிறான் அய்யா !

## காட்சி : 6

**இடம் முதலியன :** செங்கொழுந்து முதலியாரின் வீட்டுக் கூடம்—கட்டிலில் முதலியார் படுத்துக்கொண்டு புரண்டபடியே வாய் பிதற்றிக்கொண்டிருக்கிறார். அவருடைய மனைவி கம்பத்தில் சாய்ந்துகொண்டு கவலை தோய்ந்த முகத்தோடு சோர்ந்து நிற்கிறார். டாக்டர், முதலியாரைச் சோதனை செய்கிறார். கடிகாரம் காலை 8-30 மணி காட்டுகிறது.

**டாக்டர் :** இன்று இரவும் தூக்கமே இல்லையா'மா ?

**மாணிக் :** இல்லைங்க. இராத்திரியெல்லாம் எங்களையும் தூங்கவே விடவில்லை. எழுந்து எழுந்து அலறுகிறார்.

**டாக்டர் :** என்ன சொல்கிறார் ?

**மாணிக் :** என்னென்னவோ சொல்கிறார். அதோ பாருங்கள்.

(செங்கொழுந்து முதலியார் கட்டிலில் படுத்தபடியே புரண்டு புரண்டு—' மோசம் பண்ணுதேடா. டே பையா ! உன்னை நம்பினேனே ! இல்லைங்க சார்—பொய்யில்லைங்க. சத்தியமா சொல்றேனுங்க—)

**டாக்டர் :** என்ன'ங்க முதலியார் !

(நோயாளி டாக்டரை உற்றுப் பார்க்கிறார். உடனே, " அந்த லாரி எனது இல்லைங்க. டிரைவர் பொய் சொல்றானுங்க " என்கிறார். மறுபடியும் புரள்கிறார்.)

(யாரோ வருகிற சப்தம் கேட்கிறது—மாணிக்கவல்லியின் முகத்தில் பயம் தோன்றுகிறது. ஒருவர் உள்ளே நுழைகிறார்.)

**வந்தவர் :** டாக்டர் ! கொஞ்சம் இப்படியே எங்கள் வீட்டுக்கு வந்து போக'ணும்.

**டாக்டர் :** வருகிறேன் இன்னும் பத்து நிமிஷத்தில்.

**வந்தவர் :** முதலியார் எப்படி இருக்கிறாரம்மா ?

**மாணிக் :** அப்படியேதான் இருக்கிறார்.

டாக்டர் : அவருக்கு என்ன'ங்க! வெறுங் காய்ச்சல். வெளியூர் அலைச்சலால் வந்தது. இன்னும் இரண்டு வேளை ஊசி போட்டால் சரியாய்ப் போய்விடும். சரி. நீங்கள் போயிருங்கள். நான் வந்துவிடுவேன். போய் வா'ங்க. எனக்கு வழி தெரியும். போங்கள்.

வந்தவர் : சரி, வருகிறேனுங்க. (போய்விடுகிறார்.)

டாக்டர் : அம்மா! யாராவது கேட்டால் 'சுமாராக இருக்கிறார்' என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால், ஊரெல்லாம் இதே பேச்சாகிவிடுகிறது. நான் வைத்தியம் செய்வதும் அல்லாமல், இவருக்காக வாதாட வேண்டியிருக்கிறது. தலைபோகிற நிலைமையாக முற்றிப் போயிருக்கும். பெரிய மனிதர், தான தருமம் செய்கிறவர், நல்லவர் என்றெல்லாம் சொல்லி வழக்குக்கு இடமில்லாமல் செய்துவருகிறேன். அவர் நம் நினைவோடு இருந்தால் சொன்னபடி செய்வார். அது வேறே இடையூறு. இப்போது நீங்கள்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். ஐயாயிரம் கையிலிருந்தால் வழக்கே இல்லாமல் செய்து விடலாம். இல்லாவிட்டால், இவருக்கு உடம்பு தேறிப் பழைய நினைவு வந்த பிறகு, வழக்குத் தொடங்கிவிட்டால், பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும்.

மாணிக் : ஐயோ, தெய்வமே! என் தலைவிதியா?

டாக்டர் : இதென்ன'மா இது. அக்கம் பக்கம் தெரிந்தால் தொல்லை. என் பேரும் கெடும். உங்கள் விருப்பம். நான் போகிறேன்.

மாணிக் : பணத்துக்காகச் சொல்லவில்லைங்க. என் நகையை விற்றுவது கொடுக்கிறேன். அவர் நல்லபடி இருக்க'ணுமே!

டாக்டர் : நீங்கள் பேசாமல் இருங்கள். உங்கள் பையன் வீட்டை விட்டுப் போனது வேறே தவறு. அதைப் பற்றித் தப்பாகச் சொல்லித் தூற்றிவிடுவார்கள்.

(செங்கொழுந்து முதலியார் மறுபடியும் புரண்டு வாய்பிதற்று கிறார். அவர் சொல்வது சரியாகக் கேட்கவில்லை. மறுபடி யும் வாய்பிதற்றுகிறார். டாக்டர் உற்றுக் கேட்கிறார்.)

செங் : இனிமேல் இந்தத் தொல்லைக்கே போவதில்லைங்க. இப்போது மட்டும் எப்படியாவது என்னைக் காப்பாற் றிடுங்க. காலில் விழுந்து கேட்டுக்கொள்'றேனுங்க. (என்று வாய்பிதற்றிக்கொண்டே இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு கட்டிலிலிருந்து புரண்டு கீழே விழத் தொடங்குகிறார். டாக்டர் அவரைத் தாங்கிக்கொண்டு தடுக் கிறார்.)

மாணிக் : பார்த்தீர்களா ? இரவெல்லாம் இதே தொல் லைங்க.

டாக்டர் : ஆமாம் அம்மா, இருக்கும், இருக்கும். மனச் சான்று இல்லாதவர்கள், கல்மனம் உடையவர்கள் திரு டும் தீங்கும் செய்து செய்து பழகிவிடுவார்கள். இவ ரைப் போல் நல்லவர்கள் செய்தால் அகப்பட்டுக் கொள்கிறார்கள். என்ன செய்யலாம் ? ஒன்றும் பய மில்லை. நீங்கள் தைரியமாக இருங்கள். கவலைப்படா தீர்கள். ஆனால் இந்தச் சமயத்தில் பையன் வீட்டை விட்டுப் போனதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

மாணிக் : அவனை என்ன செய்வது ? என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறான். வேலைக்காரனிடம் சொல்லியனுப்பிய பிறகு வந்தான். சொல்லிச் சொல்லிப் பார்த்தேன், கண்ணீர் விடுகிறான். வருந்து கிறான். அப்பாவைப் பார்த்து அழுகிறான். ஆனால் இனிமேல் வீட்டில் சாப்பிடமாட்டேன், விடுதியில் தான் இருந்து படிப்பேன் என்கிறான். என் கையில் இருந்த இருநூறு ரூபாயை எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். வேளை வேளைக்கு வந்து தைரியம் சொல்கிறான். மருந்து வார்த்துக் கொடுக்கிறான்.

தைலம் போட்டுத் தேய்க்கிறான். எல்லா உதவியும் செய்கிறான்.

டாக்டர் : சரி, மெல்ல மெல்ல வந்து சாப்பிடுவான், அவனையும் பகையாக்கிக்கொள்ளக்கூடாது.

மாணிக் : என்ன'ங்க! அப்படிச் சொல்கிறீர்களே. பெற்ற பிள்ளையைப் பகையாக்கிக்கொள்வோமா?

டாக்டர் : கம்பவுண்டரை அனுப்புவேன். ஊசிக்கு வேறே மருந்து வேண்டும். உள்ளுக்கு மருந்தும் கொடுத்தனுப்புவேன். வரட்டுமா அம்மா! வருகிறேன்.

மாணிக் : போய்'வாங்க. எப்படியாவது காப்பாற்றுங்கள்.

(கைகுவித்து விடை தருகிறார்.)

## காட்சி : 7

**இடம் முதலியன :** பூங்கா—மாலை 6-30 மணி—திருவேங்கடம் உட்கார்ந்திருக்கிறான். அவன் எதிரில் அவனுடைய நண்பன் நின்றபடி பேசுகிறான்.

**நண்பன் :** அப்படியானால்—?

**திருவேங் :** இந்தப் பேச்சே வேண்டாம். இதில் நீ தலையிட வேண்டியதில்லை, சொல்கிறேன், கேள். நம்முடைய நட்பு வேறு, இது வேறு. என்னுடைய பெற்றோர் தவறு செய்வார்களானால், அதைத் திருத்த எனக்கு உரிமை இல்லையா ?

**நண்பன் :** உரிமை இல்லை என்று யார் சொன்னார்கள் ! உரிமையைத் தவறாகப் பயன்படுத்தவேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

**திருவேங் :** (தரையை உற்றுப் பார்த்தபடியே) தவறு என்ன, தவறு! குற்றத்தை எடுத்துக்காட்டுவது ஒருகுற்றமா ?

**நண்பன் :** குற்றத்தை எடுத்துக்காட்டுவதற்கும் குறை கூறுவதற்கும் ஒரு பட்டதாரி வேண்டியதில்லை ; ஒரு கல்லூரி மாணவன் வேண்டியதில்லை ; ஒரு காந்தி யன்பர் வேண்டியதில்லை. தெருவில் போகின்றவர் அந்த வேலையைச் செய்ய முடியும். குற்றத்தை எடுத்துக் காட்டினால் போதுமா? திருத்துவதற்கு முயற்சியும் செய்ய வேண்டும். என்னவோ, நேராக வீட்டைவிட்டு மூட்டையைச் சுருட்டிக்கொண்டு விடுதிக்கு வந்துவிட்டாயே. இதுதான் காந்தி நெறியா ? மனைவி மக்களை விட்டுவிட்டுக் கமண்டலத்தை எடுத்துக்கொண்டு பழங்காலத்தில் காட்டுக்கு ஓடிப்போய் விடுவார்களாம் சில ஆசாமிகள். அந்தக் கதையாக இருக்கிறதே, இது !

**திரு :** (பெருமூச்சு, அமைதி)

**நண்பன் :** அப்படி ஓடிப்போக வேண்டும் என்று உங்கள் காந்தி சொல்லவில்லையா ?

**திரு :** உங்கள் காந்தி ! உங்கள் காந்தி ?

நண்பன் : (தோள்மேல் கைவைத்து) இதற்கெல்லாம் கோபித் துக்கொள்ளாதே'ப்பா. சும்மா சொன்னேன். நம் காந்திதான். போகட்டும். பகைவரையும் திருத்த வேண்டும் என்பதுதான் காந்தி நெறி, திருவள்ளுவர் நெறி. உன்னைப் போல், பெற்றோரையும் பகைவராக் கிக்கொள்வது காந்திநெறி ஆகுமா?

திரு : உனக்கு ஒன்றும் தெரியாது, சும்மா இரு'ப்பா. மனச் சான்று என்பது இல்லாத ஆள் நீ. உனக்குத்தெரியாது.

நண்பன் : சரி. அப்படியே இருக்கட்டும். ஒத்துக்கொள் கிறேன். நான் மனச்சான்று இல்லாதவன்தான். இருக் கட்டும். ஆனால் ஒன்று கேட்கிறேன். நீ யாரை ஆதரிக்கிறாய்? மனச்சான்று அடியோடு இல்லாதவர் களையா? அரைகுறையாகவாவது மனச்சான்று கொஞ்சம் உடையவர்களையா?

(திருவேங்கடம் பேசாமலிருக்கிறான்)

சரி. என்னோடு பேசவும் உனக்கு விருப்பம் இல்லை என்று தெரிகிறது. நான் புறப்படுகிறேன். ஆனால் போவதற்குமுன் ஒன்றுமட்டும் சொல்லிவிட்டுப் போகிறேன். நான் போன பிறகு எண்ணிப்பார். என் பேச்சு, பைத்தியக்காரத்தனமாக இருந்தால் விட்டு விடு. ஆனாலும் சொல்லிவிட்டுப் போகிறேன். நீ உன் தகப்பனார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடப் பதை அடிக்கடி போய்ப் பார்க்கிறாய். தாயின் கண் ணீரைப் பார்த்து நீயும் கண்ணீர் விடுகிறாய். அதெல் லாம் சரி. ஆனால், வெந்த புண்ணில் வேல் எறிவது போல், துன்பப்படுகிறவர்களை மேலும் மேலும் துன்பப் படுத்துகிறாய் என்பதை மறக்காதே. நீ வீட்டைவிட்டு விடுதிக்கு வந்தது தப்பு. அதனால் பலர் பலவாறு உன் குடும்பத்தாரைப் பற்றிப் பேசுகிறார்கள். பெற்றோர் கள் அதை நினைத்து நினைத்து மனம் வருந்துகிறார்கள். நீ செய்ய வேண்டிய சீர்திருத்தத்தைக் குடும்பத்தில் உள்ளிருந்தே செய்திருந்தால், இந்த நிலைமை ஏற்பட்

டிருக்காது. தகப்பனுருக்கும் இந்த அரைப்பைத்தியம் பிடித்திருக்காது. அப்பா திருவேங்கடம்! நான் கேட்கிறேன். மனச்சான்று உனக்கு மட்டும் கடவுள் கொடுத்த சரக்கு என்று நினைக்கிருயா? உன் தகப்பனுர்க்கும் அது இருக்கிறது. மனச்சான்று இருப்பதால்தான் அவர் இந்த நிலைக்கு ஆளானுர்; நோய்வாய்ப்பட்டார்; அறிவு கலங்கி வருந்துகிறுர், வாய்பிதற்றுகிறுர். மனச்சான்று இல்லாத ஆளாக இருந்தால், அவர் என்ன செய்திருப்பார், தெரியுமா? கவலை இல்லாமல் கேளிக்கைகளுக்குப் போய் எந்த வகையிலாவது உன் கவலையை மறந்துவிட்டிருப்பார். திருக்குறள் முதலான உயர்ந்த நூல்களைப் படித்து விட்டு, எத்தனையோ பேர் அருமையாகக் கள்ள வியாபாரம் செய்து காலத்தைக் கழிக்கவில்லையா? மேலும் மேலும் இன்ப வாழ்க்கைக்கு வழிதேடிக் கொண்டு பிறருடைய துன்பத்தை எள்ளளவும் எண்ணிப்பார்க்காமல் பொழுது போக்கவில்லையா? அவர்களைப் போல் உன் தகப்பனுர் வாழ முடியவில்லை என்பதை எண்ணிப்பார் அப்பா. காரணத்தையும் எண்ணிப்பார் அப்பா. மற்றவர்களுக்கு மனச்சான்று அடியோடு மரத்துவிட்டது. உன் தகப்பனுருக்கு அது இன்னும் மரத்துப்போகாமல் இருக்கிறது. அதன்பயன் தான் இப்போது அவர்படும் துன்பம்! நீ என்ன செய் கிருய் தெரியுமா? அவரை முழுப்பைத்தியமாக்கி அல்லல்பட வைக்கப்போகிருய். அல்லது அவருடைய மனச்சான்றும் மழுங்கிப் போகும்படி செய்கிருய். சரி! இனிமேல் உன்னிடம் பேச்சு இல்லை. வருகிறேன்.

(நண்பன் உடனே திரும்பிப் பார்க்காமல் நடந்துசெல்கின்றுன். திருவேங்கடம் அவன் போவதைப் பார்த்தபடியே பெருமூச்சு விட்டு எழுந்து இங்கும் அங்குமாக நடக்கிறுன். நிற்கிறுன்.)

தூரல்: ஆமாம்! உண்மைதான்! இந்த உலகத்தில் உள்ள முழு அயோக்கியர்களைப் பற்றி நீ கவலைப்படவே

இல்லை. அவர்களைக் குற்றம்கூற ஆண்மை இல்லாமல் கோழையாக அடங்கியிருக்கிறாய். ஆனால் சிறிதளவு குற்றம் செய்கிறவர்களை - ஒருபங்கு அயோக்கிய வாழ்க்கை வாழ்கிறவர்களை - அடியோடு வெறுக்கிறாய்; பழிக்கிறாய்; துன்பத்துக்கு ஆளாக்குகிறாய். நச்சுப் பாம்பைப் பார்த்து ஒதுங்கிச் செல்கிறாய். நல்ல நீர்ப் பாம்பைப் பார்த்துக் கல்எறிகிறாய். கோழைத்தன்மை; வடிகட்டின கோழைத்தன்மை! உன் தகப்பனார் மற்றவர்களைவிட எவ்வளவோ நல்லவர்! அவருடைய வாழ்க்கை கெடுகிறது; கெடுவதற்கு நீதான் காரணம். திருத்த முடியாதபோது கெடுக்க முயல்வது குற்றம். கல்லைச் சிற்பமாக்க வேண்டியது உன் கடமை. ஆனால் சிற்பமாக்கத்தெரியாத உனக்குக் கல்லை உடைத்தெறிய உரிமை உண்டா? (சிறிது அமைதி - திகைப்பு - கலக்கம்.)

உன்னைப் பெற்று வளர்த்து, உனக்காகவே பொருளும் சேர்த்து, தியாகம் செய்துள்ள தந்தையார் அரைப் பைத்தியமாய் அலறுகிறார். நீ காந்தி நெறியில் வாழும் தொண்டன் என்று உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாய். ஆக்கவேலையா செய்கிறாய்? அழிவு, அழிவு வேலை, குடும்பத்தை அழிக்கும் வேலை செய்து விட்டு இங்கே இந்தப் பூங்காவில் திரிகிறாய்.

**திரு:** உணர்ந்தேன். உணர்ந்துவிட்டேன். ஆனால்—! மனச் சான்று! நல்ல மனச்சான்று! அன்று அது என்னை வீட்டைவிட்டு விடுதிக்குப் போகும்படி துரத்தியது. இன்று மறுபடியும் வீட்டிற்கே போகும்படி தூண்டு கிறது! என் செயல் எனக்கே வெட்கமாக இருக்கிறது.

**நூல்:** இதோ இந்த முல்லைக்கொடி உன்னைப் பார்த்துக் கேலி செய்வது போல் சிரிக்கிறது. அதோ அந்தச் சிட் டுக்குருவிகளும் உன்னை எள்ளி நகையாடிக் குதிக்கின் றன. இதோ இந்த மரங்களும் உன்னைப் பார்த்து உள் ளுக்குள் சிரித்துத் தலையசைக்கின்றன. (அவற்றைப்

பார்த்தபடியே அசைவற்ற நிலையில் திருவேங்கடம் பேசாமல் நிற்கிருன் - அப்போது எதிர்பாராதபடி வேலையாள் பிரகஸ்பதி ஓடிவந்து எதிரே நின்று.)

பிர : அப்பா ! அப்பா !

திரு : என்னடா ! நீ எங்கே'டா வந்தாய் !

பிர : அம்மா சொல்லி அனுப்பினர்கள். காலேஜு ஆஸ்டல் எல்லாம் போய்ப் பார்த்தேன். வீட்டுக்குப் போய் என்ன சொல்வது என்று தெரியாமல் திரும்பி னேன். அங்கே இருந்து பார்த்தபோது உன் தலை மாதிரி தெரிந்தது'ப்பா.

திரு : சரி. அது இருக்கட்டும். அம்மா என்ன சொல்லி அனுப்பினர்கள் ?

பிர : சொல்லி அனுப்பினர்கள் அப்பா !

திரு : என்ன சொன்னர்கள் ?

பிர : உன்னை—.

திரு : என்னை—?

பிர : அம்மா—.

திரு : சொல்லு—.

பிர : கையோடு அழைத்துக்கொண்டு வரச்சொன்னர்கள்.

திரு : அப்பா எப்படி இருக்கிருர் ?

பிர : அப்பாகூட உங்களைக் கேட்டாரு'ப்பா. நேற்றுப் போல் இல்லை இன்றைக்கு. இன்றைக்கு நல்லா' பேசி னரு. உன்னைப் பற்றி அடிக்கடி பேசினரு'ப்பா.

திரு : என்ன'டா பேசினர் ?

பிர : பையன் சொல்கிறபடியே செய்யலாம். பையன் சொல்வதுதான் சரி. தேனை ஒட்டித் தெருவில் புரண் டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும் என்று சொன்னரு. அப்புறம்—. வீண் ஆசை கூடாது, இனிமேல் உண் மைக்குப் பாடுபட'ணும் என்று சொன்னரப்பா. நேரம் ஆச்சு, வாங்க'ப்பா போகலாம்.

திரு : (முகத்தில் ஒரு சிறு மலர்ச்சி)—சரி. (சொல்லிக்கொண்டே நடத்தல்.)

# இம்பளம்

## காட்சி : 1

இடம் : சென்னை, அமைந்தகரையில் ஒரு வீட்டு வாயில்.

காலம் : மாலை 6 மணி.

மாந்தர் : அறுபது வயதுள்ள கந்தன், வெளியூர் வியாபாரிகள் இருவர்.

கந்தன் : நீங்கள் எல்லாம் யாரு? எங்கே இருந்து வந்தீர்கள்?

வந்தவர்களில் முதல் ஆள் : சிவில் சப்ளைஸ் ஆபீஸ் முத்துச்சாமி இங்கேதான் இருக்கிறாரா?

கந்தன் : ஆமாம் நீங்கள் யாரு? என்ன வேலையாக வந்தீர்கள்?

இரண்டாம் ஆள் : அவரிடத்தில்தான் வேலையாக வந்தோம்.

முதல் : வெளியே போயிருக்கிறாரா? எப்போது வருவார்?

கந்தன் : எப்போது வருவானோ, தெரியாது. நான் அவனுடைய அப்பாதான்.

முதல் : அப்படிங்களா? (முகத்தில் மகிழ்ச்சியோடு இரண்டாம் ஆளைப் பார்க்கிறார்; கண்சாடை செய்கிறார்.)

கந்தன் : என்ன வேலையாக வந்தீர்கள்? பையன் உங்களுக்கு எப்படிப் பழக்கம்?

இரண் : பழக்கம் இல்லைங்க. ஆபீஸ் வேலையாக வந்தோம்.

முதல் : ஆபீசில் பார்த்துப் பேச நேரம் இல்லே. அதனல் இங்கே வீட்டுக்கு வந்தால் ஓய்வாகப் பேசலாம் என்று—.

கந்தன் : அப்படியா ? இருங்கள் ; கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவான்.

முதல் ஆள் : உங்கள் சொந்த ஊரே இதுதானு ?

கந்தன் : இல்லே'ங்க. எங்கள் சொந்த ஊர் சித்தூர் ஜில்லாவில் வள்ளிமலே என்று இருக்கிறது, அதுதான்.

முதல் ஆள் : உங்கள் பேர் என்ன'ங்க ?

கந்தன் : கந்தன் என்று பேருங்க.

முதல் ஆள் : நீங்கள் படிக்காவிட்டாலும் உங்கள் மகனே யாவது படிக்க வைத்தீர்களே. அதுதான் நல்லது.

கந்தன் : அய்யோ ! அதற்கு எவ்வளவு பாடு பட்டேன் ! வள்ளிமலேயில் நாலு காணி புன்செயும் மூன்று காணி நன்செயும் என் பங்குக்கு வந்த சொத்து இருந்தது. பையனே எப்படியாவது பி. ஏ. படிக்க வைக்க வேண்டும் என்று கடன் வாங்கிப் படிக்க வைத்தேன். பட்ட கடனுக்குச் சொத்து எல்லாம் போய்விட்டது. இப்போது கால்காணியும் எங்களுக்கு என்று இல்லே. பையன் படித்து வேலேக்குப் போனுன், அதுதான் மிச்சம்.

இரண்டாம் ஆள் : போனுல் போகட்டும். உங்கள் பிள்ளே படித்து உத்தியோகத்துக்குப் போனுரே, அதுவே போதும் ; அதுவே உங்களுக்குச் சொத்து. அவர் மனம் வைத்தால் சம்பாதித்துக்கொள்ளலாம்.

கந்தன் : எங்கே போங்க ! நானும் இந்த வயசிலே எவ்வளவோ பார்த்திருக்கிறேன். அவனுக்குப் பஞ்சப்படி இந்தப்படி அந்தப்படி எல்லாம் சேர்த்து வருவது மாதம் நூற்று இருபத்து மூன்று ரூபாய். இதிலே வீட்டு வாடகை, பால்கடன், தயிர்க்கடன், மருந்துச் செலவு எல்லாம் கொடுத்து, பாதியும் மீதியாவதில்லே.

அந்தப் பாதியில் மாதம் முப்பதுநாளும் அரிசிவாங்கி, புளி மிளகாய் வாங்கிச் சாப்பிடவே போதவில்லை. என்ன படித்தும் பயன் இல்லை. சம்பளம் வாங்கி என் கையில்தான் கொண்டுவந்து கொடுக்கிறான். ஆனாலும் என்ன பயன்? இதோ பாருங்க. நானும் இந்த வயசிலே. (பொடி டப்பியை மடியிலிருந்து எடுத்துக் காட்டி) டப்பியில் பொடி இல்லை; வாங்கலாம் என்றால் கையில் காசு இல்லை.

**முதல் ஆள் :** (தன் சட்டைப்பையிலிருந்து பொடி டப்பி எடுத்து) இதோ, இந்தா'ங்க. போட்டுக்கொள்ளுங்க.

**கந்தன் :** இருக்கட்டும், இருக்கட்டுங்க.

**முதல் ஆள் :** (அதை நீட்டியபடியே) சும்மா எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் டப்பியை இப்படிக் கொடுங்கள்.

**கந்தன் :** வேண்டாம், வேண்டா'ங்க.

**இரண்டாம் ஆள் :** சும்மா, இருக்கட்டுங்க.

**முதல் ஆள் :** நாங்கள் கடைத்தெரு வழியாகப் போகப் போகிறோம். அங்கே வாங்கிக்கொள்கிறோம். (டப்பி நிறையப் போட்டு அடைத்துக் கந்தனிடம் தருதல்.)

**கந்தன் :** (முகமலர்ச்சியோடு, ஒரு சிட்டிகைப் பொடி போட்டுக் கொண்டு) என்ன வேலையாக வந்தீர்கள்?

**முதல் ஆள் :** நாங்கள் வெளியூரிலே வியாபாரம் செய்கிறவர்கள்.

**இரண்டாம் ஆள் :** திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் பிள்ளையிடத்தில்தான் ஒரு சின்ன உதவி ஆகவேண்டும். அதை ஆபீசில் சொல்லிக்கொள்ளலாம் என்றால், அங்கே அவர் யாரையும் நெருங்க விடுவதில்லை என்று சொன்னார்கள்.

**முதல் ஆள் :** அதனால்தான் இங்கே வந்து வீட்டில் பேசலாம் என்று—.

**கந்தன் :** அவன் ஒருமாதிரி ஆள். யாரிடத்தில் எப்படிப் பழகுவது என்று தெரியாது.

முதல் ஆள் : நீங்கள் கொஞ்சம் சொன்னல் நன்ருக இருக்கும். உங்களுக்கும் ஏதாவது உதவி செய்கிருேம். மறக்கமாட்டோம்.

இரண்டாம் ஆள் : அவரைப் போல் ஆபீசில் உள்ளவர்கள் மற்றவர்கள் எவ்வளவோ செய்கிருர்கள். அவரும் மனம் வைத்தால் செய்யமுடியும். அதனல் அவருக்கும் நல்லது. இந்தக் காலத்தில் சம்பளத்தை மட்டும் நம்பிப் பிழைக்க முடியாது. வேறு ஏதாவது வந்தால் தான் குடும்பம் வாழ முடியும்.

முதல் ஆள் : எங்களுக்கு இது எவ்வளவோ பழக்கம். எங்களுக்கு நூறு ரூபாய் வருவதாக இருந்தால், அதில் இருபது முப்பது கொடுத்தால், அதனல் நஷ்டம் இல்லை. எல்லாரும் செய்யும்போது, இவர் ஏன் செய்யக் கூடாது ?

கந்தன் : நீங்கள் சொல்வது நல்லதுதான். ஆனல் சம்பளம் தவிர ஒரு பைசாவும் வாங்கத் திறமை இல்லாத பையஞக இருக்கிருன். என்ன செய்வது ?

முதல் ஆள் : என்ன'ங்க ! இந்தக் காலத்தில் கையெழுத்துப்போட்டு வாங்கும் சம்பளம் நூறுரூபாய் என்ருல், கிம்பளமாக முந்நூறு நானூறு வாங்குகிருர்கள். எங்கள் கையாலேயே நாங்கள் எவ்வளவோ கொடுத்திருக்கிருேம். எத்தனையோ பெரிய பெரிய ஆபீசர்கள் ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் வாங்குகிறவர்கள் எல்லாரும் கை நிறைய வாங்குகிருர்கள். இல்லாத ஏழைகள் வாங்கினல் தப்பு என்ன ?

இரண்டாம் ஆள் : ஆபீசில் சொன்னர்கள். இவர் காலணவும் கைநீட்டி வாங்கமாட்டார் என்று சொன்னர்கள். அதனல்தான் பழமாவது வாங்கிக்கொண்டு போய்ப் பார்க்கலாம்என்று வீட்டுக்கு வந்தோம். (பழக்கூடையை அவர் முன்னே வைத்து) நீங்களும் சொன்னல்—.

கந்தன் : சொல்கிறேன், ஆனல்—.

முதல் ஆள் : நாங்கள் வழக்கமாக மற்றவர்களுக்குக்கொடுப்பதுபோல் உங்களுக்கும் கொடுக்கிறோம். அதை எப்படியாவது சொல்லி, அவரிடம் சேர்த்துவிட்டால்—.

கந்தன் : நல்லதுதான். ஆனால்—.

முதல் ஆள் : எப்படியாவது—. (பத்து ரூபாய் நோட்டுகள் பத்து ஒரு கவரில் வைத்து) நூறு இருக்கிறது. அடுத்த வாரம் வரும்போது இன்னொரு நூறு கொடுத்துவிடுகிறோம்.

இரண்டாம் ஆள் : அதற்குள் எங்களுக்கு அனுகூலமாக உத்தரவு போட்டு வைத்தால் போதும்.

முதல் ஆள் : (ஒரு காகிதத் துண்டில் பெயரும் ஊரும் விண்ணப்ப எண்ணும் எழுதிக் கந்தன் கையில் கொடுத்து) இதை அவரிடம் கொடுத்தால் அவரே எல்லாம் தெரிந்துகொள்வார். நீங்கள் எங்களுக்காக ஒருசொல் சொல்லுங்கள், போதும்.

கந்தன் : எல்லாம் சரிதான். ஆனால்—.

இரண்டாம் ஆள் : அதெல்லாம் ஒன்றும் யோசிக்காதீர்கள். எங்கேயும் நடப்பதுதான்.

கந்தன் : பையன் ஒரு மாதிரி. பழக்கம் இல்லாதவன்.

முதல் ஆள் : நீங்கள் சொன்னால்—.

இரண்டாம் ஆள் : நாங்கள் வரட்டுங்களா ? அடுத்தவாரம் வருவதாகச் சொல்லுங்கள். (கை கூப்புதல், திரும்புதல்)

முதல் ஆள் : வருகிறோம். வணக்கம். தயவு இருக்கட்டுங்க.

## காட்சி : 2

**இடம் :** கடற்கரை.

**காலம் :** மாலை 7 மணி.

**மாந்தர் :** முத்துச்சாமி, திருமலை. (இருவரும் நண்பர்கள், உடன்படித்தவர்கள்)

**முத்துச்சாமி :** என்ன கொடுமை அய்யா! முதல் வகுப்பில் பி. ஏ. பரீட்சையில் தேறினேன். இந்தக் கிளார்க் வேலையில் 120 ரூபாய்க்குக் கரணம் போடுகிறேன். ஆனால் என்னோடு படிக்க முடியாமல் படித்து, எழுத முடியாமல் எழுதி மூன்றும் வகுப்பில் எப்படியோ தேறிய தங்கய்யா ஆபீசர் ஆகிவிட்டான். இப்போது ஐநூறு ரூபாய்ச் சம்பளம் வாங்குகிறான்.

**திருமலை :** ஆமாம். அதற்கு என்ன செய்யலாம்?

**முத்து :** ஒன்றும் செய்யப் போவதில்லை. நினைத்துப் பார்த்தேன்; வயிற்றெரிச்சலாக இருக்கிறது.

**திருமலை :** உன் வயிற்றெரிச்சல் உனக்குத்தான் கெடுதி. அது அவர்களை ஒன்றும் செய்யாது. நீ 120 ரூபாயிலிருந்து 150 ரூபாய்க்குப் போவதற்குள், தங்கய்யாவின் சம்பளம் 500 ரூபாயிலிருந்து ஆயிரத்துக்குப் போய்விடும், தெரியுமா?

**முத்து :** தெரியும் அப்பா, தெரியும். தெரிந்துதான் பேசுகிறேன், பேசாமல் வேறே என்ன செய்வது?

**திருமலை :** ஏன் இப்படி வயிற்றெரிச்சல் படவேண்டும்? உனக்கும் பெரிய இடத்துச் சிபாரிசுகள் இருந்தால் நாளைக்கு ஆபீசர் வேலை கிடைக்கும். சிபாரிசுக்கு வழி இருக்கிறதா? சொல்.

முத்து : எனக்கா ? நான்தான் எங்கள் ஊரிலேயே முதல் முதல் படித்துப் பட்டம் பெற்றவன். ஏழைக் கிராமத்தான். எனக்கு யார் தெரியும் ?

திருமலே : உனக்குத்தான் பணத்தைப் பற்றிக் கவலேயே இல்லேயே. யார் எவ்வளவு சம்பளம் வாங்கினுல் உனக்கு என்ன ?

முத்து : எனக்கு யார்மேலும் பொருமை இல்லே. உள்ள படி சொல்கிறேன். இதோ பார். (சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டல்). தேதி 20 தான் ஆகிறது. கையில் காலணு இல்லே. கடிதம் இப்படி வருகிறது. என்ன செய்வது ?

திருமலே : (கடிதத்தை வாங்காமல்) இருக்கட்டும், என்ன செய்தி ? சொல்லப்பா.

முத்து : சும்மா படி அய்யா. நானுகக் கொடுக்கும்போது படித்தால் தப்பு அல்ல ; படி.

திருமலே : (கையில் வாங்கிப் படித்தல்)

நூல் : அன்புள்ள தம்பிக்கு அக்கா எழுதியது :

நலம். இவ்விடம் யாவரும் நலமாக இருக்கிறேம். அம்மா அப்பா நலத்தையும் உன் நலத்தையும் தெரிவிக்கவும். இவ்விடம் எங்கள் துன்பம் சொல்ல முடியாது. இறைப்புக்கு உதவியாக இருந்த கருப்பு எருது கோமாரி வந்து இறந்துவிட்டது. வேறு எருது வாங்கலாம் என்ருல் கையில் காசு இல்லே. நிலத்தை அடமானம் வைத்துவிட்டபடியால், இனிமேல் கடன் கொடுக்க ஆள் இல்லே. ஒரு ரூபாய் கடன் கேட்டாலும் யாரும் கொடுக்கவில்லே. எருது வாங்காமலிருந்தாலோ, நீர் இல்லாமல் பயிர் வாடிப்போய்விடும். போட்ட விதையும் வராது. அப்புறம் தலேயெடுக்கவே முடியாது. பெரிய பையன் நான்காவது வகுப்புக்குப் போயிருக்கிருன். இன்னும் புத்தகம் வாங்கவில்லே. கையில் காசு இல்லே. புத்தகம் இல்லாமல் பள்ளிக்

கூடம் வரக்கூடாது என்கிறார் வாத்தியார். அவனுக்குக் கிழியாத சொக்காய் ஒன்றும் இல்லை. சின்ன பையனுக்கு அடிக்கடி காய்ச்சல் வருகிறது. ஊசி போட வேண்டும் என்றும், பணம் கொடுத்தால்தான் மருந்து வாங்கிப் போட முடியும் என்றும் டாக்டர் சொல்கிறார். இன்னும் மிகுதியாக எழுதி உனக்குக் கவலை உண்டாக்க மனம் இல்லை. எங்கள் வாழ்க்கை நரக வேதனையாக இருக்கிறது. எப்படியாவது எங்களுக்குப் பணம் அனுப்பினால்தான் நாங்கள் பிழைக்க முடியும். என்ன செய்வது? எங்கள் நிலைமை அப்படி இருக்கிறது. இப்படிக்குத் தமக்கை அலர்மேலு.

திருமலை : (கடிதத்தை முத்துச்சாமியிடம் திருப்பிக் கொடுத்து) படிக்கவே முடியவில்லை அப்பா.

முத்து : இந்தக் கடிதத்தைப் படித்துச் சொல்லிவிட்டால் போதும். அப்பாவும் அம்மாவும் சாப்பிடவே மாட்டார்கள்; அதே கவலையாகக் குன்றி உட்கார்ந்துவிடுவார்கள். உதவி செய்யவோ வழி இல்லை. இன்றைக்குக் காலையில் காய் வாங்குவதற்காகக் காசு இல்லாமல் மிளகுக்குழம்பு வைக்கும்படியாக அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தேன். என்ன வாழ்க்கை, சனியன்!

திருமலை : கலியாணம் செய்துகொள்வதற்கு முன்னமே இப்படிச் சலித்துப்போனால்—!

முத்து : அப்பா’டா, அது ஒன்றுதான் குறைச்சல்! இந்த உப்பு மிளகாய்க் கவலை தீர்வதற்குமுன் கலியாணம் செய்துகொள்கிறவன்தான் வடிகட்டிய மடையன்.

திருமலை : எவனோ சொன்னானாம்; இந்தக் கடலில் அலை அடங்குவதற்குமுன் குளிக்கப் போகிறவன்தான் பொறுக்கி எடுத்த முட்டாள் என்று அப்படித்தான் இதுவும்.—

முத்து : வீட்டில் எந்நேரமும் அந்தக் கிழவியும் கிழவனும் வருவார் போவாரிடத்தில் என் கலியாணத்தைப்

பற்றிப் பேசுகிறார்கள். அதுபோல்தான் உன் பேச்சும் இருக்கிறது.

திருமலை : அப்பா'டா ! நான்சொல்லியா நீ கேட்கப் போகிறாய் ? எங்காவது உண்டா ?

மூத்து : அது கிடக்கட்டும் ; இதற்கு வழி சொல். (கடிதத்தைச் சுட்டிக் காட்டுகிறான்.)

திருமலை : வேண்டுமானால் நான் ஐம்பது ரூபாய் கடன் தருகிறேன், அனுப்பு.

மூத்து : கடன் வாங்கி அனுப்பிவிடுகிறேன். அப்புறம் அந்தக் கடனை எப்படித் தீர்ப்பது ?

திருமலை : அதற்கு என்ன வழி ? சம்பளம் போதாது.

மூத்து : என்ன சிக்கனம் செய்தாலும் பலிக்கவில்லையே. வீட்டுவாடகையைக் குறைப்பதா ? சத்து இல்லாத சாப்பாட்டுச் செலவைக் குறைப்பதா ? அழகு இல்லாத ஆடைச் செலவைக் குறைப்பதா ? ஒரே வழி ; நானும் என் அப்பா அம்மாவை அழைத்துக்கொண்டு சைனபசார்க்கோ, ஒற்றைவாடைத் தெருவுக்கோ போய், வழி ஓரத்தில் ஒரு மரத்து நிழலில் அடுப்பு வைத்துப் பொங்கிச் சாப்பிட்டால், வீட்டுவாடகை இல்லாமற்போகும். ஆனால், அப்படிச் செய்தால், நாளைக்கே வேலைக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பிடுவார்களே !

திருமலை : அப்புறம் சொல் ! நன்றாகப் பேசுகிறாய்.

மூத்து : இது என்ன'ய்யா ! என்னுடைய பேச்சுத் திறமையை எடைபோட வந்துவிட்டாயா ? இது என்ன ஆண்டுவிழாவா ? மேடைப் பேச்சா ?

திருமலை : வேறு என்ன செய்வது ? நான் சொன்னால் எந்த வழியும் உனக்குப் பிடிக்காது. அதனால் நீயாகச் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

மூத்து : சரி, சொல்லய்யா ! கேட்கிறேன்.

திருமலை : சும்மா காதால் கேட்டால் போதாது. 'நிற்க அதற்குத்தக' என்றபடி நடக்க வேண்டும்.

முத்து : சொல், பார்க்கலாம். கிளர்க் வேலையை விட்டு விட்டு, ஏதாவது பீடி வெற்றிலைப்பாக்குக் கடை வைக்கச் சொல்கிறுயா ?

திருமலை : ஆஆ! முடியுமானுல் தடையில்லாமல் செய்யலாம். ஆனுல் உனக்கு அந்தத் திறமை இல்லை. அதைவிட—

முத்து : அதைவிட—?

திருமலை : சம்பளத்தோடு கொஞ்சம் இது அது வாங்கிப் பழக்கப்படுத்திக்கொள்.

முத்து : போதுமய்யா உன் யோசனை! (போவதற்கு எழுந்து நின்று) போதும் போதும்! வருகிறேன், வணக்கம்.

திருமலை : அதற்காகத்தான் நான் சொல்லமாட்டேன் என்கிறேன். இன்னெரு வழியும் சொல்லிவிடுகிறேன். அதாவது : பணக்காரர் யாராவது பெண் கொடுத்தால் அநேகமாக ஏழைக்குக் கொடுக்க மாட்டார்கள்! ஒருவேளை எந்தப் பணக்காரராவது வேறு வழி இல்லாமல் உனக்குப் பெண் கொடுக்க முன்வந்தால்—தடை சொல்லாமல் திருமணம் செய்துகொள். பெண் எப்படி இருந்தாலும் கூன் குருடு நொண்டி முடமாக இருந்தாலும் சரியே—.

முத்து : அப்படிச் சொல்லு! (கை நீட்டி அவன் கையை வேடிக்கையாகக் குலுக்கிவிட்டு) இன்னும் ஏதாவது வழி இருந்தால் எண்ணி வைத்திரு. அதையும் நாளைக்குச் சொல்லிவிடு. (பிரிந்து போகிருன்).

## காட்சி : 3

**இடம் :** அமைந்தகரை வீட்டுக்கூடம்.

**காலம் :** இரவு 9 மணி.

**மாந்தர்** கந்தன், முத்துச்சாமி, தந்திக்காரர்.

**கந்தன் :** (முகவரி எழுதிய சீட்டைக் கொடுத்தபடி) யாரோ இரண்டுபேர் திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்தார்கள்.

**முத்துச்சாமி :** (சீட்டைப் பார்த்துவிட்டு) அவர்களுக்கு என்ன இங்கே வேலை? இனிமேல் வந்தால், இந்தப் பக்கம் வரக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுங்கள்.

**கந்தன் :** பார்த்தால் நல்லவர்களாகத் தெரியுது.

**முத்து :** தெரிந்தால்—?

**கந்தன் :** அவசரப் படாதே'ப்பா, நானும் இந்த வயசிலே எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன்.

**முத்து :** பார்த்திருந்தால்—?

**கந்தன் :** நல்லவர்களை அப்படிச் சொல்லக் கூடாது'ப்பா. நானும் இந்த வயசிலே—.

**முத்து :** நல்ல வயசு! என்ன அது? இந்த வயசிலே! இந்த வயசிலே ! யார் இல்லை என்று சொன்னது ?

**கந்தன் :** அங்கங்கே யார் யாரோ எப்படி எப்படியோ பிழைக்கிறார்கள். இலை மறைவா(க)க் காய் மறைவா(க)ப் போகணும்.

**முத்து :** ஓ ஓ ! என்னவோ கதை நடந்திருக்கிறது. (சுற்றிலும் பார்த்து, ஒரு மூலையில் இருந்த பழக்கூடையைக் கண்டு பிடித்து, ஆத்திரத்தோடு)—இது என்ன இது ? (திறந்து பார்த்து) இவ்வளவு பழமா? எங்கள் சூப்பரிண்டெண்ட் வீட்டுக்குப் போகிற கூடை அவ்வளவு இருக்கிறதே ! காலையில் நாலு கத்தரிக்காய் வாங்குவதற்குக் கையில் இரண்டணா இல்லை. இவ்வளவு பழம், ஒரு கூடைப்

பழம்-எங்காவது ஆறு எழு ரூபாய்ப் பழம் இருக்குமே. இதை அவர்கள் கொடுத்துவிட்டுப் போனார்களா ?

கந்தன் : அவசரப் படாதே'ப்பா (கவலையோடு).

முத்து : இந்தக் கூடைப்பழம் இப்படியே இருக்கட்டும். உங்கள் ரத்தத்திலே எதாவது உணர்ச்சி சுரணை இருந்தால், இதைக் கையாலும் தொடக் கூடாது. குப்பை கூட்டுகிறவன் நாளைக் காலையில் இந்தப் பக்கம் வரும்போது, இதை எடுத்து அவன்கையில் அப்படியே கொடுக்கப் போகிறேன். இந்த அரைவயிற்றுக் கஞ்சியும் இல்லாமல் போய்விடும். அதற்குத்தான் இதை வாங்கி வைத்துக்கொண்டீர்கள்.

கந்தன் : இந்த வயசிலே நானும் அப்படி ஒன்றும் தவறு செய்தது இல்லை. இதில் என்ன'ப்பா தப்பு? இந்த வயசிலே—.

முத்து : அதெல்லாம் உங்களுக்கு என்ன தெரியும்? பட்டால்தான் தெரியும். நரிக்கூட்டமும் ஓநாய்க் கூட்டமும் இருக்கிற ஆபீசிலே நான் ஒருத்தன் ஒதுங்கியும் ஒடுங்கியும் வாழவேண்டியிருக்கிறது. அகப்பட்டால் அப்படியே விழுங்கிவிடக் காத்திருக்கிறார்கள். நீங்கள் வீட்டில் உட்கார்ந்துகொண்டு இந்த வேலையைச் செய்திருக்கிறீர்கள். இது போதுமே. நான் என் நாளைக்கு ஆபீசுக்குப் போக வேண்டும் என்ற எண்ணமா ?

கந்தன் : நீ நினைக்கிறபடி அப்படி ஒன்றும் இல்லையாம்'பா. அவர்களே சொன்னார்கள். இது வழக்கம் தானாம். உங்கள் ஆபீசில் எல்லாரும் செய்கிறார்களாம். நானும் இந்த வயசிலே எவ்வளவோ கொடுத்திருக்கிறேன். ஊரிலே உனக்கு எழுத்துக்கற்றுக்கொடுத்தாரே அந்த வாத்தியாருக்கு வாரம் தவறாமல் காய்கறி பருப்புநெய் எல்லாம் கொடுக்கவில்லையா ? அப்போது நமக்கு நிலம் இருந்தது ; இருபோகமும் விளையும். ஒரு மூட்டை அரைமூட்டைநெல் வாத்தியாருக்கு அனுப்புவேனே !

**மூத்து :** (தன் தலையை அடித்துக்கொண்டு) சொன்னாலும் தெரிய'லையே. அது வேறே'ப்பா.

**கந்தன் :** என்னைப் பள்ளிக்கூடத்தில் போட்டபோது, எங்கள் அப்பாவும் இந்த வாத்தியாரின் அப்பாவுக்கு அப்படிக்கொடுத்திருக்கிறார். பிறகு, எருமுட்டை எல்லாம் நம் வீட்டிலிருந்து வாத்தியாருக்குப் போகுமே!

**மூத்து :** அது வேறே'ப்பா, அது வேறே. அப்போது ஊராரே எல்லாம் கொடுத்துக் காப்பாற்ற வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது அப்படி இல்லை. சம்பளம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் வாங்கக் கூடாது.

**கந்தன் :** நம் ஊர்க் கணக்குப் பிள்ளைக்குச் சர்க்கார் சம்பளம் இல்லையா? அவருக்கு ஊரார் என்ன என்னவோ கொடுக்கவில்லையா? நானும் இந்த வயசிலே அவருக்கு எவ்வளவோ கொடுத்திருக்கிறேன்.

**மூத்து :** அதுவும் கூடாதுதான். யாரோ தவறு செய்தால் நாமும் செய்யலாமா? திருட்டுத் தனமாக உதவி செய்வது தெரிந்தால், பெரிய குற்றம் ஆகுமே. இதைவிட நடுத்தெருவில் நின்று கொள்ளை அடிக்கலாமே. இந்தப் பேச்சே நம் வீட்டில் பேசக் கூடாது'ப்பா. என்னுடைய மானமே போகிறது. (அப்போது தந்தி ஒன்றைத் தபால்காரர் கொண்டுவந்து கதவைத் தட்டுதல்) யார் அது?

**தபால்காரர் :** தந்தி.

**மூத்து :** (கலக்கத்தோடு) வா'ங்க உள்ளே.
(கையெழுத்துப் போட்டுப் பிரித்துப் படித்தல்.)

**தால் :** மணி இறந்தான். உடனே புறப்படுங்கள்.

**மூத்து :** (துயரத்தோடு) அக்கா பையன் சின்னவன் காய்ச்சலாக இருந்தானே அவன் இறந்துவிட்டானும் - புறப்படுங்கள்.

**கந்தன் :** (திகைப்பு) என்ன! யாரு! எங்கே'டா அம்மா?
(உள்ளே விரைந்து போதல்.)

## காட்சி : 4

**இடம் :** பெரிய பங்களாவில் ஆடம்பரமான அறை.

**காலம் :** காலை 8 மணி.

**மாந்தர் :** கோடீசுவரர், வேலையாள் எலிமூஞ்சி, திருமலை (பிறகு வருதல்)

**கோடீசுவரர் :** டே ! எலிமூஞ்சி! இங்கே வா'டா.

**எலிமூஞ்சி :** என்ன சாமி !

**கோடீ :** எவ்வளவு தவிடு பிடித்துவந்தாய் ?

**எலி :** எட்டு மூட்டை சாமி !

**கோடீ :** கணக்குப்பிள்ளை எவ்வளவு வேண்டும் என்று சொன்னாரடா ?

**எலி :** பத்து மூட்டை சொன்னாருங்க.

**கோடீ :** ஏன்'டா மடையா ? இப்போது வியாபாரத்தில் உன்னால் இரண்டு மூட்டை நஷ்டம் ஆகுதே'டா. ஐந்து மூட்டை அரிசிக்கு ஒரு மூட்டை தவிடு கலக்க வேண்டும் என்று சொன்னேன். ஐம்பது மூட்டை அரிசி இருக்குதே'டா. அதற்கு எவ்வளவு தவிடு கலக்க வேண்டும் ? கணக்குச் சொல்லடா.

**எலி :** பத்து மூட்டைத் தவிடு சாமி.

**கோடீ :** கணக்குத் தெரிந்தும் ஏன்'டா அப்படிச் செய்தாய் ?

**எலி :** தவிடு கிடைக்கவில்லை சாமி. நான் என்ன செய்வது ?

**கோடீ :** எங்கே'டா போச்சு தவிடு ? கிராமங்களுக்குப் போனால் தவிட்டுக்குப் பஞ்சமா'டா ? இப்போது இரண்டு மூட்டை அரிசியின் பணம் கையைவிட்டுப் போகுதே. உன் சம்பளத்தில் பிடிக்கலாம் என்றால், எத்தனை மாதம் சம்பளத்தைப் பிடிப்பது'டா ?

எலி : சம்பளத்தைப் பிடித்தால் நான் எப்படிச் சாமி பெண்டாட்டி பிள்ளேயோடு பிழைப்பது ?

கோடீ : என்'டா ! அரிசியில் தவிடு கொட்டிக் கலப்பது தானே உனக்கு வேலே? அதற்குத்தானே உனக்குத் தண்ட சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறேன். அதையே சரியாகச் செய்யவில்லே என்ருல்—.

எலி : நடந்ததைச் சொல்லிவிடுகிறேன் சாமி. நான் விடாமல் சுற்றினேன். வழக்கமாகப் போகிற இரண்டு ஊரிலும் சுற்றினேன். எல்லாரும் தவிடு வைத்துக் கொண்டே இல்லே என்று சொல்லிவிட்டார்கள். நாம் செய்வது அவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட் டிருக்கிறது. நான் போய்க் கேட்டவுடன், “ உங்கள் முதலாளி செய்யும் கொடுமைக்கு நாங்கள் தவிடு விற்கமாட்டோம் போ ” என்று சொல்கிருர்கள். “ அரிசியிலிருந்து எடுத்த தவிட்டை மறுபடியும் அரிசி யில் கொட்டிக் கலந்து பங்கீட்டுக் கடையில் விற்கிறீர் களாமே ” என்று என்னேயே கேட்கிருர்கள். பக்கத் துத் தெருவில் ஒரு கிளர்க் இருக்கிருர், பாருங்கள் ; அவரும் வாத்தியார் ஒருவரும் சேர்ந்து போன வாரத் தில் இந்த ஊர்களில் சுற்றி வீடு வீடாய்ப் போய் இப் படிச் சொல்லியிருக்கிருர்கள். நான் வேண்டுமானுல் வேலேயை விட்டுவிடுகிறேன். இனிமேல் என்னுல் முடியாது, சாமி.

கோடீ : யாரடா ? அந்தப் பயல் முத்துச்சாமியா ? அந்த வாத்தியார் யார் ?

எலி : அவர்தானுங்க. அந்த வெள்ளே வேட்டிக்காரர்.

கோடீ : ஓ ஓ அவனு ? இருக்கட்டும். முன்னே அந்தக் கிளர்க்குப் பயல் முத்துச்சாமிக்கு வேட்டு வைக் கிறேன்.

எலி : என்ன பகையோ, தெரிய'லேங்க.

கோடீ : பகை என்ன பகை? தின்கிற சோற்றில் மண்ணை வாரிப் போட்டுக்கொள்கிறான். அது இருக்கட்டும். இதை வெளியே சொல்லாதே. இந்த வேலை பிடிக்க வில்லையானால், உனக்கு நானே வேறு வேலை தரு கிறேன். திருவள்ளூரில் நம்முடைய பருப்பு மண் டிக்குப் போ. அங்கே வேலை அவ்வளவு கடுமை அல்ல. ஓடையிலிருந்து சிறு சிறு கல்லாகப் பார்த்துப் பொறுக்கிக் கொண்டுவர ஆள் வைத்திருக்கிறோம். அந்தக் கல்லை எல்லாம் தக்க அளவாகப் பருப்பிலும் கொட்டையிலும் பக்குவமாகச் சேர்த்து மூட்டை கட்டிவைக்க வேண்டும், அவ்வளவுதான்.

(அய்யா இருக்கிறாரா என்று யாரோ அழைக்கும் குரல்)

அது யார், பாரு. அப்படியே கணக்குப்பிள்ளை இருந் தால் வரச் சொல்லு.

எலி : (போய்த் திரும்பி வந்து) முன்னெல்லாம் வருவாரே அவ ருங்க. திருமலைஎன்றுசொல்கிறார்களே, அவர்தானுங்க.

கோடீ : வரச்சொல். நல்ல வேளையாக வந்தார்.

திருமலை : (உள்ளே வந்து) வணக்கம் அய்யா.

கோடீ : வா, அப்பா, வா. உன்னோடு ஒன்று பேச வேண்டும்.

திருமலை : ஏதோ வேலையாக இருக்கிறீர்கள். நான் வந்தது தடையோ, என்னவோ?

கோடீ : என்ன வேலை! எங்கள் பிழைப்புத் தெரியாதா? நாய் படாத பாடு. நிற்க நேரம் இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை என்ற கதைதான். எங்கள் பிழைப்பை விடத் தெருவில் திரிகிற பிச்சைக்காரன் பிழைப்பே மேல். அவனாவது கவலை இல்லாமல் தூங்குகிறான். எங்களுக்கு எந்த நேரமும் இந்தக் கவலைதான்.

திருமலை : கணக்குப் பார்க்கிறீர்களோ?

கோடீ : கணக்குத்தான். இந்தக் கணக்கெல்லாம் எத்த னையோ ஆபீசுகளுக்குப் போகவேண்டிய கணக்குகள்

கொஞ்சம் பக்குவமாக, முன்பின் பார்த்து, தக்கபடி ஒருவகையாக, திறமையாக, யாரும் சந்தேகப்படாத படி, அறிவாக எழுத வேண்டும். இந்தக் கணக்குப்பிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் எத்தனை முறை சொல்லிக்கொடுத்தாலும் பயன் இல்லை. மூளையில்லாத முண்டங்கள்! நாங்கள் பாடுபட்டுச் சேர்த்துத் தரும் பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டுபோய்ச் செலவு செய்வதற்குக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது ஒன்றுதான் தெரியும் அவர்களுக்கு. அது போகட்டும், எங்கே வந்தீர்கள்?

திருமலை : உங்களிடத்தில் வந்தேன்.

கோடி : என்ன அப்படி?

திருமலை : உங்களால் ஒன்று ஆகவேண்டும் எனக்கு.

கோடி : என்னாலேயா? வேடிக்கையாக இருக்கிறதே!

திருமலை : அது உங்களால்தான் ஆகும். வேறு யாராலும் ஆகாது.

கோடி : அப்படியா? அப்படி ஒன்றும் எனக்குச் செல்வாக்கு இல்லையே? வேண்டுமானால் அரிசி பருப்புக் கேளுங்கள். பங்கீட்டுக் கடையில் இருப்பது போல் இல்லாமல் கொஞ்சம் நல்ல சரக்காகப் பார்த்து அனுப்புவேன். எவ்வளவு வேண்டும்?

திருமலை : அதற்கெல்லாம் பணம் வேண்டுமே!

கோடி : உங்களைப் போல் சம்பளக்காரரே அப்படிச்சொன்னால், எங்களைப்போல் வியாபாரிகள் என்ன சொல்வது?

திருமலை : என்ன தலைகீழாய்ச் சொல்கிறீர்களே!

கோடி : உண்மையைத்தான் சொல்கிறேன். எங்கே என்ன விளைந்தாலும் விளையாவிட்டாலும், வியாபாரம் நடந்தாலும் நடக்காவிட்டாலும், கம்பெனி நடந்தாலும் நடக்காவிட்டாலும், யார் செத்தாலும் பிழைத்தாலும், தேர்தலில் யார் வந்தாலும் வராவிட்டாலும், சர்க்கார் ஆபீசில் உள்ள உங்களுக்குச் சம்பளம்

மட்டும் நிற்கப் போவதில்லே. எங்களுக்கு அப்படி இல்லேயே. இரண்டு வாரம் வியாபாரம் மந்தமாக நடந்தால் போதும், நாங்கள் இன்சால்வெண்ட் பாரத்தைத் தேடிக்கொண் டிருக்கவேண்டுமே. சொன்னல் நம்பமாட்டீர்கள். பணத்துக்காக இப்போது நாங்கள் படுகிற பாடு, எங்களேப் படைத்த பிரமன் கூடப் பட்டிருக்க மாட்டான்.

திருமலே : உண்மைதான். கொஞ்சம் பார்த்தாலே தெரியுது.

கோடீ : அது இருக்கட்டும். அப்புறம் ?

திருமலே : தங்கய்யா இருக்கிருரே. அவருக்கு உங்களால் தான் பெரியவேலே கிடைத்ததாகக் கேள்விப்பட்டேன்.

கோடீ : அதெல்லாம் ஒன்றும் இல்லே. நல்ல பிள்ளே. நல்ல குணம். பெரியவீட்டுப் பிள்ளே. நல்ல வீடு வாசல் சொத்து சுதந்திரம் எல்லாம் உள்ள குடும்பம். அதற்கு மேல், கல்லூரியில் சேர்ந்து படித்திருக்கிருன். பி. ஏ. பரீட்சையிலும் தேறிவிட்டான். அதனுல் பெரிய வேலே தானுகவே தேடிக்கொண்டு வந்தது.

திருமலே : பி. ஏ. படித்துவிட்டால் யார் வேலே தரக் காத்துக்கொண்டிருக்கிருர்கள் ? நீங்கள்—. நீங்கள் பெரிய இடத்தில் ஒரு சொல் சொல்லாவிட்டால் இவ்வளவு பெரிய வேலே உடனே கிடைத்திருக்குமா ? நம்பவே முடியாது.

கோடீ : (ஒரு புன்சிரிப்புடன்) யாருக்கும் தெரியாது என்று பார்த்தேன். எப்படியோ தெரிந்துவிட்டிருக்கிறதே !

திருமலே : உங்களுடைய செல்வாக்கைப் பற்றி எல்லோருக்கும் தெரியுமே. சொல்ல வேண்டுமா ?

கோடீ : தங்கய்யாவுக்காக அந்தப் பெரிய இடத்தில் நான் போய்ச் சிபாரிசு செய்தது உண்மைதான். நான் வேறு என்ன செய்யப்போகிறேன் ? ஒரு வாய்ச்சொல். அவ்வளவுதான்.

திருமலே : அது போதுமே.

**கோடீ :** உங்களுக்காக எப்போது என்ன சொல்ல வேண்டும் என்று விளக்கமாக ஒருநாள் சொல்லிவிட்டால் போதும். அதற்கு இப்போது அவசரம் இல்லை. இப்போதுதான் தங்கய்யாவுக்குச் சொல்லி, உடனே உங்களுக்காகவும் சொன்னால் நன்றாயிருக்காது. ஒருமாதம் பொறுக்கலாமே!

**திருமலை :** அப்படியே ஆகட்டுங்க. மறக்காமல் நினைவு வைத்துச் செய்ய வேண்டும். வாழ்நாள் வரையில் காப்பாற்றியது போல.

**கோடீ :** ஆகட்டும். என்னால் ஆனது செய்வேன். அதற்குள் நீங்கள் எனக்காக ஒன்று செய்ய வேண்டும்.

**திருமலை :** அதற்கு என்ன? எப்போது வேண்டுமானாலும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். அது என்னுடைய கடமை என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**கோடீ :** வேறொன்றும் இல்லை. உங்கள் கூட்டாளி இருக்கிறாரே, அவர்—(வெறுப்போடு).

**திருமலை :** (திகைப்போடு) யாருங்க?

**கோடீ :** அந்த முத்துச்சாமிதான்.

**திருமலை :** ஏதாவது தப்புச் செய்துவிட்டானா? அப்படி இருந்தால், நான் சொல்லித் திருத்துகிறேன். உங்களுக்குக் கவலை வேண்டாம்.

**கோடீ :** திருத்த முடியாது. அதை விட்டுவிடுங்கள். எனக்கு நன்றாய்த் தெரியும். அவன் அந்த ஆபீசிலிருப்பது எத்தனையோ வகையில் இடையூறாக இருக்கிறது.

**திருமலை :** இப்போது தெரிந்துகொண்டேன். அவன் ஒரு பிடிவாதக்காரன். இருந்தாலும் நான் சொன்னால் கேட்பான். சொல்லிவைக்கிறேன்.

**கோடீ :** அது போதாது. அவன் செய்ததை எல்லாம் நினைத்தாலும் வயிற்றெரிச்சலாக இருக்கிறது. எனக்கு வரவேண்டியதையும் வராமல் தடுக்கிறான். அந்த ஆபீசிலிருந்துகொண்டு எனக்கு எவ்வளவோ இடைஞ்

14178
O31:2N12:12
...RSITY EXTENSION LIB...

சல் செய்கிருன். ஒன்று சொல்கிறேன். போன தை மாதத்தில் ஒரு விண்ணப்பம் போட்டிருந்தேன்.

திருமலே : அப்புறம்—?

கோடி : உடனே ஆபீஸ் சூப்பரிண்டையும் பார்த்துத் தக்கபடி சொல்லிவைத்திருந்தேன். ஆனல் எனக்குத் தீமையாக எழுதி, அவர் அவசர வேலையால் கவனிக்காமல் கையெழுத்துப் போடும் வேளே பார்த்து, ஆகாத உத்தரவில் கையெழுத்து வாங்கி அனுப்பிவிட்டான். அப்புறம் சூப்பரிண்டிடம் போய்ச் சொன்னல், அவர் மிகவும் வருந்தினர். இப்படிச் சாமி வரம் கொடுத்தாலும் அந்தப் பூசாரி தடுக்கிருன். அவனேத் திருத்தவே வேண்டாம். ஒழித்துக்கட்ட வேண்டும். அதற்கு நீங்கள் கொஞ்சம் உதவியாக இருந்தால் போதும். மற்றவைகளே நான் பார்த்துக்கொள்வேன்.

திருமலே : (பெரிய திகைப்பு—கலக்கம்—தலேயசைத்து) சரி'ங்க.

கோடி : எனக்கு இவ்வளவு உதவி செய்தால் போதும். அவன் கைப்பட யார் யாருக்கு நன்மையான உத்தரவுகள் அனுப்பியிருக்கிருனே, அவர்கள் எல்லாரும் அவனுக்கு லஞ்சம் கொடுத்ததாகஎழுதிப்போட வேண்டும். யார் யாருக்குத் தீமையான உத்தரவு அனுப்பியிருக்கிருனே, அவர்களே அவன் லஞ்சம் கேட்டு வற்புறுத்தினன் என்றும், அவர்கள் கொடுக்காதபடியால் அவன் நல்ல உத்தரவு அனுப்பவில்லே என்றும் எழுதிப்போட வேண்டும். இதற்கு அந்த அந்த ஆட்களின் ஊர் பேர் தெரிந்தால் போதும். மற்றவை நான் பார்த்துக்கொள்வேன். என்ன ? பேசாமல் இருக்கிறீர்கள், கூட்டாளி என்று இரக்கமா ?

திருமலே : அதெல்லாம் ஒன்றும் இல்லேங்க. அப்படியே செய்யலாம். இப்போது ஏதோ வேலேயாக இருந்தபோது குறுக்கே வந்தேன். நாளே மறுநாள் ஓய்வு நேரமாகப் பார்த்து வருவேனுங்க. (கவலேயோடு திரும்புதல்).

## காட்சி : 5

**இடம் :** அமைந்தகரை கடைத்தெரு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** திருமலை, கந்தன், பாட்டுப் பாடும் பிச்சைக்காரன் ஒருவன்.

**திருமலை :** (கந்தன் மெல்ல நடந்து போவதைப் பார்த்து, அணுகிச் சென்று) என்னங்க ! நான் தெரியலையா ? திருமலை.

**கந்தன் :** (கவலையோடு இருந்த முகம் மாறி, நிமிர்ந்து பார்த்து) என்னப்பா ! நீ தெரியாதா ? நான் எதையே நினைத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தேன். அதனல் தான்—.

**திருமலை :** எவ்வளவோ கவலை, பாவம் ! முத்துச்சாமி சொன்னன் எல்லாம் !

**கந்தன் :** சொல்லியிருக்கிருன ? நானும் இந்த வயசிலே எவ்வளவோ பார்த்துவிட்டேன். ஆனலும் இப்படி—.

**திருமலை :** பஞ்சமான காலம் என்று சொல்கிறீர்கள். மெய்தான். இவ்வளவு பஞ்சம் எப்போதும் வந்ததில்லை என்றுதான் எல்லோரும் பேசிக்கொள்கிருர்கள்.

**கந்தன் :** என்னப்பா ! பொன்னையாற்றிலும் பாலாற்றிலும் வெள்ளம் வந்து ஆறு வருசத்துக்கு மேல் ஆய்விட்டது. ஊருக்குப் போய்ப் பார்த்தால், இந்த மழைக் காலத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லை'ப்பா. செத்துப் போன பிணத்தைக் குளிப்பாட்டுவதற்குத் தண்ணீரில் சிக்கனம் பார்க்கிருர்கள். எங்கள் ஊரிலேயே இப்படி நடந்தது, நானே கண்ணரப் பார்த்தேன்.

**திருமலை :** இருக்கும், இருக்குங்க.

கந்தன்: நீ பட்டணத்திலேயே இருந்து பார்க்கிறாய். உனக்கு நாட்டுப்புறங்களில் படுகிற துன்பம் தெரியாது'ப்பா.

திருமலை: ஏன் தெரியாது? இங்கே மட்டும் ஏழைகள் கொஞ்சமான துன்பமா படுகிறார்கள்?

கந்தன்: இங்கே தெரியவே தெரியாது. அங்கங்கே சினிமாக் கொட்டகைகளில் போய்ப் பார்த்தால், காசைத் தண்ணீராய்ச் செலவு செய்கிறார்கள். என்னவோ கூவாமே அந்தக் கூ என்று சொல்லி—

திருமலை: க்யூ—வரிசையாக நீளமாக நிற்பது—.

கந்தன்: ஆமாம் ஆமாம். அந்தக் கூ வரிசையில் நிற்கிறார்கள். எவ்வளவு கூட்டம் கூட்டமாக நின்று டிக்கட் வாங்குகிறார்கள். பெண்கள் எவ்வளவு கூட்டம்! இந்தப் பட்டணத்தில் சினிமாவில் ஒவ்வொரு நாளும் தேரும் திருவிழாவுமாக இருக்கிறது. இங்கே எப்படிப் பஞ்சம் தெரியும்?

திருமலை: அது மெய்தான். ஆனாலும் கூலிக்கு வேலை இல்லாமல் எவ்வளவோ பேர் தெருத் தெருவாகச் சுற்றுகிறார்கள்.

கந்தன்: ஓட்டலுக்குப் போனால் அதற்குமேலே இருக்கிறது.

திருமலை: நீங்கள் ஓட்டலுக்கும் போகிறீர்களா?

கந்தன்: ஒருநாள், சம்பளம் வந்த மறுநாள் போயிருந்தேன். அல்வா அல்வா என்று சொல்கிறார்களே, அது எப்படி இருக்கிறது என்று போய்ப் பார்த்தேன். எங்கள் ஊரில் ஒரு பெரிய பணக்காரன் வீட்டில் கலியாணம் நடந்தபோது அல்வா கொடுத்தார்கள். அது பத்து வருசத்துக்குமேல் ஆகிவிட்டது. பட்டணத்துக்கு வந்த பிறகு அந்த ஆசை இருந்தது. அதனால் ஒருநாள் அல்வா சாப்பிடலாம் என்று ஓட்டலுக்குப் போனேன். அப்பப்பா! அங்கே உட்கார இடம்

இல்லை. அல்வா நாலணு என்ருர்கள். அது நாக்கு முனைக்கே போதவில்லை. சுண்டைக்காய் அளவு கொண்டுவந்து வைத்தார்கள். வைத்த தட்டு மட்டும் கண்பூத்துப் போவது போல் வெள்ளை வெளேல் என்று பளபளப்பாக இருந்தது. காசு அதற்குத்தான் செரிக்கும். வேறே பயன் இல்லை.

**திருமலை :** (பெருமூச்சு விட்டு) நீங்கள் சொல்வதை என்னல் நம்பமுடியவில்லையே ?

**கந்தன் :** நாங்கள் எல்லாம் ஏழைகள்தானே அப்பா ?

**திருமலை :** நாங்கள் மட்டும் பணக்காரரா ? நாங்களும் ஏழைகள்தான். இருந்தாலும்—.

**கந்தன் :** இப்போதுதானே பையன் ஏதோ வேலையில் இருக்கிருன். இருந்தாலும் என்ன பயன் ?

**திருமலை :** என்ன, அப்படிச் சொல்கிறீர்களே ! முத்துச்சாமியைவிடக் குறைந்த சம்பளம் வாங்குகிற கிளர்க்குகள் அதே ஆபீசில் எவ்வளவோ மகிழ்ச்சியாக ஆடம்பரமாக வாழ்கிருர்கள். இவனுக்குத் திறமை இல்லை என்ருல், அதற்கு என்ன செய்வது ?

**கந்தன் :** என்ன செய்வது ? அவன் ஏதோ ஒரு வகையில் பழகிவிட்டான். தன் வழியை விட்டு அப்பால் தாண்ட மாட்டேன் என்கிருன். இரண்டு மூன்று வாரத்துக்கு முன்னே யாரோ சிலபேர் வந்து ஒரு கூடைப் பழம் கொடுத்தார்கள். அதை அப்படியே எடுத்துக் குப்பைத் தொட்டியில் கொட்ட வேண்டும் என்ருன். நானும் இந்த வயசிலே இது போலப் பார்க்கவில்லை.

**திருமலை :** பழம் கிழம் கொடுத்தால் வாங்கக் கூடாது. அது என்ன ? இரண்டு மூன்று ரூபாய் போட்டால் தானே வரும். பணமாகக் கொடுக்கச் சொல்லி நூறு இருநூறு வாங்கிக்கொள்ள வேண்டும். அதுதான் குடும்பத்துக்கு உதவும்.

**கந்தன் :** அதையும் கொடுத்தார்கள். ஆனல்—.

திருமலை : (ஆர்வத்தோடு) யார் அவர்கள்? என்ன ஊர்? என்ன வேலையாக? முத்துச்சாமி வாங்கிக்கொள்ள வில்லையா? ஏன்?

கந்தன் : திருச்சிராப்பள்ளியாம். வியாபாரிகளாம்.

திருமலை : ஓ! ஓ! சரிதான், சொல்லுங்கள். அப்புறம்?

கந்தன் : அவர்கள் வந்தபோது பையன் இல்லை.

திருமலை : ஓ ஓ! உங்களிடம் கொடுத்தார்களா?

கந்தன் : (திகைப்புடன்) ஆ! ஆமாம்.

திருமலை : நீங்கள் முத்துச்சாமிக்குச் சொன்னீர்கள். அல்லவா?

கந்தன் : இல்லை, சொல்லவில்லை. சொன்னல் அவன் ஒத்துக்கொள்ளமாட்டான். என்மேல் வருத்தப் படுவான். பேசாமல் ஊருக்குக் கொண்டுபோய் என் மகளிடம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்.

திருமலை : முத்துச்சாமி இருக்கிருனே, அவன் ஒரு பைத் தியக்காரன், பிழைக்க மாட்டாதவன்.

கந்தன் : நீயாவது சொல்லக் கூடாதா? நானும் இந்த வயசிலே—எவ்வளவோ—

பிச்சைக்காரன் ஒருவன் : (வழியில் பாடிக்கொண்டே செல் லுதல்) எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு—நாம் எல் லோரும் சமம் என்பது உறுதியாச்சு—ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே...(பாடிக்கொண்டே போகிருன்.)

கந்தன் : (உற்றுக் கேட்டு அந்தப் பிச்சைக்காரனை வியப்போடு பார்க்கிருன்; பிறகு திருமலையின் பார்வை வேறிடத்தில் இருப்பதைக் கண்டு) என்னப்பா! எங்கே என்ன பார்க்கிருய்?

திருமலை : அதோ அந்தக் காரில் ஏறுகிருரே, அவர் யார் தெரிகிறதா?

கந்தன் : (சாய்ந்தும் நிமிர்ந்தும் உற்றுப் பார்த்து) எங்கேயோ பார்த்த ஆள்போலவே தெரிகிறது. யார் அந்த ஆள்?

திருமலை : முத்துச்சாமியோடும் என்னோடும் படித்தானே, தங்கய்யா என்று ஒருவன், நினைவு இருக்கிறதா, அவன் தான்.

கந்தன் : (வியப்போடு) அவனா? தங்கய்யாவா? அவனா கார் வைத்துக்கொண்டிருக்கிறான்?

திருமலை : அவனேதான். என்னைத் திரும்பிப் பார்த்தான்; உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டான். பார்க்காதது போல் போகிறான். அதோ காரும் புறப்பட்டு விட்டது.

கந்தன் : அய்யோ! அவனாக இருந்தால் அப்படிப் போக மாட்டானே. நல்ல பையன்!

திருமலை : அவனேதான். ஆனால் பழைய தங்கய்யா அல்ல. இப்போது எழுநூறு ரூபாய்ச் சம்பளத்தில் இருக்கிறான். பணக்கார வீட்டுப் பெண்ணைக் கட்டிக் கொள்ளப்போகிறான். சொந்தக் கார் வாங்கிவிட்டான்.

கந்தன் : (வியப்பும் திகைப்புமாக) ஆமாம்! உங்களோடு படித்த பையன்தானே. முத்துச்சாமியிடம் அடிக்கடி வந்து கேட்டுப் படித்துக்கொண்டு போவானே.

திருமலை : ஆமாம், ஆமாம்; அவனேதான்.

கந்தன் : அவனுக்குமட்டும் எப்படிப் பெரிய வேலை கிடைத்துவிட்டது? எழுநூறு ரூபாயா சம்பளம்? ஒரு மாசத்துக்கா? கேட்டுவந்தவன்தான். அப்படி யானால்—.

திருமலை : என்ன கேட்டுவந்தானோ? பீ. ஏ. பரீட்சையில் மூன்றும் வகுப்பில் தேறியிருக்கிறான்.

கந்தன் : முத்துச்சாமியும் அப்படித்தானே பரீட்சை கொடுத்தான்?

திருமலை : முத்துச்சாமி முதல் வகுப்பில் பீ. ஏ. தேறினான்.

கந்தன் : (மிகவும் வருத்தத்தோடு) பார்த்தாயா! நான் அந்தக் காலத்தில் தலைப்பாடாக அடித்துக்கொண்டேன். "படி, படி. எந்நேரமும் படித்துக்கொண்டே

இரு. புத்தகத்தைக் கீழே போடாதே. எந்நேரமும் நாலு எழுத்தைப் பார்த்துக்கொண்டே இரு" என்று தலைப்பாடாகச் சொன்னேன். அவன் கேட்கவில்லை.

**திருமலை :** அதனால் என்ன? இன்னும் அதற்குமேல் யாரால் படிக்க முடியும்?

**கந்தன் :** என்ன பயன்? முதல் வகுப்பில்தானே பி. ஏ. பரீட்சை கொடுத்திருக்கிறான். இன்னும் நன்றாகப் படித்திருந்தால், தங்கய்யாபோல் இவனும் மூன்றாம் வகுப்பில் பி. ஏ. பரீட்சை கொடுத்திருக்கலாமே. தங் கய்யா போல 700 ரூபாய்ச் சம்பளம் வந்திருக்குமே.

**திருமலை :** (கொல்லென்று சிரித்து) அட ஆண்டவனே! (மறுபடியும் சிரிக்கிறான்.)

**கந்தன் :** ஏன்'பா! என்ன என்ன?

**திருமலை :** ஒன்றும் இல்லை. (சிரித்துக்கொண்டே) நான் அவசரமாகப் போக வேண்டும். போய் அப்புறம் வீட்டுக்கே வருகிறேன்.

**கந்தன் :** அப்புறம் வாப்பா. வந்து...வந்து...முத்துச் சாமிக்குக் கொஞ்சம் சொல்லப்பா. நானும் இந்த வயசிலே எவ்வளவு—.

**திருமலை :** வருகிறேன், சொல்கிறேன். (நடந்து போய்க் கொண்டிருக்கிறான்)

6

## காட்சி: 6

**இடம் :** முத்துச்சாமி வீடு.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** முத்துச்சாமி, கந்தன்.

**கந்தன் :** (வீட்டினுள் நுழைந்து கூடத்தில் படித்துக்கொண்டிருந்த முத்துச்சாமியைப் பார்த்து) என்'ப்பா ? தங்கய்யா பெரிய வேலையில் எழுநூறு ரூபாய்ச் சம்பளத்தில் இருக்கிறானமே, தெரியுமா உனக்கு ?

**முத்து :** தெரியும். பெரிய இடத்தில் சிபாரிசு செய்ய அவனுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். அதனால் இன்னொரு பெரிய பணக்காரருடைய சிபாரிசு அவனுக்குக் கிடைத்தது. பெரிய வேலையும் கிடைத்தது.

**கந்தன் :** அது யாரப்பா அப்படி ? நமக்குத் தெரியாதவர்களா ?

**முத்து :** தெரிந்தவர்கள்தான். இருந்தாலும் நமக்குச் செய்வார்களா? அந்தக் கோடீசுவர முதலியார் இருக்கிறாரே அவர்தான். நமக்கு அவர் கடன் கொடுத்தார் ; இருந்த நாலு காணி நன்செயும் எழுதி வாங்கிக்கொண்டார். அவனுக்குப் பெரிய இடத்தில் சொல்லி வேலை வாங்கிக் கொடுத்தார் ; நாளைக்குத் தன்னுடைய பெண்ணையும் கொடுத்து மருமகனாக்கிக்கொள்ளப்போகிறார். நான் ஏழைக் குடியானவன் வயிற்றில் பிறந்தேன் ; பாவம் செய்தேன். அவன் செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தான் ; பாக்கியம் பெற்றான். என் கதையும் அவன்கதையும் ஒன்று ஆகுமா ?

**கந்தன் :** அது இருக்கட்டும். அவனும் பி. ஏ. பரீட்சை கொடுத்தான். நீயும் பி. ஏ. பரீட்சை கொடுத்தாய். நீ ஏன் அவனைப் போல் பரீட்சை கொடுத்திருக்கக் கூடாது? எவ்வளவு தலைப்பாடாக அந்தக் காலத்தில் உனக்குச் சொன்னேன்?

**முத்து :** அதனால் என்ன'ப்பா?

**கந்தன் :** நீயும் மூன்றுவது வகுப்பில் பி. ஏ. பரீட்சை கொடுத்திருந்தால், இப்போது எழுநூறு ரூபாய்ச் சம்பளம் வாங்கலாம் அல்லவா?

**முத்து :** (வெறுப்போடு முகத்தைத் திருப்பிக்கொண்டு பெருமூச்சு விடுதல், தலையை அடித்துக்கொள்ளுதல்.)

**கந்தன் :** (கவலையோடு) என்னவோ, போ. நானும் இந்த வயசிலே இதுவரையில் உனக்கு எவ்வளவோ சொல்லி யாச்சு.

## காட்சி : 7

**இடம் :** கடற்கரை.

**காலம் :** காலை.

**மாந்தர் :** முத்துச்சாமி, திருமலை.

**முத்து :** என்'பா இவ்வளவு கவலையாக இருக்கிறாய் ?

**திருமலை :** உன்னைப் பற்றித்தான்.

**முத்து :** என்னப்பா அது, இத்தனை நாளாக இல்லாத கவலை, என்னைப் பற்றி ?

**திருமலை :** அப்படியானால், இத்தனை நாளாக உனக்குப் பகையாக இருந்தேனா ? நீ கெட்டுப்போக வேண்டும் என்று இருந்தேனா?

**முத்து :** இல்லை. இத்தனை நாளாக உனக்கு இவ்வளவு கவலை இல்லையே.

**திருமலை :** இத்தனை நாளாக நான் சொன்னதெல்லாம் நீ தான் கேட்கவில்லையே.

**முத்து :** நான் என்ன கேட்கவில்லை?

**திருமலை :** (பணக்காரரின் பகை வேண்டாம் என்று சொன்னேன் ; நீ கேட்கவில்லை. யாராவது லஞ்சம் கொடுத்தால், இலட்சுமி கடாட்சம் என்று வாங்கிப் பையில் போட்டுக்கொள் என்று சொன்னேன் ; நீ கேட்கவில்லை. நீ வாங்காவிட்டாலும், மற்றவர்கள் வாங்குவதைப் பற்றிப் பழிக்காதே என்று சொன்னேன் ; நீ கேட்கவில்லை. உன்னால் உன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத போது, ஊரில் உள்ள ஏழைகளைப் பற்றிக் கவலைப்படாதே என்று சொன்னேன் ; நீ கேட்கவில்லை. ஏழைகளுக்காக இரக்கத்தோடு பேசு

வதே பணக்காரருக்கு ஆத்திரம் உண்டாக்கும் என்று சொன்னேன்; நீ கேட்கவில்லை. வெளியூர்க்கதை எதைப் பேசினாலும் பேசு, உள்ளூர்ப் பெரிய மனிதர்களைப் பற்றிப் பேசாதே என்று சொன்னேன்; நீ கேட்கவில்லை. காந்தி புத்தர் திருவள்ளுவர் இவர்கள் புத்தகங்களைப் படித்தாலும் படி, ஆனால் இவர்கள் சொன்னபடி வாழ முயற்சி செய்யாதே என்று சொன்னேன்; நீதான் கேட்கவில்லை.

**முத்து :** போதும் உன் பிரசங்கம். போகட்டும், அதனால் வருவது வரட்டும்.

**திருமலை :** இனிமேலா வரப்போகிறது? வந்துவிட்டதே!

**முத்து :** யார்? அந்தக் கோடீசுவர முதலியாரும் ஆபீசில் உள்ளவர்களும் சேர்ந்து ஏதாவது செய்கிறார்களா? செய்யட்டும்.

**திருமலை :** இப்போதும் ஒன்றும் கவலை இல்லை. கோடீசுவர முதலியாரிடமும் சூப்பரிண்ட் இடமும் நேரில்போய்க் கேட்டுக்கொள்; மறந்துவிடுவார்கள்.

**முத்து :** என்ன, தலையா போய்விடும்? இந்தக் கிளர்க்வேலை போய்விடும். அவ்வளவுதானே.

**திருமலை :** நீ போனால் அந்த இடத்திற்கு நன்றாக லஞ்சம் வாங்குகிறவனாக இலட்சுமி கடாட்சம் உடையவனாக ஒருவனைப் போட்டுவிடுவார்கள். அப்புறம்?

**முத்து :** அதற்காகப் பயந்து, நானே முழு அயோக்கியனாக மாற வேண்டுமா?

**திருமலை :** அப்படிச் சொல்லாதேப்பா. லஞ்சம் வாங்குகிறவர்கள் எல்லாரையும் முழு அயோக்கியர் என்று சொல்லாதே. போர்க்களத்திற்குச் சிப்பாயாகப் போகிறவர்கள் அத்தனைபேரும் காந்திக்கும் ஏசுவுக்கும் புத்தருக்கும் பகைவர்கள் என்று சொல்ல முடியுமா? அவர்களிலும் அன்பு நெறியை மறக்காதவர்

கள் உண்டு. காக்கி உடை அணிந்து துப்பாக்கியைக் கையில் எடுத்தாலும், பைபிளையும் கீதையையும் குறளை யும் மறக்காதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார் கள். வேறு வழி இல்லாததால், வயிற்றின் கொடுமை யால் சிப்பாய்கள் ஆகி யார்மேலாவது குண்டுபோட்டு விட்டுத் திரும்பி வருகிறார்கள்.

**முத்து :** ஆமாம்! லஞ்சம் வாங்குகிற உத்தமர்களும் குறள் படிக்கிறார்கள்; கீதை பைபிள் படிக்கிறார்கள்.

**திருமலை :** அதுதான் உண்மை. 'லஞ்சம் வாங்குகிறவன் ஏன் அப்படி நெறி தவறுகிறான் என்று எண்ணிப் பார். வேறு வழி இல்லை. அவனுக்கும் மனைவி மக்கள் உண்டு; அந்த மனைவி மக்கள் நல்லபடி வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருக்கிறது. அவர்கள் வயிறார உண்ண வேண்டும் என்றும், மனமார உடுக்க வேண்டும் என் றும், இன்பமாகப் பொழுது போக்க வேண்டும் என் றும் அவன் உண்மையாக எண்ணுகிறான்; அன்போடு எண்ணுகிறான்; ஆர்வத்தோடு எண்ணுகிறான். அதற்கு வழி என்ன? இந்தச் சமூகம் அவனை உழைக்கச் செய் கிறது; உழைக்கிறான். ஆனால் வாழ்வுக்குப் போது மான ஊதியம் தருகிறதா, இல்லை. ஆகையால் லஞ்சம் வாங்குகிறான்.

**முத்து :** அதைவிட அரைவயிறும் கால்வயிறும் உண்டு மடிந்து போகலாமே!

**திருமலை :** அதுதான் திருவள்ளுவர் நெறி; இப்போது உள்ள உலகத்துக்குப் பயன்படாத நெறி; தற்கொலை நெறி. அது உன்னால்தான் முடியும். உடன்பிறந்த தமக்கைக்குப் பணம் அனுப்ப முடியாமல், அவள் மகனுக்குப் படிக்கப் புத்தகமும் வாங்கிக் கொடுக்கா மல், சாகும் பிள்ளைக்கு மருந்தும் வாங்கிக் கொடுக்கா மல், காசு இல்லையே என்று கையை விரிக்க உன்னால் தான் முடியும்.

முத்து : நீ என்னைப் பற்றி என்ன சொன்னாலும் சரி; நானும் அழிவேன்; என்னை நம்பிய சுற்றமும் அழியட்டும். ஆனால் படித்த படிப்பைக் காற்றோடு விட்டுவிட்டு நெறி தவறி நடக்க என்னால் முடியாது.

திருமலை : நீ போனால் போ! குடும்பம் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிற என்னைப் போன்றவர்களைக் குறைகூற உனக்கு உரிமை இல்லை, தெரியுமா? உன்னைப் போல் நானும் வாழ்ந்தால் என்ன ஆவேன், தெரியுமா? என் வயிற்றில் பிறக்கிற மக்கள் ஏழைமக்களாக இருப்பார்கள். அவர்களை நான் பி. ஏ. வரையில் படிக்கவைக்க முடியாது. படிக்கவைத்தாலும், அவர்கள் முதல் வகுப்பில் தேறினாலும், வேலை கிடைக்காது; கிடைத்தாலும் பெரிய வேலை கிடைக்காது. வாழ்க்கையில் உள்ளபடி எனக்கு ஆசை இருந்து, நானும் பணம் சேர்த்தால், என் மக்கள் பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகளாக வளர்வார்கள்; அப்போதுதான் அவர்கள் பி. ஏ. படித்தாலும் நல்லபடி வாழலாம்; படிக்காவிட்டாலும் வாழலாம். அப்போதுதான் முயற்சி இல்லாமலே பெரிய இடத்துச் சிபாரிசு கிடைக்கும்; மூன்றாம் வகுப்பில் தேறினாலும் பெரிய பதவி கிடைக்கும்.

முத்து : போகட்டும்; வழிவழியாக வரும் ஏழைச் சமுதாயத்துக்குத் துரோகம் செய்துவிட்டு என்னுடைய ஒரு குடும்பம் வாழவேண்டுமா? எனக்கு வேண்டாம் அந்த வாழ்வு!

திருமலை : எனக்கு ஒரு பெண் இருப்பதாக வைத்துக்கொள். என் நெஞ்சில் இரக்கமும் அன்பும் இருப்பதாக வைத்துக்கொள். நானும் உன்னைப் போல் வாழ்ந்தால், அந்த ஒரு பெண்ணுக்கு மூக்குத்தி வாங்கிக்

கொடுக்கவும் காசு இருக்காது ; கந்தலும் கரிப்புகையு மாக அவளை அடுப்பங்கரையில் வளர்க்கவேண்டும். யாராவது வந்து பெண் கேட்கமாட்டார்களா என்று நான் காத்திருக்கவேண்டும். பணத்தை நம்பும் உலகம் பண்பை நம்பாத உலகம் என்று அறியாமல் ஏமாந்து ஏமாந்து கடைசியில் ஒரு முரடனுக்கோ ஏழைக்கோ அந்த ஒரு பெண்ணைக் கட்டிக்கொடுக்க வேண்டும் ; அவள் கதிகலங்குவதை நான் கண்ணாலே பார்க்க வேண்டும். இதுதான் நீ காட்டும் வழி ; உன் திரு வள்ளுவர் காட்டும் வழி ; காந்தி காட்டும் வழி ; புத்தர் காட்டும் வழி. உலகம் என்ன சொல்கிறது, தெரியுமா ? நீ லஞ்சம் வாங்கு, வஞ்சம் செய், எப்படி யாவது பணம் சேர்த்துவை. உன் பெண்ணைப் பட்டும் பொன்னும் கலையும் காட்சியுமாக வளர்த்துவிடு. உள் ளத்தில் இருள் அடர்ந்திருந்தாலும் கவலை இல்லை; உடம் பெல்லாம் வைரம் மின்ன வேண்டும். பண்பும் படிப்பும் குறைவாக இருந்தாலும் கவலை இல்லை ; பகட்டான வாழ்க்கையும் பணக்காரர் என்ற பெருமையும் வேண் டும். அப்போது பார். பட்டதாரிகள் தேடி வந்து பெண் கேட்பார்கள் ; ஸ்ரீதேவி தானே வருவாள் ; சிறப் பெல்லாம் வலிய வந்து சேரும். இப்படி வாழ்வது ஒரு குற்றமா ? அன்பும் இரக்கமும் நெஞ்சில் இருந்தால் இப்படித்தானே மக்களை வளர்க்க முடியும் !

முத்து : (அவனுடைய தோள்மேல் கை வைத்துக்கொண்டு) திருமலை ! நீ யாரிடம் பேசுகிறாய் என்பதை எண்ணிப் பார் ; போதும் உன் பேச்சு ; இன்னும் வளர்த்தாதே. இரக்கமும் அன்பும் இல்லாத பாவி அல்ல நான். என் நெஞ்சிலும் அன்பும் இரக்கமும் உண்டு. இந்தப் பெரிய சமுதாயத்துக்குக் கேடு சூழ்ந்து என் சிறிய

குடும்பத்துக்கு மட்டும் நன்மை எண்ணுவதுதான் இரக்கமா? அதுதான் அன்பா? (நாடெல்லாம் பாலையாய்ப் போக வேண்டும், என் நான்கு காணி மட்டும் நன்செயாகச் செழிக்க வேண்டும் என்று எண்ண வேண்டுமா? அந்தக் குறுகிய நோக்கத்தை அழகாகப் பேசக் கற்றுக்கொண்டாய்.) அதுவே போதும்; போதும் அப்பா, போதும்! (திரும்பிப் பார்க்காமல்) வணக்கம்.

## காட்சி . 8

**இடம் :** திருமலையின் வீட்டுக் கூடம்.

**காலம் :** மாலை.

**மாந்தர் :** திருமலை.

**நூல் :** கோடீசுவரரின் பேச்சைக் கேட்டு, அவருடைய சூழ்ச்சியின்படி நடந்து, ஒரு நண்பனுடைய வாழ்க்கையைக் கெடுத்தாய். கோடீச்வரர் உனக்கு ஏதோ உதவி செய்யப் போகிருர் என்று நீ முத்துச்சாமிக்குத் தீமை செய்தாய்.

**திருமலை :** ஆ! (வருந்துதல், மனப்போராட்டம்)

**நூல் :** அப்படியானல் இத்தனை நாளாக உனக்குப் பகையாக இருந்தேனு? நீ கெட்டுப் போகவேண்டும் என்று இருந்தேனு?

**திருமலை :** ஆ ஆ! என்ன சொன்னேன்! என்ன செய்தேன்!

**நூல் :** அதற்காகப் பயந்து நானே முழு அயோக்கியனுக மாறவேண்டுமா?

**திருமலை :** அடடா! என்ன உறுதி! நெறி பிறழாத மனம்! உலகத்தைப் பொருட்படுத்தாத துணிவு!

**நூல் :** ஆமாம்! லஞ்சம் வாங்குகிற உத்தமர்களும் குறள் படிக்கிருர்கள், கீதை பைபிள் படிக்கிருர்கள்.

**திருமலை :** சீ சீ! இந்த வாழ்க்கையும் வாழ்க்கையா?

**நூல் :** போகட்டும் : வழிவழியாகவரும் ஏழைச் சமுதாயத்துக்குத் துரோகம் செய்துவிட்டு என்னுடைய ஒரு குடும்பம் வாழவேண்டுமா? வேண்டாம் அந்த வாழ்வு!

**திருமலை :** வேண்டாம் அந்த வாழ்வு! வாழ்வு!

நூரல் : அதைவிட அரைவயிறும் கால்வயிறும் உண்டு மடிந்துபோகலாமே.

திருமலை : உண்மைதான். மடிந்து போகலாம் ; மடிந்து போகலாம் !

நூரல் : நீ என்னைப் பற்றி என்ன சொன்னாலும் சரி ; நானும் அழிவேன் ; என்னை நம்பிய சுற்றமும் அழியட்டும். ஆனால் படித்த படிப்பைக் காற்றோடு விட்டு விட்டு நெறி தவறி நடக்க என்னால் முடியாது.

திருமலை : ஆம் ! ஒரேவழி, ஒரே உறுதி, ஒரே மனம் ; நான் கோழை ; நான்தான் கோழை. நான் பேதை ; நான்தான் பேதை.

நூரல் : அவன் சாதாரண மனிதன் அல்ல ; அப்படிப் பட்டவனுக்கு நீ துரோகம் செய்தாய். நம்பவைத்துக் கெடுத்தாய் !

திருமலை : (வருத்த மிகுதியால், புண்பட்ட நெஞ்சுடன் கலங்கி) என்ன செய்தேன் ! (நெற்றியைச் சுளித்தல்) என்ன செய்தேன் !

# ஏமாற்றம்

### காட்சி : 1

**இடம் :** ஒரு பெரிய வீட்டின் கூடம்.

**காலம் :** ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி.

**மாந்தர் :** தேவராசர் (வயது 50), அவருடைய மகன் வடமலை, அவருடைய நண்பர் சின்னப்பர் (வயது 55), வடமலையுடன் படிக்கும் மாணவி மங்களம் (பிறகு வருதல்.) வடமலை தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருத்தல். தகப்பனார் அவன் பெற்ற பரிசுகளையும் நற்சான்றுகளையும் மகிழ்ச்சியோடு நண்பருக்குக் காட்டுதல்.

**சின்னப் :** (தேவராசரைப் பார்த்து) இந்த வெள்ளிக் கிண்ணம் எதற்காகக் கொடுத்தார்கள் ?

**தேவராசர் :** பையன் எல்லாப் பிள்ளைகளையும்விட மிகவும் திறமையாகப் பேசினானும். அதற்காக. (வடமலையைப் பார்த்து) இல்லையா'ப்பா ?

**வடமலை :** (தலைநிமிர்ந்து பார்த்து) ஆமாம்'பா, பேச்சுப் போட்டியில் முதல்பரிசு அது. (மறுபடியும் படிக்கத் தொடங்குதல்.)

**சின்னப் :** அப்படியானால், இந்தத் தங்கப் பதக்கம் எதற்காக, தம்பி ?

**வடமலை :** அது கட்டுரைப் போட்டியில் வாங்கிய பரிசு. (மறுபடியும் தலை குனிந்து படிக்கத் தொடங்குதல்.)

தேவ : அதிலும் நம் பையனுக்குத்தான் முதல்பரிசு. எத்தனையோ பிள்ளைகள் கல்லூரியில் படிக்கிறார்கள், ஆயிரக் கணக்காக. ஆனாலும் இவன் ஒருத்தனுக்குத்தான் இந்தத் தங்கப் பதக்கம் கொடுத்தார்களாம்.

சின்னப் : இருக்கும், இருக்கும். தம்பி கெட்டிக்காரன். நன்றாகப் படி தம்பி! படிப்புத்தான் சோறு போடும். அதுதான் வேண்டும்.

தேவ : இந்த நற்சான்றுகள் பார்த்தாயா அய்யா ?

சின்னப் : இது வேறே எத்தனை ?

(வடமலை சிறிது நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் படிப்பில் ஆழ்ந்திருக்கிறான்.)

தேவ : படித்துப் பார் அய்யா.

சின்னப் : இருக்கட்டும். கண்ணாடி கொண்டுவரவில்லை.

தேவ : என் கண்ணாடி கொண்டுவரட்டுமா ?

சின்னப் : நாளைக்கு வரும்போது படித்துப் பார்ப்பேன். தம்பியின் திறமை எனக்கு எப்போதோ தெரியுமே. அவனைப் பற்றி நான் எவ்வளவோ புகழ்ச்சியாக மனைவியிடம் பேசுவது வழக்கம்.

தேவ : இன்னும் இரண்டு வாரத்தில் கடைசிப் பரீட்சை வருகிறதாம். அதில் தேறிவிட்டால் கெட்டிக்காரன் தான். நானும் அதைத்தான் சொல்லிவருகிறேன்.

சின்னப் : நீ ஒன்றுமே சொல்ல வேண்டாம். சொல்லாமலே படிக்கக்கூடிய நல்ல பிள்ளை. (மெல்ல எழுந்து நின்று புறப்படுகிறார்.)

தேவ : இதுவரையிலும் வகுப்பிலே எல்லாப் பாடத்திலும் முதல் மார்க்கு இவனுக்குத்தான். அப்படியே இதிலும்—.

சின்னப் : சந்தேகமே வேண்டாம். நான் சொல்கிறேன், பார். தம்பியின் நட்சத்திரமே வேறு. எதற்கும் தடையே இருக்காது. கலைமகளே நாக்கில் இருக்கும் போது—.

தேவ : என்னவோ, பார்க்கலாம்.

சின்னப் : சரி, நான் வரட்டுமா? நாளை மறுநாள் ஓய்வாக வருவேன்.

தேவ : (எழுந்து பின் சென்று) சரி ; போய்வா.
(திரும்பிவந்து அந்த வெள்ளிக் கிண்ணத்தையும் தங்கப் பதக்கத்தையும் பார்த்துப் பார்த்துப் பூரித்தல். அப்போது யாரோ கதவைத் தட்டுதல்.)
யார் அது ?

குரல் : மங்களம்.

தேவ : (எழுந்து போய்ப் பார்த்துத் திகைப்பு அடைதல்.)
வா அம்மா !
(மங்களம் கையில் ஒரு புத்தகத்துடன் உள்ளே வருதல் ; வடமலை திரும்பிப் பார்த்ததும் எழுந்து முகம் மலர்ந்து வரவேற்றல்.)

வடமலை : என்ன இது ? எதிர்பார்க்காமல்—.

மங்களம் : நீங்கள் என்ன இப்படிப் படிக்கிறீர்களே !
(இருவரும் உட்கார்ந்து பேசத் தொடங்குகிறார்கள். தேவராசர் பார்த்துப் பார்த்துத் திகைப்படைகிறார்.)

வடமலை : (தேவராசரைப் பார்த்து) இவர் என்னோடு கல்லூரியில் படிப்பவர் அப்பா, மங்களம் என்று பெயர்.
(மங்களம் எழுந்து அவருக்கு வணக்கம் கூறல்.)

தேவ : (திகைப்போடு) அப்படியா ? (உற்றுப் பார்த்தல்.)

மங்களம் : (வடமலையை நோக்கி) உங்கள் குறிப்புக் கொஞ்சம் கொடுப்பீர்களா ? பாடப்புத்தகம் எடுத்துப் படித்தால் ஏராளமாக இருக்கிறது. எப்படிப் படித்து முடிப்பது என்றே தெரியவில்லை. பயமாக இருக்கிறது.

வடமலை : ஆமாம், குறிப்பு எனக்கு வேண்டாமா? பரீட்சை இரண்டுவாரத்தில் இருக்கிறது. இந்த நெருக்கடியில் அதைக் கொடுத்துவிட்டு நான் என்ன செய்வது ?

மங்களம் : உங்களுக்கு என்ன ? இனிமேல் ஒன்றும் படிக்காமலே முதல் மார்க்கு வாங்க முடியுமே, படித்ததே போதுமே.

வடமலை : ஆனாலும், என்னதான் படித்தாலும், பரீட்சைக்கு முந்திய நாட்களில் படிப்பதுதான் நிற்கிறது. நம் நாட்டுப் பரீட்சை, நினைவைச் சோதிக்கும் பரீட்சைதானே ? அறிவை யார் பார்க்கிறார்கள் ? மூளையில் மறந்துபோகாமல் தேங்கியிருப்பது எவ்வளவு என்று தானே பார்க்கிறார்கள் !

மங்களம் : இருந்தாலும் எனக்கு நீங்கள் எப்படியாவது உதவி செய்ய வேண்டும்.

(தேவராசர் மங்களத்தை உற்று உற்றுப் பார்க்கிறார். கண்ணுடியை ஏற இறங்கத் தள்ளிப் பார்க்கிறார்.)

வடமலை : பாடப்புத்தகம் எல்லாம் மறுமுறை படித்து விட்டாய் அல்லவா ? இன்னும் என்ன கவலை ?

மங்களம் : அப்படியானால் கொடுக்க மாட்டேன் என்று வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். நான் உடனே போய்விடுவேன். (வருந்துவது போல் நடித்தல்.)

வடமலை : (சிறிது பொறுத்து) வகுப்புப் பரீட்சையாக இருந்தாலும் கவலைப்பட மாட்டேன். பல்கலைக் கழகப் பரீட்சை, ஆனர்ஸ் பரீட்சை என்றால், நானும் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டுமே.

மங்களம் : சரி ; அப்படியானால் ஒன்று செய்யுங்கள். உங்கள் குறிப்புகளில் ஒவ்வொரு பகுதியாகக் கொடுங்கள். ஒன்றைப் படித்து முடித்த பிறகு, எங்கள் வேலைக்காரனிடம் அதைக் கொடுத்தனுப்புவேன் ; அவனிடம் அடுத்த பகுதியைக் கொடுத்தனுப்புங்கள் ; படித்துத் திருப்புவேன். சரிதானே ?

வடமலை : சரிதான்.

மங்களம் : இதில் உங்கள் படிப்புக்கு இடையூறு ஒன்றும் இல்லையே ?

வடமலை : அப்படியே கொடுக்கிறேன்.
(ஒரு பகுதியை எடுத்துவந்து கொடுப்பதற்காக உள்ளே செல்கிருன்.)
(மங்களம் தேவராசருடைய கண்களைப் பார்த்து, உடனே வேறு பக்கம் திரும்புதல். தேவராசர் ஒருவகையான சிறு வெறுப்புடன் இங்கும் அங்கும் பார்த்தல். வடமலை குறிப்புடன் திரும்பி மங்களத்தின் கையில் தருதல்.)

மங்களம் : இது என்னிடம் எத்தனை நாள் இருக்கலாம் ?

வடமலை : இதற்கெல்லாம் பாண்டு பத்திரம் எழுதிக் கொண்டிருக்க முடியாது. நீயே எண்ணிப் பார்த்து, படித்து முடிந்ததும் அனுப்பிவிடு.

மங்களம் : (எழுந்து) மிகவும் நல்லது. நன்றி. வரட்டுமா ? வணக்கம். (தேவராசரைப் பார்த்து) வணக்கம்.

தேவ : (வாய் திறக்காமல் கை குவித்தல், பெருமூச்சு விடுதல்.)

வடமலை : வணக்கம். (எழுந்து பின்சென்று வழி அனுப்புதல், பிறகு திரும்பிவந்து மறுபடியும் படிக்க உட்கார்தல்.)

தேவ : (மகனைப் பார்த்து) இது யாரப்பா இந்தப் பெண் ?

வடமலை : சொன்னேனே அப்பா. கல்லூரியில் உடன் படிக்கும் பெண்.

தேவ : ஆமாம் ; எப்படி இவ்வளவு தைரியமாக வீட்டைத் தேடிக்கொண்டு வந்தாள் ?

வடமலை : வந்தால் என்ன'ப்பா ? வீட்டிலேயிருந்து கல்லூரிக்கு வரவில்லையா ? அப்படித்தான்.

தேவ : அது சரிதான். எப்படியோ உன்னிடம் பேசி உன் மனத்தை மாற்றி உன் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டாளே. பெண்கள் பொல்லாதவர்கள். எப்படிப்பட்டவர்களின் மனத்தையும் மாற்றி விடுவார்கள். அதனுல் நீ பெண்களோடு பழகாமல் இருப்பதே நல்லது, சொல்லிவைக்கிறேன்.

வடமலை : எனக்குப் பழக்கமாவது, கிழக்கமாவது. ஏதோ படிக்கக் கேட்டாள், கொடுத்தேன்.

தேவ : அது சரி ; நான் தடுக்கவில்லை. குடும்பப் பெண்ணாக, அடக்க ஒடுக்கமாக இல்லையே !

வடமலை : படித்த பெண்கள் வேறு எப்படி இருப்பார்கள்? குனிந்து தரையைப் பார்த்தபடி கலியாணப் பெண்கள் போல இருப்பார்களா ?

தேவ : அதைச் சொல்லவில்லை'ப்பா, சரி, சரி. நீ படி. (மகன் தலைகுனிந்து படிப்பதைக் கண்டு திரும்புதல் ; வியப்போடு மூக்கின்மேல் விரல்வைத்துத் தலை அசைத்தல்.)

## காட்சி : 2

**இடம் :** தேவராசர் வீட்டுக் கூடம்.

**காலம் :** மாலை 5 மணி.

**மாந்தர் :** தேவராசர், வடமலையின் நண்பன் அங்கப்பன், சின்னப்பர் (பிறகு வருதல்.)

தேவ : ஆமாம். பையன் எல்லா வகையிலும் நல்லவன் தான் ; கெட்டிக்காரன்தான். ஆனால் ஒன்றுமட்டும் உன்னிடம் கேட்க வேண்டும்.

அங்கப் : என்ன அது ? கேளுங்கள். தெரிந்தவரைக்கும் சொல்கிறேன்.

தேவ : யாரோ ஒரு பெண் மங்களம் என்று—.

அங்கப் : ஆமாம். கல்லூரியில் எங்களோடு படிப்பவள். உங்களுக்கு எப்படித் தெரியும் ?

தேவ : வடமலையைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு வந்திருந் தாள் ஒருநாள்.

அங்கப் : (வியப்போடு) வீட்டுக்கா ? யார் ? மங்களமா ? ஒல்லியான சிவப்பான பெண், மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு—அவளா ?

தேவ : ஆமாம். அந்தப் பெண்தான். வடமலையே சொன் னான். ஏதோ எழுதியது என்று புத்தகம் எடுத்துக் கொடுத்தான்.

அங்கப் : (திகைப்போடும் வெறுப்போடும் எழுந்து நின்று) அப்படியா ? அவளுக்கா குறிப்புப் புத்தகத்தைக் கொடுத்தான் ? வீட்டுக்கு வெளியே கொடுக்கமாட் டேன் என்று நான் கேட்டபோது பிடிவாதம் செய் தானே. அவளுக்குமட்டும் கொடுத்தானா ? பார்த்தீர் களா ?

தேவ : உடனே வேலையாளிடம் கொடுத்தனுப்புவதாகச் சொல்லி எடுத்துக்கொண்டு போனாள்.

அங்கப் : நான்மட்டும் திருப்பிக் கொடுக்க மாட்டேனா ? பார்த்தீர்களா ? என்ன இருந்தாலும் பெண் என்றால் யாரும் மனம் மயங்கிப் போகிறார்கள். வடமலையும்—.

தேவ : அது இருக்கட்டும். உனக்குத் தெரிந்தவரையில் சொல். அந்தப் பெண்ணோடு இவன் என் பழகுகிறான் ?

அங்கப் : (உட்கார்ந்து) அது தெரியாதா உங்களுக்கு ? நான் —(தயங்குதல்) - அதைப் பற்றி உங்களிடம் சொல்லக் கூடாது.

தேவ : இருக்கட்டும் அங்கப்பன் ! என்னிடம் சொல்லு. நான் வடமலையைக் கேட்கமாட்டேன். சொல்லலாம், சொல்லு.

அங்கப் : அந்தப் பெண் மங்களம் எங்களோடு பேசமாட்டாள். திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள். ஆனால் வடமலை சொன்னபடி கேட்பாள். அவனிடம் மட்டும் வலியப் பழகுவாள். மாணவர்களுக்கெல்லாம் வடமலை மேல் பெரிய பொறாமை. அவன் எல்லாவற்றிலும் முதல் பரிசும் முதல் மார்க்கும் வாங்குகிறானே என்பதால் அவ்வளவு பொறாமை இல்லை. ஆனால் மங்களம் அவன் சொன்னபடி கேட்கிறாளே என்றுதான் பொறாமை.

தேவ : இந்தப் பையன் என் அவளோடு பழக வேண்டும் ? என் பேச வேண்டும் ? என் இந்தத் தொல்லை ?

அங்கப் : கல்லூரியில் இப்படித்தான். முதலில் காதல், பிறகு கலியாணம்.

தேவ : (ஆத்திரத்தோடு எழுந்து) என்ன சொன்னாய் ? கலியாணமா ?

அங்கப் : அய்யோ ! நீங்கள் என்மேல் கோபித்துக்கொண்டால்—. நானா காரணம் ? உங்கள் பையனைக் கேளுங்கள். (எழுந்து) நீங்கள் கேட்டதால் சொன்னேன். இல்லாவிட்டால், எனக்கு என்ன ? நான் போகிறேன்.

தேவ : உன்மேல் கோபம் இல்லேப்'பா. உன்னை ஏன் கோபித்துக்கொள்வேன் ? நீ உட்காரு. என் பையனைத்தான் நான் கேட்கப் போகிறேன். (அங்கப்பன் உட்கார்தல். யாரோ கதவைத் தட்டுதல்.) யார் அது ? வா'ங்க.

(சின்னப்பர் உள்ளே வருதல்.)

ஓ ! நீயா ! வா'ய்யா. (மகிழ்ச்சியோடு) என்ன செய்தி?

சின்னப் : ஒன்றும் இல்லை. இந்தத் தம்பி யார் ?

தேவ : வடமலையோடு படிக்கும் பிள்ளை, நல்ல பிள்ளை, அங்கப்பன் என்று பெயர்.

சின்னப் : நீங்கள் ஏதோ பேசிக்கொண் டிருந்தீர்கள். நான் குறுக்கே வந்துவிட்டேன். (தேவராசருடைய முகத்தைப் பார்த்து) ஏன் ? ஏதோ முக வாட்டமாக இருப்பதாகத் தெரிகிறதே ! வடமலை எங்கே ?

தேவ : நல்ல வேளைக்கு வந்தாய். அவனைப் பற்றித்தான் பேசிக்கொண் டிருந்தோம்.

சின்னப் : எங்கே இப்போது ? எங்காவது வெளியூர்க்குப் போய்விட்டானா ?

தேவ : வெளியே உலாவப் போயிருக்கிறான். கல்லூரியில் இவர்களோடு படிப்பவள் ஒரு பெண் இருக்கிறாள். மங்களம் என்று பெயர். அவளை அவன் திருமணம் செய்துகொள்ளப் போகிறானாம்.

சின்னப் : யார் சொன்னது ? வடமலையா ?

தேவ : அவன் சொல்வானா ? அவ்வளவு தைரியம் வருமா ? மாணவர்களுக்குள் இந்தப் பேச்சு இருப்பதாகத் தெரிகிறது.

**சின்னப் :** வீண் பேச்சு. பள்ளிக்கூடத்தில் கல்லூரியில் படிக்கும்போது இப்படித்தான் ஏதாவது வம்புப் பேச்சுப் பேசுவார்கள். அப்புறம் ஒன்றும் நடக்காது.

**அங்கப் :** ஆனல் (உடனே பேச்சை நிறுத்தித் தயங்குதல்.)

**சின்னப் :** சொல்லு தம்பி, சொல்லு. அதனுல் என்ன ?

**அங்கப் :** மற்றவர்கள் பேசிக்கொள்வது, நான் கேள்விப்பட்டது சொல்கிறேன். வடமலேயும் அந்தப் பெண்ணும் பரீட்சை முடிந்ததும் திருமணம் செய்துகொள்ளப் போகிருர்களாம். கேட்டால், வடமலே பேசாமல் இருக்கிருன் ; மறுத்துச் சொல்வதில்லே.

**சின்னப் :** அவன் அப்படித்தான் இருப்பான். அவன் மற்றவர்களேப் போல் சாதாரணப் பையன் அல்ல.

**தேவ :** இருந்தாலும் இந்தக் காலத்தில் நம்ப முடியாது அய்யா. நாம் சொல்லித் தடுக்க வேண்டும்.

**சின்னப் :** அதுதான் எப்போதும் செய்யக் கூடாது, தெரியுமா ? எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போல் ஆகும். அப்புறம் உன் பிள்ளே உன் பிள்ளேயாக இருக்கமாட்டான். இதுபோல் எத்தனேயோ குடும்பங்களில் பார்த்திருக்கிறேன்.

**அங்கப் :** மெய்தானுங்க.

**தேவ :** (பெருமூச்சு) இப்படி நான் நினேக்கவே இல்லேயே.

**சின்னப் :** அப்படித்தான் நடந்தாலும் நாம் என்ன செய்ய முடியும் ? அன்றைக்கு அந்தப் பிரமன் தலேயில் எழுதி வைத்ததை நாம் மாற்ற முடியுமா ? விதி யாரைத்தான் விடும் ?

**தேவ :** இருந்தாலும்—.

**சின்னப் :** இன்னென்று சொல்கிறேன். இன்னும் பத்து நாளில் பரீட்சை நடக்கப் போகிறது. அதில் நன்ருக எழுதவேண்டும் என்று இரவு பகலாகப் படிக்கிருன். இப்போது நீ இதைப் பற்றி ஏதாவது கேட்டால், உடனே அவனுடைய மனம் கெட்டுப்போகும். படிப்

பில் மனம் செல்லாது. வீண் தொல்லை யாகிவிடும். ஆகவே இன்னும் மூன்று வாரம் மூச்சைப் பிடித்துக் கொண்டிரு. பிறகு பார்க்கலாம்.

**அங்கப் :** (எழுந்து) நான் வேறோர் இடத்திற்குப் போக வேண்டும். வரட்டு'ங்களா ?

**தேவ :** தம்பி ! உன்மேல் எனக்கு ஒன்றும் கோபமோ வருத்தமோ கிடையாது.

**அங்கப் :** நான் சொன்னதாக வடமலையிடம் சொல்லாதீர் கள். வணக்கம்.

**தேவ :** வணக்கம். அவனிடம் சொல்லமாட்டேன். **(அங்கப்பன் விடைபெற்றுப் பிரிந்த பிறகு சின்னப்பரை உற்றுப் பார்க்கிறார்.)**

**சின்னப் :** இந்த மாணவன் போகட்டும் என்று இருந்தேன். அவன் இருக்கும்போது சொன்னால் நல்லது அல்ல.

**தேவ :** என்ன அது ?

**சின்னப் :** அந்தப் பெண் மங்களம் எனக்கு உறவுதான். நல்ல பணக்காரக் குடும்பம். பெரிய வியாபாரி அவ ளுடைய தகப்பனார். உலகமே தலைகீழாகப் புரண்டா லும் தம்முடைய பெண்ணை ஏழைக்குக் கொடுக்கமாட் டார். நீ இதைப் பற்றிக் கவலையே பட வேண்டாம்.

**தேவ :** நீ சொல்வது உண்மைதான். இருந்தாலும், இவன் அறியாத பையன். அந்தப் பெண் கெட்டிக் காரி. கொஞ்சமாவது அச்சம் நாணம் ஒன்றும் காணோமே.

**சின்னப் :** நாணமாவது! அச்சமாவது! நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம். அப்படி யாரோ பாரதி யாராமே, அவர் பாடியிருக்கிறாராம்.

**தேவ :** அப்படியானால் பெண்கள் கல்லூரியில் படித்துப் பயன் என்ன ? சே ! சே !

**சின்னப் :** அஞ்சாமல் வாழ்வதற்குக் கற்றுக்கொள்கிறார் கள். அதுதான் பயன்.

தேவ : இப்படிப்பட்ட ஒரு பெண் எனக்கு மருமகளாக வந்தால், அப்புறம் என் கதி—?

சின்னப் : எத்தனையோ குடும்பங்களில் இப்போது வாழ வில்லையா ? பழகிவிட்டால் குறையாகத் தெரியாது.

தேவ : என்ன'ய்யா ! வயதுப் பெண் ஒருத்தி வீட்டை விட்டு இங்கே வந்து ஒரு பையனேடு பேசிக்கொண் டிருப்பதென்ருல்,என்ன வேடிக்கை இது ! நம் காலத் தில் இப்படி நடக்குமா ?

சின்னப் : சரிதான். எங்காவது உண்டா? எழெட்டுக் குழந்தை பிறந்த பிறகும் என் மனைவி தனியே போக அஞ்சுகிருள்.

தேவ : அதைச் சொல்கிருயே ! எனக்குத் திருமணமாகிப் பத்து வருசம் வரைக்கும் நானும் என் வீட்டுக்காரியும் பேசியதே இல்லை. எங்கள் அப்பா வீட்டில் இருந்தால், நான் எப்போதும் அவளோடு பேசவே மாட்டேன். அம்மா இருந்தாலும் கொஞ்சம் அச்சம்தான்.

சின்னப் : நாம் எல்லாரும் கருநாடகம். இப்போது கடைத் தெருவில் கணவனும் மனைவியும் கை கோத்துப் பேசிக்கொண்டு போகிருர்கள்.

(யாரோ கதவைத் தட்டும் ஒலி.)

தேவ : யார் அது ? உள்ளே வா'ங்க.

வந்தவன் : வடமலை இல்லைங்களா ?

தேவ : இல்லை. நீ யார் ? எங்கிருந்து வந்தாய் ?

வந்தவன் : திரிகூட முதலியார் வீட்டிலிருந்து வரு கிறேன். மங்களம்மாள் இதைக் கொடுத்தனுப்பிப் பதில் வாங்கிவரச் சொன்னுர்கள்.

சின்னப் : அதுதான், அந்தப் பெண், கல்லூரியில் படிக் கிறதே அந்தப் பெண்.

தேவ : ஓ ஓ ! சரிதான். அவன் எங்கோ வெளியே போயிருக்கிருன். கொடுத்தால் வந்தபிறகு சேர்த்து விடுகிறேன்.

வந்தவன் : இதைக் கொடுங்கள். நாளைக்காலையில் வருவேன். அப்போது பதில் வாங்கிக்கொண்டு போவேன். (கையில் இருந்த உறையைக் கொடுக்கிறான்.) வரட்டுங்களா ?

தேவ : போய் வா.

(வந்தவன் திரும்பிப் போகிறான். தேவராசரும் சின்னப்பரும் அந்த உறையை உற்றுப் பார்க்கிறார்கள்.)

சின்னப் : இதைப் பிரித்துத்தான் பார்த்தால் என்ன ? உண்மை தெரிந்துவிடுமே !

தேவ : (உறையை அவர் கையில் கொடுத்து) நீயே பிரி. பார்க்கலாம்.

சின்னப் : (பிரித்து எடுக்கிறார். உள்ளே குறிப்புப் புத்தகமும், ஒரு கவரும், அழகான பூ வேலைப்பாடு உள்ள கைத்துண்டும் இருப்பதைக் கண்டு) சரிதான்.

தேவ : (கைத்துண்டை வாங்கிப் பிரித்துப் படித்து) அந்தப் பெண்ணின் பெயர் போட்ட கைத்துண்டு இது. இதை ஏன் கொடுத்தனுப்பி யிருக்கிறாள் ? சின்ன உறை வேறே இருக்கிறதா ? (அதையும் அவர் கையிலிருந்து வாங்கிக்கொள்ளுதல்.) ஏதோ உறவு இருப்பதாகத்தான் தெரிகிறது.

சின்னப் : இருந்தாலும் இன்னும் இரண்டு மூன்று வாரம் பேசாமல் பொறுத்துக்கொள். பரீட்சைப் படிப்புக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவன்மனத்தைக் கெடுக்கக் கூடாது.

தேவ : (பெரிய உறையில் எல்லாவற்றையும் வைத்து,) பார்க்கலாம். இன்னும் மூன்று வாரம் பொறுக்கலாம்.

சின்னப் : அந்தப் பெண்ணும் தைரியமான பெண்தான். தகப்பனாரும் செல்லம் கொடுத்துப் பெண்ணின் விருப்பம்போல் விடுகிறார். எதுவும் நம் கையில் இல்லை. விதிப்பயன் இருந்தால் நீயும் நானும் தடுத்துப் பயன் இல்லை.

தேவ : இருந்தாலும் என்ன அநியாயம்! இவனுக்கென்றே ஊரில் என் தங்கைமகள் தங்கப் பதுமைபோல் வளர்ந்துவருகிருள். அவளே விட்டுவிட்டு, முன்பின் தெரியாத ஒரு குடும்பத்தில்—சே! சே! அப்படி நடப்பதாக இருந்தால் இவன் மகனு? நான் அப்பனு? பார்க்கலாம்.

சின்னப் : பொறு அய்யா. அவசரப்படாதே. எல்லாம் தலையில் எழுதியபடி நடக்கும். நாம் ஆத்திரப்பட்டுப் பயன் இல்லை.

தேவ : இருந்தாலும் என்ன'ய்யா! 'பழங் கால்வாயைத் தூர்க்காதே, புதுக் கால்வாயை வெட்டாதே' என்று சொல்லியிருக்கிருர்கள் பெரியோர்கள்.

சின்னப்: உலகமே இப்போது புது வழியில் போய்க்கொண் டிருக்கிறதே. பழைய மொழி இப்போது செல்லுபடி ஆகுமா? எதற்கும் பொறு. (எழுந்து) பார்க்கலாம். வரட்டுமா? (கைகுவித்து) வணக்கம். (பிரிகிருர்.)

தேவ : (சின்னப்பர் வெளியே சென்றபிறகு மெல்லப் பெரிய உறையிலிருந்து குறிப்பையும், கைத்துண்டையும், சின்ன உறையையும் எடுத்துப் பார்த்து மருள்கிருர்; வெறுப்புக் கொள்கிருர். சின்ன உறையை எடுத்துப் பார்க்கிருர். அதன்மேல் உள்ள எழுத்துக்களைப் படிக்கிருர்.)

**அன்பர் திரு. வடமலைக்கு**

(தலை அசைத்தல். நெற்றியைச் சுளித்துப் பார்த்தல். சிறு கத்தியை எடுத்து அந்தச் சின்ன உறையை மெல்லப் பிரித்துக் கடிதத்தை எடுத்துப் படிக்கிருர்.)

தூல் : **அன்புள்ள காதலர்க்கு**

இத்துடன் உள்ள கைத்துண்டு என் அன்பின் காணிக்கை. ஏற்றுக்கொள்ளுங்கள். பரீட்சை வரைக்கும் நீங்கள் எங்கள் வீட்டிலே இருந்து படிக்கக் கூடாதா? உங்கள் வீட்டில் உள்ள வசதி போதாது. இங்கே உங்களுக்குத் தனி ஏற்பாடுகள் செய்வேன்.

நான் படிப்பதற்கும் உதவியாக இருக்கும். அம்மா விடம் சொன்னேன். ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் அப்பா மிகவும் நல்லவர் என்று தெரிகிறது. தடை செய்ய மாட்டார். ஆகையால் நீங்கள் மறுக்கக் கூடாது. மிகவும் நன்றி.

உங்கள் அன்புக்குரிய

**மங்களம்**

**தேவ :** (வெறுப்பும் திகைப்பும் சினமும் மாறி மாறி முகத்தில் விளங்கல். சிறிது நேரம் கழித்து) உங்கள் அப்பா மிகவும் நல்லவர் !—
(இகழ்ச்சிக் குறிப்பு. பிறகு சினம்.)

## காட்சி : 3

**இடம் :** திரிகூட முதலியாரின் வீடு.

**காலம் :** மாலை 6 மணி.

**மாந்தர் :** மங்களம், அவளுடைய தாய்.

மங்களம் படித்துக்கொண்டிருப்பதை விட்டுப் புத்தகத்தை மூடி ஏதோ சிந்தனையில் ஆழ்தல். அவளுடைய தாய் வெற்றிலை பாக்கு மென்று கொண்டே அவளைப் பார்த்தல்.

**தாய் :** பாவம்! நீயும் உன்னால் ஆனவரையில் படித்துப் பார்க்கிறாய். பாடம் தெரியாதபோது புத்தகத்தை மூடிவிட்டுச் சோர்ந்து போகிறாய். பாவம்.

**மங்களம் :** என்ன செய்வது அம்மா!

**தாய் :** அதற்குத்தான் அந்தப் பிள்ளை வடமலை இங்கேயே வந்து உன்னோடு இருந்து படிக்கும் என்று சொன்னாய். அந்தப் பிள்ளையும் வரக்காணோம், பாவம்.

**மங்களம் :** நாம் கட்டாயப் படுத்த முடியுமா அம்மா.

**தாய் :** முடியாது, முடியாது. ஆனால் நீ தனியாகப் படித்து முடியுமா? இரண்டு பேராக இருந்தால் தெரிந்தது தெரியாதது கலந்து படித்துக்கொள்ளலாம்.

**மங்களம் :** அவர்தான் வரவில்லையே அம்மா.

**தாய் :** வராவிட்டால் போகட்டும். நீ தெரிந்தவரைக்கும் படி'மா. வீணாக உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே. நமக்கெல்லாம் படிப்பு முக்கியம் அல்ல; உடம்புதான் முக்கியம். உடம்பு கெடாமல் காப்பாற்றிக்கொள்ள'ணும். பாழும் பரீட்சை எப்போது முடியுமோ, அப்போதுதான் உனக்கும் இந்தக் கவலை ஒழியும்.

**மங்களம் :** (மறுபடியும் புத்தகத்தைத் திறந்து படிக்க மனம் இல்லாமல் மூடிவைத்தல்.) வேலையாள் எங்கே போயிருக்கிருன்'மா.

**தாய் :** எங்கேயோ தெரியவில்லை. புத்தகத்தை ஏன்'மா மறுபடியும் மறுபடியும் கையில் எடுக்கிருய் ? விட்டுத் தொலை'மா.

**மங்களம் :** பரீட்சை இருக்கும்போது—!

**தாய் :** அடி பைத்தியமே! பரீட்சை பரீட்சை என்று பைத்தியம் பிடித்த பெண்ணாக இருக்கிருயே. நாங்கள் எல்லோரும் பரீட்சை படித்துவிட்டுத்தான் தாலி கட்டிக்கொண்டோமா? நான் பரீட்சை படிக்காமலே கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லையா ? குழந்தை குட்டி பெறவில்லையா ? வைரத்தோடு, வைர மூக்குத்தி, வைர மோதிரம் எல்லாம் போட்டுக்கொள்ளவில்லையா ?

**மங்களம் :** நீ என்னேடு பேசாதே'மா. நான் படிக்க வேண்டும். சும்மா தொண தொண என்று—.

**தாய் :** (எழுந்து) இப்போதே போய்விடுகிறேன். நீ எப்படியாவது போ. பெண்ணுக்கு என் படிப்பு என்று அந்தக் காலத்திலேயே உங்கள் அப்பாவுக்கு எவ்வளவோ சொன்னேன். அவர் கேட்டாரா ? (வேறு இடத்துக்குப் போய்விடுதல்.)

**மங்களம் :** சரி சரி, (தன் தோற்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டு மறுபடியும் அதிலேயே வைத்துவிடுதல். பெருமூச்சு.)

## காட்சி : 4

**இடம் :** தேவராசர் வீடு.

**காலம் :** நள்ளிரவு.

**மாந்தர் :** தேவராசர், வடமலை. இருவரும் அயர்ந்து உறங்குதல்.

வடமலை : (உறக்கத்தில் வாய்பிதற்றுதல், புரளுதல்.) மங்களம் கடிதம்கூட எழுதவில்லையே ! மங்களம் !

தேவ : (உறக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தல்.) வடமலை !

வடமலை : (உறக்கத்திலேயே) மங்களம்! மறந்துவிட்டாயா ?

தேவ : அட ! பையா ! வாய் பிதற்றும் அளவுக்கு வந்து விட்டாயா ?

வடமலை : நீ சொன்னதெல்லாம் பொய்யா ! ஏமாற்றினையா? (பிறகு பொருள் தெரியாத ஒலிகளை முணமுணத்தல்.)

தேவ : (தலையை அசைத்து நெற்றியைச் சுளித்துச்) சரிதான், சரிதான். (அமைதியாக உட்கார்ந்து சிந்திக்கிறார், தலையை அசைத்துக்கொள்கிறார்.)

## காட்சி : 5

**இடம் :** சின்னப்பரின் வீட்டை அடுத்த தோட்டம்.

**காலம் :** காலை 9 மணி.

**மாந்தர் :** சின்னப்பர், தேவராசர், சின்னப்பருடைய தோட்டக்கார முனியன்.

சின்னப்பர் செடி கொடிகளைச் சுற்றிப் பார்க்கும் நேரத்தில் தேவராசர் எதிர்பாராமல் வருதல்.

தேவ : என்ன ! காலையில் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் வேலையில் இருப்பதாகத் தெரிகிறது.

சின்னப் : சும்மா இப்படியே பார்க்கிறேன். வீட்டுக்குக் கொஞ்சம் வெண்டைக்காய் கத்தரிக்காய் பச்சை மிளகாய் கொண்டு போகலாமே !

தேவ : இருக்கட்டும். அதற்கென்ன ?

சின்னப் : டே ! முனியா !

முனியன் : (தொலைவிலிருந்தே குரல் கொடுத்துக் கொண்டு வருகிறான்.) ஏன் சாமி ! இதோ வந்துவிட்டேனுங்க. (வந்து எதிரில் நின்று) ஏன் சாமி !

சின்னப் : அய்யாவுக்குப் பச்சைப் பசேல் என்று நல்ல காய்களாகப் பார்த்துப் பறித்து ஒரு பையில்போட்டுக் கொண்டுவா'டா.

தேவ : இருக்கட்டும். அதற்கென்ன இப்போது அவசரம்? (முனியன் போகிறான் காய் பறிக்க.) நான் வந்தது வேறு வேலையாக.

சின்னப் : என்ன அவ்வளவு அவசரம்? என்ன வேலை ? எங்காவது வெளியே புறப்பட்டுப் போக'ணுமா ?

தேவ : அப்படி ஒன்றும் இல்லை. பையனைப் பற்றிக் கொஞ்சம் பேச'ணும்.

**சின்னப் :** நம்ம வடமலையைப் பற்றித்தானே? நான் போன வாரத்தில் பார்த்தேனே. பரீட்சை எல்லாம் நன்றாக எழுதியிருப்பதாகச் சொன்னான். மே மாதத்தில் முதல் வாரத்தில் முடிவு வந்துவிடும் என்று சொன்னான். அவனைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

**தேவ :** அந்தப் பரீட்சைக்குப் படித்தபோது அதே கவலையாக இருந்தான். இரவெல்லாம் தூக்கத்தில் படித்த பாடங்களையே வாய்பிதற்றிக்கொண் டிருந்தான். இப்போது—.

**சின்னப் :** வேறு என்ன புதுக்கவலை?

**தேவ :** இன்னொரு பரீட்சை வந்திருக்கிறது. இப்போது அதைப் பற்றியே வாய் பிதற்றுகிறான்.

**சின்னப் :** என்ன! என்னவோ கிண்டல் செய்கிறாய். சொல்லய்யா.

**தேவ :** அதுதான், திருமணம் பற்றி.

**சின்னப் :** திருமணமா? என்ன அவசரம்! மே மாதத்தில் பரீட்சை முடிவு தெரிந்துவிடும். பிறகு ஒரு நல்ல வேலை பார்க்க வேண்டும். அடுத்தது திருமணம்தான். உன் தங்கையின் பெண் இருப்பதாகச் சொன்னாயே.

**தேவ :** அந்தப் பெண்ணைப் பற்றிப் பேச்சே இல்லை. தங்கையின் வீட்டுக்குப் போய்வரும்படியாக நாலைந்து நாள் சொல்லிப் பார்த்தேன். அவன் ஊமையாக இருக்கிறான். என்ன செய்வது?

**சின்னப் :** ஆமாம்! என்னவோ பரீட்சை, வாய் பிதற்றுகிறான் என்று சொன்னாயே!

**தேவ :** அதுதான், அந்தப் பெண் மங்களம் என்று ஒருத்தி, அவளைப் பற்றி.

**சின்னப் :** அந்தப் பெண்ணா? அவளைப் பற்றித் தூக்கத்தில் கனவு காண்கிறானா? அட! பைத்தியக்காரப் பையனே! இருக்கட்டும். பேச்சே எடுக்காதே. சும்மா இரு.

தேவ : இருந்தால்—.

சின்னப் : வேறு ஏற்பாடு நடந்துவிடும். அப்புறம் தானே மறந்துவிடுவான். தானே வழிக்கு வருவான். அது தான் இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வழக்கம்.

தேவ : (பெருமூச்சுவிட்டு) என்ன'ங்க !

சின்னப் : சும்மா இரு. சொல்கிறேன்.

தேவ : அந்தப் பெண்ணும் இவனையே விரும்பியிருப்பதாகச் சொல்கிறார்களே !

சின்னப் : உனக்கு உலகமே தெரியாது. பணக்காரக் குடும்பங்களில் பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும், அவர்களுக்குப் பணம்தான் முக்கியம். மற்றதை எல்லாம் கொஞ்ச நாளில் மறந்துவிடுவார்கள். அவர்களிலும் நல்லவர்கள் உண்டு, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அந்த நல்ல பண்பு, நல்ல கொள்கை, நல்ல குறிக்கோள் எல்லாம் கொஞ்சநாள் நிற்கும் ; பிறகு பணம் ஒன்றுதான் வெற்றி பெறும்.

தேவ : அப்படி மாறிவிட்டால் நல்லதுதான்.

சின்னப் : கட்டாயம் மாறிவிடும். கவலைப் படாதே. நம்மைப் போல் ஏழைகளுக்குத்தான் பண்பு, கொள்கை, குறிக்கோள் எல்லாம். மானத்துக்காக உயிரை விடுவதும் இந்தக் குடும்பங்களில்தான். எல்லாப் பைத்தியக்காரத் தன்மையும் நம்மைப் போன்றவர்களுக்குத் தான். பணக்காரர்களுக்கு வாழ்க்கை ஒன்றுதான் வேண்டும். வாழ்க்கைக்காக மற்ற எல்லாவற்றையும் தேவைக்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்வார்கள்.

தேவ : காதல் பொல்லாதது என்று சொல்வார்களே.

சின்னப் : காதலும் நமக்குத்தான் மலையாய்த் தோன்றும். ஆனால் அவர்களுக்குக் காதலும் மாறக்கூடிய காசு தான் ; விலை கொடுத்து வாங்கக்கூடிய சரக்குத்தான். காதல் கடவுள் எல்லாம் அவர்களுக்கு அப்படித்தான்.

தேவ : அந்தப் பெண் எப்படியோ ?

சின்னப் : நல்லவளாக இருக்கலாம். உறுதியாக இருக்கலாம். ஆனல் பணம் பண்படுத்திவிடும். அவள் மட்டும் அல்ல ; பணம் வந்து சேர்ந்துவிட்டால் நீயும் அப்படித்தான் ; நானும் அப்படித்தான்.

தேவ : இவனுக்கும் அவளுக்கும் கடிதப் போக்குவரவு இருக்கும் என்று தெரிகிறது.

சின்னப் : இந்தக் காலத்தில் கடிதம் எழுதாமல் இருப்பார்களா ? கருநாடகப் பேச்சுப் பேசுகிருயே ! என்ன இருந்தாலும், சரி. இன்னும் பத்துநாள் பொறு. எல்லாம் தெரிந்துவிடும்.

தேவ : என்ன அது ? உனக்கு ஏதோ தெரியும் போல் இருக்கிறதே !

சின்னப் : கடிதம் கிடிதம் ஒன்றும் தெரியாது, ஆனல் எங்கள் கம்பெனி டைரக்டர் பாக்கியநாதர் இருக்கிருரே, அவர் அந்தப் பெண்ணைக் கேட்டு ஆள் அனுப்பியிருக்கிருர்.

தேவ : அவருடைய பையனுக்கா ? அவனுக்குத் திருமணம் ஆய்விட் டிருக்குமே.

சின்னப் : பையனுக்குத் திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் ஆய்விட்டன.

தேவ : வேறு யாருக்காக ?

சின்னப் : அவருக்கேதான்.

தேவ : அவருக்கு வயது ஐம்பதுக்குமேல் இருக்குமே.

சின்னப் : இருந்தால் என்ன ?

தேவ : மனைவி இல்லையா ?

சின்னப் : மனைவி இறந்து இரண்டு மாதம் ஆச்சே !

தேவ : இரண்டுமாதம் தானே ? என் மனைவி இறந்து எழு வருசம் ஆகியும் நான் இல்லையா ?

சின்னப் : நீ ஏழை ! உனக்கு இதிலும் ஏதாவது கொள்கை கிள்கை இருக்கலாம்.

தேவ : அந்தப் பெண்ணை அவருக்குக் கொடுப்பார்களா ?

சின்னப் : அவருக்குக் கொடுக்காவிட்டாலும், அவருடைய இருபது பங்களாவுக்குக் கொடுப்பார்கள்; இரண்டு கோடிச் சொத்துக்குக் கொடுப்பார்கள்.

தேவ : அய்யோ, பாவம்!

சின்னப் : பார்த்தாயா? மறுபடியும் பழைய ஏழையின் பேச்சே வந்துவிட்டதே!

முனியன் : (அப்போது ஒரு பை நிறையக் காய்கள் கொண்டு வந்து தேவராசர்கையில் தந்து) கொத்தமல்லி கொண்டு வரட்டுங்களா?

தேவ : வேண்டாம், வேண்டாம்; இதுவே போதும்.

சின்னப் : "அய்யோ பாவம்!" என்று சொன்னுயே. யாருக்காக இவ்வளவு இரக்கம்?

தேவ : அந்தப் பெண்ணைப் பற்றித்தான்! அறியாத பெண்! பாவம்!

சின்னப் : சரி, அப்படியானல், இவ்வளவு இரக்கம் இருந்தால் உன் பையனுக்குக் கட்டிக்கொள். நான் வேண்டுமானல் போய்ச் சொல்லி ஏற்பாடு செய்வேன்.

தேவ : சரி, போதும் உன் வம்புப் பேச்சு; உனக்கு உறுதியாகத் தெரிந்ததும் வந்து சொல்லய்யா. வரட்டுமா? வணக்கம். (விடை பெறுகிருர்.)

சின்னப் : வணக்கம். கவலையே வேண்டாம் அய்யா.

## காட்சி : 6

**இடம் :** கலைப்பண்ணை என்னும் கட்டிடம்; வட்டமேசை; மேசைமேல் காப்பிக் குவளைகள்.

**காலம் :** மாலை 5 மணி.

**மாந்தர் :** பாக்கியநாதர், மேசையைச் சுற்றி அவருடைய நண்பர்களின் கூட்டம், வேலையாள்.

வேலையாள் : (காகித உறை ஒன்றைப் பாக்கியநாதர் முன்னே நீட்டி) இது அச்சகத்திலேயிருந்து வந்ததாம். இதைமட்டும் உடனே பார்த்துத் திருப்பிக்கொண்டுவரச் சொன்னார்கள்.

பாக்கியநாதர் : யார் சொன்னது ?

வேலை : மானேஜர் அய்யா.

பாக்கிய : சரி, கொடு. பத்துநிமிஷம் பொறுத்து வந்து வாங்கிக்கொண்டு போ.

(உறையைத் திறந்து பிரிக்கிறார். மெல்லிய துணி போன்ற காகிதத்தில் பொன்னெழுத்துக்களால் அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழைப் பிரித்து முகமலர்ச்சியோடு பார்க்கிறார்.)

நண்பர் ஒருவர் : என்ன'ய்யா அது ? தடபுடலாக இருக்கிறதே! திருமண அழைப்பிதழ் அச்சுக்குக் கொடுத்துவிட்டீர்களா ?

மற்றொருவர் : கொடுத்து மூன்றுநாள் ஆயிருக்கும். கடைசிப் ப்ரூப் வந்திருக்கிறதோ, என்னவோ ?

பாக்கிய : அச்சாவதற்கு முன், இந்தக் காகிதம் நன்றாக இருக்கிறதா என்று பார்க்க அனுப்பியிருக்கிறார்கள்.

முதல் நண்பர் : இதைவிட விலையுயர்வான காகிதம் கிடைக்கவில்லையா ?

இரண்டாம் : இதைவிட விலையுயர்வான காகிதம் மார்க் கெட்டில் இருந்திருந்தால் இவருடைய மானேஜருக்கு அகப்படாமல் போயிருக்குமா ?

பாக்கிய : மானேஜர் காகிதத்துக்காக ஒருநாள் எல்லாம் சென்னை முழுதும் தேடி அலைந்தார். இதைவிட உயர்வான காகிதம் இல்லை. அழைப்பிதழ் ஒன்று, காகித விலை அச்சுக்கூலி உட்பட என்ன ஆகிறது தெரியுமா ? நாலணா.

முதல் : நாலணா ! அப்பாடா ! (கண்ணை விழித்து உதட்டைப் பிதுக்குதல்.)

இரண்டாம் : அழைப்பிதழைப் பார்த்தாலே திருமணம் எவ்வளவு தடபுடல் என்று தெரிந்துவிடும்.

முதல் : எத்தனை நாள் கச்சேரி என்று சொன்னீர்கள் ?

இரண்டாம் : அதுதான் நேற்றுச் சொன்னாரே ! நாட்டியக் கச்சேரி நான்கு நாள். பாட்டுக் கச்சேரி மூன்று நாள்.

பாக்கிய : (முகத்தில் புன்முறுவலோடு) இவ்வளவு வேண்டாம் என்றுதான் எனக்கு எண்ணம். சொன்னால் மற்றவர்கள் கேட்கவில்லை.

முதல் : பார்க்கலாமா ? (அதைப் பெறக் கை நீட்டுகிறார்.)

இரண்டாம் : சும்மா பார்க்கலாம். (அவரும் கை நீட்டுதல்.) கொடுங்கள்.

பாக்கிய : (முதல் நண்பர் கையில் கொடுத்து) என்ன அவசரம்? ஒவ்வொருவராகப் பாருங்கள்.

முதல் : (கையில் பெற்றுக்கொண்டு பிரித்துப் பார்த்து) அப்பா'டா ! என்ன இது ! வாழையிலை போல் அவ்வளவு அகல நீளமாக இருக்கிறதே.

பாக்கிய : வாழையிலையே புதுவகையாகப் போட ஏற்பாடு நடக்கிறது.

இரண்டாம் : அது எப்படி ? இப்போது சொல்ல மாட்டீர்களோ ?

பாக்கிய : உங்களிடம் சொன்னால் என்ன ? ஒவ்வொரு வாழையிலையும் முழு இலையாக இருக்க வேண்டும். குறைந்தது ஐந்தடி நீளம் இருக்கவேண்டும். அப்படிப் பத்தாயிரம் இலைகள் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வர ஏற்பாடு நடக்கிறது. ஒவ்வோர் இலையிலும் முப்பத்திரண்டு கறிவகை வைப்பதற்கு இடம் வேண்டும் அல்லவா ?

இரண்டாம் : உங்கள் வயது என்ன ?

பாக்கிய : நாற்பத்தெட்டு.

இரண்டாம் : அப்படியானால் ஒரு யோசனை.

பாக்கிய : என்ன சொல்லுங்கள் அய்யா.

இரண்டாம் : ஒவ்வோர் இலையிலும் நாற்பத்தெட்டு வகைக் கறி இருந்தால் நல்லது என்று சொல்கிறேன்.

பாக்கிய : அதுவும் நல்லதுதான். மானேஜர் வரட்டும்.

முதல் : (அழைப்பிதழையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்து) இங்கே மணமகளின் பெயருக்குப் பக்கத்தில் கொஞ்சம் இடம் விட்டிருக்கிறதே, அது ஏன் ?

பாக்கிய : ஏதோ, படியுங்கள். (காப்பிக் குவளையை எடுத்து அருந்துகிறார்.)

முதல் : திரிகூட முதலியாரின் மகள் திருநிறைச் செல்வி மங்களம் என்பதற்குப் பக்கத்தில் அவ்வளவு இடம் விட்டிருக்க வேண்டாமே.

பாக்கிய : (கலகல என்று சிரித்து) அதுவா ? சரிதான். நான் என்னவோ என்று பார்த்தேன்.

முதல் : (பிஸ்கத்து எடுத்து வாயில் வைத்தபடியே) என்ன'ங்க அது ? (பிஸ்கத்தைத் தின்கிறார்.)

பாக்கிய : வேறொன்றும் இல்லை. அந்தப் பெண் பி. ஏ. ஆனர்ஸ் என்று ஒரு பரீட்சைக்குப் போயிருக்கிறாளாம். நாளை மறுநாள் பரீட்சை முடிவு தெரியுமாம். பரீட்சையில் வெற்றி என்று தெரிந்தபிறகு, பி. ஏ. ஆனர்ஸ்

என்ற எழுத்துக்களைச் சேர்ப்பதற்காக இடம் விட்டிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

இரண்டாம் : ஓ ஓ! பி. ஏ. ஆனர்ஸ் பட்டமா? அது வேண்டாங்க. உங்கள் பெயருக்குப் பக்கத்தில் பட்டம் ஒன்றும் இல்லாதபோது, மணமகளின் பெயருக்குப் பக்கத்தில்—.

பாக்கிய : (சிறிது செருக்கோடும் வெறுப்போடும்) இருந்தால் என்ன? என்னை அந்தக் காலத்தில் ஆறாவது படிக்கும்போதே நிறுத்திவிட்டார்கள். அதனால் என்ன? எனக்குப் பட்டம் இல்லை என்று எண்ணிவிடுவார்களா? நம் கம்பெனிக்கு டை-ர-க்-ட-ர்- என்று ஐந்து எழுத்து என் பெயருக்குப் பக்கத்தில் இருக்கும் போது—.

இரண்டாம் : சரிதானுங்க. (காப்பிக் குவளையை எடுத்துக் குடிக்கிறார்.)

## காட்சி : 7

**இடம் :** கடற்கரை, பல்கலைக்கழகத்திற்கு எதிரே பூங்காவின் திண்ணை.

**காலம் :** மாலை 5 மணி.

**மாந்தர் :** வடமலை, அங்கப்பன்; அந்தோணி பிறகு வருதல்.

(திண்ணை பூஞ்செடிகளுக்கு இடையே விளங்குகிறது. வடமலையும் அங்கப்பனும் பல்கலைக்கழகத்து அறிக்கையைப் பார்த்துவிட்டு, தேர்வில் வெற்றி பெற்றதைக் குறித்து மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு வருகிறார்கள். வந்ததும் திண்ணையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு முகமலர்ந்து உட்காருகிறார்கள். சிறிது தொலைவில் ஒரு குரல் கேட்கிறது. இருவரும் திரும்பிப் பார்க்கிறார்கள்.)

குரல் : அன்பர் வடமலை! அங்கப்பன்!

அங்கப்பன் : வா'ய்யா வா!

வடமலை : வா, வா.

அந்தோணி : (அவர்களை அணுகிவந்து, முதலில் வடமலையை நோக்கிக் கைநீட்டி) மாகாணத்திலேயே முதல்வனாகத் தேறிவிட்டாய். மிகவும் மகிழ்ச்சி — Heartiest Congratulations.

வடமலை : (குலுக்கக் கைகொடுத்து) மிக்க நன்றி. நீயும் முதல் வகுப்பில் தேறினாய் அல்லவா? மகிழ்ச்சி, மகிழ்ச்சி. (இரண்டாவது முறை கை குலுக்குதல்.)

அங்கப் : (கைநீட்டி அந்தோணியின் கையைக் குலுக்குதல்.) மகிழ்ச்சி.

அந்தோணி : (அங்கப்பனுடைய கையைக் குலுக்கி) நன்றி. மகிழ்ச்சி! நீ இரண்டாவது வகுப்புஅல்லவா? போதும்,

போதும். பரீட்சை முடிவு ஓரளவுக்குத் திருவுளச் சீட்டுப் போல.

அங்கப் : அதைப் பற்றிக் கவலையே இல்லை.

அந்தோணி : ஆமாம். நம் மங்களமும் இரண்டாம் வகுப்பில் தேறிவிட்டாள். முதல் வகுப்பே எதிர்பார்த்தாளாம். (வடமலையின் முகத்தில் வாட்டம்.)

அங்கப்பன் : எதிர்பார்த்தபடி நடக்கிறதா ? தவிர, செல்வாக்கான பெரிய குடும்பத்தில் பிறந்தவர்கள் மூன்றாம் வகுப்பில் தேறினாலும் கவலைப்பட வேண்டியதில்லை. (உடனே வடமலையின் முகத்தைப் பார்த்து அமைதியடைதல்.)

அந்தோணி : ஆமாம். ஆமாம் ! நான் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்.

அங்கப் : என்ன அது ?

அந்தோணி : நம்ம பிள்ளைகள் எல்லாரும் கண்டபடி வடமலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்களே! நான் அப்போதே நம்பவில்லை. (வடமலை முகத்தில் சோர்வும் திகைப்பும். அங்கப்பன் அந்தப் பேச்சில் அக்கறை காட்டாமல் ஊம் கூட்டாமல், அமைதியாக இருத்தல்.) இன்று காலையில் என் தங்கையின் திருமணத்துக்கு அழைப்பு அச்சடிக்கக் கபிலர் அச்சகத்துக்குப் போயிருந்தேன். அங்கே மங்களத்தின் திருமண அழைப்புப் பார்த்தேன். எம். எம். எஸ். எஸ். வி. வி. டைரக்டர் பாக்கியநாதன்தான் மணமகன். (உடனே வடமலையின் முகத்தைப் பார்த்துத் திகைப்படைதல்.)

(அங்கப்பன் தலைகுனிதல். வடமலை பெருமூச்சு விட்டு விம்முதல்; பேச முயன்றும் முடியவில்லை. வாய்திறத்தல், கலங்குதல், விம்முதல், கீழுதட்டைக் கடித்துத் துயரத்தையும் ஏமாற்ற உணர்ச்சியையும் அடக்க முயலுதல்.)

# பொதுநலம்

காட்சி : 1

**இடம் முதலியன :** பொதுநலக் கழகம் - மாலை 6 மணி - கழகக் கூட்டம் - கழகச் செயலாளர் பொருளாளர் உட்பட எழுவர் கூடிப் பேசுதல் - செயலாளர் பேச்சுக்களைக் குறிப்பெடுத்தல் - உறுப்பினர் உண்மையப்பன் பேசுதல்.

**உண்மையப்பன் :** நண்பர்களே ! நான் சொல்வது உங்களில் பலர்க்கு வேம்பாகக் கைக்கலாம். ஆனால் எப்போதும் உண்மையைப் பச்சையாகச் சொல்வதே என் வழக்கமாகிவிட்டது. இப்போதும் அப்படித்தான் என்னால் பேச முடிகிறது. நான் பேசாமலே இருக்க வேண்டும் என்று எண்ணிவந்தேன், உண்மையாகவே. செயலாளர் மேன்மேலும் வற்புறுத்தியதால்தான் இப்போது பேசும்படியான நெருக்கடி ஏற்பட்டது. நீங்கள் சொல்வன எல்லாம் மிக நல்ல வழிகள். மக்கள் இனம் முன்னேற வேண்டுமானால் கட்டாயம் வேண்டிய வழிகள் இவை. மக்கள் கூடிவாழ்ந்தால்தான் வாழ முடியும் என்ற அடிப்படையோடு உங்கள் திட்டம் உருவாகியிருக்கிறது. ஆனால், நான் குறுக்கே சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றுதான். அறிவு படைத்த மனிதன் பறவைகளைவிட விலங்குகளைவிடக் கீழ்த்தன்மையாக வாழக் காரணம் என்ன ? மனிதன் அவைகளைவிடத் தன்னலம் மிகுந்தவனாக, பொறாமை மிகுந்தவனாக, அழிவு வேலை மிகுந்தவனாக இருப்

பதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பாருங்கள். மக்களின் வாழ்க்கைக்கு ஆகாத ஒன்று நஞ்சு போல் புகுந்து வாழ்க்கையின் நல்ல போக்கைக் கெடுத்துவிட் டிருக்கிறது.

செயலாளர் } ஆம் ஆம்.
பொருளாளர் } உண்மை உண்மை. (தலை அசைத்தல்.)

உண்மையப்பன் : உடலில் உள்ள இரத்த ஓட்டமே கெட்டுவிட்டிருக்கிறது. இரத்தம் தூய்மை இழந்துவிட்டிருக்கிறது. இதை மறந்துவிட்டு, மேல்தோலுக்கு மருந்து பூசுவதால் பயன் உண்டா?

மற்ற உறுப்பினர்கள் : கேளுங்கள், கேளுங்கள்.

உண்மையப்பன் : மருந்தும் பூசலாம்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அடியோடு பயன் இல்லை என்றும் சொல்லவில்லை. ஆனால் இரத்தம் கெட்டிருப்பதை மறந்துவிடக் கூடாது.

உறுப்பினர் ஆராவமுதன் : நண்பர் கருத்து இன்னது என்பதைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டினால் போதும். திட்டம் போட்டுத் தொண்டு செய்யக் கூடியிருக்கிறோமே தவிர—.

உண்மையப்பன் : வெறும் பேச்சுப் பேசிக் காலம் கழிக்க இங்கே கூடவில்லை என்று சொல்கிறார். உண்மைதான். சுருங்கச் சொல்லிவிடுகிறேன். மனித இனம் பண்பாட்டை நம்பி வாழ வேண்டியது; ஆனால் இன்று பணத்தையே நம்பி வாழும் கதி நேர்ந்திருக்கிறது. உழைப்புக்கு அடையாளமாக, அளவுகருவியாகத் தோன்றியது பணம்; இன்று அதுவே உழைப்பை விழுங்கும் பேயாக வளர்ந்துவிட்டது. பேய் சாதாரண வளர்ச்சியில் நிற்கவில்லை. அரசு செய்யும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. பேய் அரசு செய்தால்—

உறுப்பினர் இருவர் } 'பிணம் தின்னும் சாத்திரங்கள்.'

**உண்மையப்பன் :** என்று பாரதியார் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும். ஆகவே, நம் திட்டம் இன்றைய சூழ்நிலையில் தக்கபடி பயன் தராது என்பது நினைவில் இருக்க வேண்டும். இதுதான் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்பியது. மன்னிக்க வேண்டும்.

**உறுப்பினர்கள் :** நன்று. நன்று. (மேசையைத் தட்டல்.)

**ஆராவமுதன் :** (எழுந்துநின்று) நானும் இது பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். தோழர் உண்மையப்பன் கூறியதை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

**உண்மையப்பன் :** உண்மையப்பன் சொல்வது இன்றைக்கு விளங்காது.

**ஆராவமுதன் :** பொறுத்துப் பாருங்கள். அனுபவம்தான் உண்மையை விளக்கிவிடும். 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று பாரதியார் எதற்கோ பாடியதை இவர் இங்கே நம் கழகத்திற்கு எடுத்துக்காட்டுவது பொருந்தவில்லை. தவிர, நம் நாட்டில் அரசியல் வாணிகம் முதலியன எவ்வளவு சீர்கேடு அடைந்திருந்தாலும், லஞ்சமும் ஊழலும் கள்ளமும் கரவும் எவ்வளவு பெருகியிருந்தாலும், இந்த நாட்டு மக்களிடையே சமய உணர்ச்சி இன்னும் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ முன்னேற முடியும். காந்தியடிகள் இந்த உண்மையைத் தெளிந்தவர். அதனால்தான் வெற்றி பெற்றார். ஆகவே, நம் பிரசாரங்களில் நாம் கடவுள்நெறியை எடுத்துரைக்க வேண்டும். மக்களுக்கு உதவியாக வாழ்வதே கடவுளுக்கு உகந்த தொண்டு என்று உணர்த்தவேண்டும். வாழும் உயிர்களே நடமாடும் கோயில்கள் என்று திருமூலர் உணர்த்திய உண்மையை எடுத்துரைக்கவேண்டும்.

**செயலாளர்** } ஆம் ஆம்.
**பொருளாளர்** } உண்மை உண்மை. (தலை அசைத்தல்.)

ஆராவமுதன் : இப்படிச் செய்துவந்தால் கட்டாயம் வெற்றி பெறுவோம். ஆகவே சோர்வு அடைய வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து செய்வோம். வெற்றி பெறுவோம். வெற்றி நமதே. (உட்கார்தல்)

செயலாளர்<br>பொருளாளர்<br>மற்றஉறுப்பினர் } வெற்றி நமதே ! வெல்க, வெல்க !

உறுப்பினர் ஒருவர் : அறவுரைகள் எழுதிய அந்த அட்டைகள் எப்போது கிடைக்கும் ?

செயலாளர் : நாளை மறுநாளிலேயே கிடைக்கும்படியாகச் செய்வேன்.

ஆராவமுதன் : அந்த அட்டைகளில் ஒவ்வொன்றிலும் " மக்கள் பணியே கடவுள் பணி " என்று சேர்த்தால் நலமாக இருக்கும்.

உறுப்பினர் ஒருவர் : ஒரே ஒரு திருத்தம் : " மக்கள் தொண்டே கடவுள் தொண்டு " என்று எழுதினல் தெளிவாக இருக்கும்.

செயலாளர் : பெரும்பாலோர் கருத்து எதுவோ ?

மற்ற உறுப்பினர்கள் : (உண்மையப்பன் தவிர) திருத்தம் நல்லதுதான்.

செயலாளர் : அப்படியானல் இன்னும் இரண்டுநாள் பொறுக்க வேண்டும். இந்த வாக்கியத்தையும் சேர்த்து எழுதி வாங்கி வைத்திருப்பேன். உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை காலையில் இங்கே வந்து அட்டைகளைப் பெற்றுக்கொண்டு போகலாம். வேறு ஏதாவது—.

உறுப்பினர்கள் : ஒன்றும் இல்லை. (ஒருவர்க்கொருவர் வணக்கம் கூறிவிட்டு விடை பெறுதல்.) வணக்கம், வணக்கம்.

## காட்சி : 2

**இடம் முதலியன :** சேத்துப்பட்டு வைத்தியநாத முதலி தெரு - காலை 8 மணி - தெருவில் கூடையில் கீரை சுமந்து செல்லும் ஒருவன் 'அரைக் கீரை, முளைக் கீரை' எனக் கூவுதல் - ஒரு வீட்டினுள்ளிருந்து மஞ்சள் நிறையப் பூசிக் குங்குமம் பெரிதாய் அணிந்த ஓர் அம்மா எட்டிப் பார்த்தல் - கழகத் தொண்டர் ஆராவமுதன் அட்டையுடன் வழியில் போதல்-அட்டையில் 'கள்ள வாணிகம் செய்யாதீர்கள், கள்ளப் பொருள்களை வாங்காதீர்கள், இது இறைவன் தொண்டு, இறைவன் உண்மையே விரும்புவான்' என்று எழுதியிருத்தல்.

**வீட்டுக்காரி :** படி எப்படி அய்யா ?

**கூடைக்காரன் :** ரூபாய் பன்னிரண்டணு அம்மா! நல்ல கிச்சிலி சம்பா அம்மா!

(ஆராவமுதன் கூடைக்காரன் பதிலைக் கேட்டுத் திரும்பிக் கூடையை உற்றுப் பார்த்து வியந்து நிற்றல்.)

**வீட்டுக்காரி :** ரூபா ஆறணுவுக்கு நேற்றுப் போட்டார்களே!

**கூடைக்காரன் :** அது சரக்கு வேறே? இது வேறே. வாங்கிச் சமைத்துப் பாருங்கள், தெரியும்.

**வீட்டுக்காரி :** ஏதோ, கொண்டுவா, பார்க்கலாம்.

**கூடைக்காரன் :** (கூடையுடன் சென்று இறக்கி, கீரைக்குள்ளிருந்து அரிசியை எடுத்துக் காட்டி) பாருங்கள், அம்மா.

**ஆராவமுதன் :** (அரிசி என்று தெரிந்ததும் வியப்போடு அணுகிச் சென்று கவனிக்கிறுன்.)

**வீட்டுக்காரி :** சொல்லிப் போடய்யா. வெள்ளிக்கிழமை; பூசை செய்ய'ணும். இன்னும் எவ்வளவோ வேலை இருக்கிறது. போக'ணும்.

கூடைக்காரன் : சொல்லிவிட்டேன்’மா. ஒரே விலைதான். அதோ அந்த மூன்றும் வீட்டிலே ஆறுபடி வாங்கினார்கள்.

ஆராவமுதன் : (இன்னும் சிறிது நெருங்கிச் சென்று) என்’மா? வெள்ளிக்கிழமை பூசை செய்யும் நாள். பக்தியாக இருக்கிறீர்கள். நீங்கள் இந்த அரிசியை வாங்கக் கூடாது அம்மா. இது பாவமான அரிசி; கள்ள மார்க்கெட் அரிசி. கடவுளுக்குப் பிடிக்காது அம்மா. சுதந்தரம்பெற்ற நாட்டில், பொதுநலத்தைப் போற்றவேண்டும் அம்மா. அதுதான் அம்மா உண்மையான பூசை.

வீட்டுக்காரி : யாரப்பா தம்பி! எங்கேயோ பார்த்திருக்கிறாற் போல் தெரிகிறதே. அது கிடக்கட்டும். உனக்குத் தெரியாதா? அந்த ரேஷன் அரிசி எத்தனை நாளைக்கு வரும்? அதுவோ பஞ்ச வண்ணக் கிளி போல் பல நிறமாக இருக்கிறது. நாற்றமோ சொல்ல முடியவில்லை. எங்கள் அய்யா அதை வாயிலே வைக்கமாட்டேன் என்கிறார். பிள்ளைக்குட்டிக்காரர் நாங்கள் வேறு என்ன செய்வோம்? சர்க்கார் நல்ல அரிசி போடுவதுதானே! போட்டால் வாங்கமாட்டோமா? நல்ல அரிசியை இப்படிக் கெடுத்து மக்கை வைத்துச் சர்க்கார் அரிசி என்று விற்கிறார்களே. இது அநியாயம் அல்லவா? இதைக் கேட்பார் இல்லையா? என்னைக் கேட்க வந்துவிட்டாயே?

ஆராவமுதன் : கோதுமை—.

வீட்டுக்காரி : அதை யார் சட்டை செய்கிறார்கள்? காசு போட்டுக் கோதுமை வாங்கப் பைத்தியமா பிடித்திருக்கிறது? அதைத் தின்றுவிட்டால், பிறகு வயிறு தேற மூன்று நாள் ஆகிறது. சரி சரி. எனக்கு நேரம் ஆகிறது. பூசையைப் பாதியிலே விட்டுவிட்டு வந்தேன். (அவசரமாக உள்ளே திரும்பிச் செல்கிறாள்.)

**கூடைக்காரன் :** என்ன சாமி ! காலே வேளையிலே இங்கே வந்து என் பிழைப்பிலே மண்ணைப் போட்டீர்களே ! ஏதோ நான்குபடி வாங்கினுல், நாலணுக் காசு கிடைத் திருக்கும். உங்களைச் சொல்லிப் பயன் என்ன ? நான் இன்றைக்கு எந்த மூதேவி முகத்தில் விழித்தேனே ?

**ஆராவமுதன் :** ஒரு படி விற்ருல் ஓர் அணுத்தானு ?

**கூடைக் :** அதற்குமேலே ஒரு காலணு ?

**ஆரா :** ஏன் அப்படி ? ஏராளமாக லாபம் கிடைக்குமே !

**கூடைக் :** அந்த லாபம் எனக்கு அல்ல ; அரிசி இருப்பு வைத்துக்கொண்டு எங்களிடம் தருகிருர்களே அந்தச் சீமான்களுக்கு. எங்களுக்கு ஏது அவ்வளவு லாபம்?

**ஆரா :** இவ்வளவுதானு ?

**கூடைக் :** சத்தியமா(க)ச் சொல்கிறேன்.

**ஆரா :** கீரையே விற்றுப் பிழைக்கக் கூடாதா ? அது உண்மையான பிழைப்பு. இது என் தரித்திரம் ?

**கூடைக் :** ஏது தரித்திரம் ? கீரை விற்பது தரித்திரம் என்று சொல்லுங்கள். ஒரு நாள் எல்லாம் கீரை விற்ருலும் கால்படி அரிசிக்குக் காசு கிடைக்காது. கால் படி அரிசிக்கு வீட்டில் நான்கு பெரிய வயிறும், ஆறு சின்ன வயிறும் காத்திருக்கின்றன. பார்த்துப் பார்த் துத்தான் இந்த அரிசியும் கொண்டுவந்து விற்கிறேன்.

**ஆரா :** ஆமாம்! வழியிலே யாராவது போலீஸ்காரர் பார்த் துக் கண்டுபிடித்துவிட்டால்—.

**கூடைக் :** அவர்களுக்கு ஒரு படி அரைப்படி கொடுத்து விட்டால் பேசாமல் போகிருர்கள். அவ்வளவுதான்.

**ஆரா :** (பெருமூச்சும் ஊம் கூட்டலும்) நல்ல உலகம்'பா. வேறே வேலே ஏதாவது செய்வதுதானே ! என்'பா இந்தப் பாவமான வேலே ?

**கூடைக் :** பாவம் என்ன'ங்க ? பாவம் ! யாரையாவது வெட்டுகிறேனு குத்துகிறேனு ?

ஆரா : பொதுநன்மைக்காக ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை மீறி இப்படி விற்பது நல்லதா ?

கூடைக் : அது சரிங்க. வேறே வேலை என்று சொல்கிறீர்கள். எங்கே வேலை காத்திருக்கிறது ? இருந்தால் நான் ஏன் இப்படித் திருட்டுத்தனமாகக் கூடையைத் தூக்கிக்கொண்டு திரிகிறேன் ? தலைவிதியா எனக்கு ? பெண்டாட்டி பிள்ளையை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமே என்றுதான் இந்தத் தொழிலுக்கு வந்தேன்.

ஆரா : போலீஸ்காரருக்குப் பயந்து—.

கூடைக் : என்ன செய்வது'ங்க ?
(கையில் உள்ள அட்டையைப் பார்த்து)
நீங்கள் யாருங்க ? (அச்சத்தோடு)

ஆரா : பொது நலக் கழகம் அய்யா.

கூடைக் : (அச்சத்தோடு, பரபரப்போடு கூடையை எடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு) சாமி ! என்னை ஒன்றும் செய்யாதீர்கள், ஏழை'ங்க சாமி.

ஆரா : (கூடைக்காரன் அச்சத்தோடு விரைந்து போவதைப் பார்த்து) அட உலகமே !

## காட்சி : 3

**இடம் முதலியன :** மணியகாரர் வீட்டுத் திண்ணை—காலை 9 மணி. நிலவரி கட்ட வந்திருக்கும் குடியானவர்கள் — அவர்களோடு படித்த இளைஞர் ஒருவர் பணம் கட்டி விட்டுக் கைச்சாத்துப் புத்தகத்தில் கையெழுத்து வாங்க வந்து காத்திருத்தல் — அவர்களிடையே பொதுநலக் கழகச்செயலாளர் — வீட்டினுள் பூசைமணி கேட்கிறது.

**குடியானவர் ஒருவர் :** பூசை முடியப் போகிறது.

**மற்றொருவர் :** ஆமாம். மணியகாரர் வந்திடுவார்.

**இன்னொருவர் :** நானும் பார்க்கிறேன். என்ன வேலை இருந்தாலும் அவர் பூசை முடிக்காமல்—.

**முதல்குடி :** வெளியே வருவதே இல்லை.

**மற்றொருவர் :** அவருடைய அப்பாவும் அப்படித்தான் இருந்தார். எண்பது வயதுள்ள கிழவரான போதும் குளிக்காமல் பூசை செய்யாமல் சாப்பிடவேமாட்டார். (மணியகாரர் உள்ளேயிருந்து மடியோடு திருநீற்றுப்பட்டையோடு சந்தனக் குங்குமப் பொட்டோடு வெளியே வருகிறார். குடியானவர்கள் எழுகிறார்கள்.)

**குடியான :** வணக்கம் ஐயா.

**மணிய :** வாங்க, வாங்க. (கையை அரைகுறையாகக் குவித்தபடியே) கணக்குப்பிள்ளையிடம் கணக்குப் பார்த்துக் கொண்டு வந்துவிட்டீர்களா? பணம் கையில் கொண்டு வந்திருக்கிறீர்களா?

(குடியானவர் ஒவ்வொருவராகப் பணம் தந்து கைச்சாத்துப் புத்தகத்தை நீட்டல். மணியகாரர் கையெழுத்துப் போடல். படித்தஇளைஞரும் பணம்கொடுத்துக் கைச்சாத்து வாங்குகிறார்.)

**மணிய :** இன்னும் என்ன தம்பி! ஏன் நிற்கிறாய்?

**இளைஞன் :** சில்லறை'ங்க.

**மணிய :** இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறாய். உனக்கு ஒன்றும் தெரியவில்லை, பாவம்.

இளைஞன் : இருபது ரூபாய் கொடுத்தேனுங்க. பதினேழு ரூபாய் பத்தணுவுக்குத்தான் கணக்கு வரவு வைத்திருக்கிறீர்கள்.

மணிய : உனக்கு ஒன்றும் தெரியாது தம்பி, பேசாமல் போ.

குடியான : வா தம்பி! அது வழக்கம் அப்பா. நீ சின்ன பிள்ளை. (தலையாரி வெளியேயிருந்து வருகிறான்.)

மணிய : என்'டா. எங்கெங்கே போய் வரி கேட்டு வந்தாய்? இப்போதுதான் வீட்டிலிருந்து வருகிறாயா ?

தலையாரி : இல்லைங்க. கீழண்டை ஊர்ப் பக்கமாகப் போயிருந்தேன். ஏரிக்கரையண்டை போகும்போது சைக்கிலில் ரெவினியூ இன்ஸ்பெக்டரின் ஆள் வந்தான்.

மணிய : என்னவாம் ? ஏதாவது உத்தரவா ?

தலையாரி : இல்லைங்க. இன்ஸ்பெக்டர் புதன் வியாழன் இரண்டு நாளும் இங்கே தங்கியிருக்கப் போகிறாராம்.

மணிய : அட சனியனே ! அதைச் சொல்வதற்கா இப்போது வந்தாய் ? நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய். இரண்டு நாளுக்குப் பத்துரூபாய் செலவாகும். எங்கே போய்த் திருடுவது ? வீட்டுக்கு வேறே பருப்பு வெல்லம் நெய் என்று என்னென்னவோ கேட்பார் ! நல்ல உத்தியோகம் ! மணியகாரர் உத்தியோகமாம் ! மணியகாரர் ! வருவான் போவானுக்குச் செலவு செய்யவே சரியாய்ப் போகிறது.

கழகத் தொண்டர் : ஆமாங்க, நீங்கள்—.

மணிய : நீ என்ன வேலையா(க) இங்கே வந்தாய் ?

தொண்டர் : சும்மா வந்தேனுங்க.

மணிய : அப்புறம் ?

தொண்டர் : ரெவினியூ இன்ஸ்பெக்டர் சொன்னீர்களே. இங்கே வந்து போவதற்கெல்லாம் சர்க்கார் அவருக்குப் படி தருவதில்லையா ?

மணிய : அதையும் வேறே வாங்கிக்கொள்கிறார்.

தொண்டர் : நீங்கள் அவருக்காகச் செலவு செய்தால் செலவு செய்த பணத்தைக் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும்.

மணிய : உடனே அவர் கேட்காமலே வாங்கிக்கொள்வார் இந்த உத்தியோகத்தையே. அவர்கள் கையில் அவ்வளவு அதிகாரம் வந்திருக்கிறது.

தொண்டர் : என்ன'ங்க ! நம் நாட்டுக்குச் சுதந்தரம் வந்துவிட்டது. இனிமேலும் இந்த அநியாயம் எல்லாம் நடக்கலாமா ? நாட்டின் பெருமையைக் காப்பாற்ற வேண்டாமா ?

மணிய : சுதந்தரம் எல்லாம் பத்திரிகையில், மேடையில், சட்டசபையில்தான். கிராமங்களுக்கு ஒன்றும் இல்லை. கிராமம் கிராமத்தாரின் கையில் இல்லை. பெரிய உத்தியோகத்தில் உள்ளவர்கள் கிராமத்தின் குடுமியைக் கையில் வைத்துக்கொண்டு ஆட்டி வைக்கிறார்கள். எது மாறினாலும் அது மாறவில்லை. உங்களுக்கு உலகம் தெரியாது அப்பா.

தொண்டர் : காந்தியடிகள் கிராமங்களுக்காகத்தான் பாடுபட்டார். கிராமங்களுக்கு உரிமை வேண்டும் என்றுதான் எழுதிவிட்டுச் செத்தார்.

மணிய : அதுதான் பழைய கதை ஆச்சே. இப்போது அவர் சொன்னதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள் ?

தொண்டர் : உண்மையாக நடந்தால் ரெவினியூ இன்ஸ்பெக்டர் உங்களை என்ன செய்வார் ?

மணிய : வீண் தொல்லை கொடுப்பார். வேலை போய்விடும். அவ்வளவுதான்.

தொண்டர் : வேலை போகட்டுமே. நீங்கள் அப்புறம் பிழைக்கவே முடியாதா ?

மணிய : அது வேறே கதை. என் நிலையில் நீ இருந்துபார்த்தால் அதைப் பேசலாம். (இன்னொரு குடியானவரைப் பார்த்து) என்ன அய்யா ? கிணறு வெட்டுகிற கதையா ?

**குடியா :** ஆமாம் மணியகாரரே. பார்த்து மனம் வைத்து ஏதாவது செய்யுங்கள்: நானும் ஏழை !

**மணிய :** நானும் ஏழைதான். அப்படிச் சொன்னால் தாலுக்காபீசில் என்னை விட்டுவிடுவார்களா ?

**குடியா :** இதை வைத்துக்கொள்ளுங்கள். இருக்கட்டுங்க. காலம் சரியாக இல்லேங்க.

**மணிய :** வாங்கின பணத்தில் கால்பங்கு தாலுக்காபீசிலேயே கொடுத்துவிட்டு வந்தாயே ! அதற்கு மட்டும் காலம் சரியாக இருந்ததா ? நானும் கணக்குப்பிள்ளையும் எழுதித்தானே உனக்குப் பணம் வந்தது ? இல்லாவிட்டால்—.

**குடியா :** உங்கள் உதவிதான். இல்லே என்று சொன்னால் எனக்குக் கண் அவிந்து போய்விடாதா ?

**கணக்குப் :** (எதிர்பாராமல் அப்போது வந்து) ஆடிக்கிருத்திகைக்கு எப்போது புறப்படப் போகிறீர்கள் ?

**மணிய :** ரெவினியூ வருகிறாராம். அது ஒரு தொல்லை. வந்த பிறகுதான் சொல்லிவிட்டுப் போகவேண்டும்.

**கணக்குப் :** வேலை இருக்குமே.

**மணிய :** வேலை என்றைக்கும்தான் இருக்கும். சாகிற வரைக்கும் இருக்கும். அதற்காக—திருத்தணிக்குப் போய் வராமல் இருக்க முடியாது. முருகக் கடவுளைத் தரிசிக்காமல் கிருத்திகையில் கையை நனைப்பேனா ? தலை போனாலும் போகட்டும். திருத்தணிக்குப் போவதைவிட உத்தியோகம் பெரியதா ? அப்பன் அருள் இருந்தால் நாளைக்கே தொழிலும் கிடைக்கும். செல்வமும் கிடைக்குமே. அப்பனை மறக்க முடியுமா ?

**கணக்குப் :** உண்மைதானுங்க.

**மணிய :** கொஞ்சம் இருங்கள். இதோ வந்துவிடுகிறேன். **(மணியகாரர் உள்ளே போகிறார். பொதுநலக் கழகத்தொண்டர் விழிக்கிறார் ; திகைக்கிறார்.)**

## காட்சி : 4

**இடம் முதலியன :** தாலூக்கா ஆபீஸ் - பகல் 1 மணி - கிளர்க்குகள் வேலை செய்தல் - ஒரு கிளர்க்கின் எதிரில் குடியானவன் ஒருவன், தான் பெற்ற உதவிக்காக நன்றியுணர்வோடு நிற்றல்.

**குடியானவன் :** (கையில் இரண்டு பத்து ரூபாய் நோட்டை மறைத்தபடியே கொடுத்து) சும்மா இருக்கட்டுங்க.

**கிளர்க் :** கெட்டிக்கார ஆள் அய்யா நீ.

**குடி :** வரட்டுங்களா ?

**கிளர்க் :** போய் வா அய்யா, போய் வா. (சட்டைப் பையில் வைத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்துவிட்டு) எங்கே அய்யா மணியகாரர் !

**மணிய :** (உடனே அவர் எதிரில் வந்து நின்று) என்ன'ங்க ? எனக்கும் நேரம் ஆகிறது.

**கிளர்க் :** இதோ பில்லில் கையெழுத்துப் போடு.

**மணிய :** (குனிந்து கையெழுத்துப் போட்டுவிட்டு) கொஞ்சம் பொழுதோடு அனுப்பிவிடுங்கள்.

**கிளர்க் :** கையெழுத்துப் போட்டு முடிந்ததா இல்லையா ? இன்னும் என்ன ? போகலாமே.

**மணிய :** பணம் ?

**கிளர்க் :** எவ்வளவு அய்யா ?

**மணிய :** பதின்மூன்றேகால் ரூபாய்.

**கிளர்க் :** அவ்வளவுதானே ? நூறு இருநூறு இல்லையே!

**மணிய :** இருந்தாலும்—.

**கிளர்க் :** இருந்தாலும் என்ன அய்யா, இருந்தாலும் அடுத்த வாரம் வா அய்யா, பார்க்கலாம். கொஞ்சம் செலவு இருக்கிறது.

**மணிய :** எனக்கும்—.

கிளர்க் : எல்லாம் தெரியும் அய்யா. எங்களுக்கு இங்கே என்ன இருக்கிறது? காடா, தோப்பா, ஒரு செடியா, கொடியா, ஏரியா, குளமா? உனக்கு எல்லாம் இருக்கிறது. யாரிடமிருந்தாவது ஏதாவது கறந்துகொண்டே இருக்கலாம். எங்களுக்கு என்ன இருக்கிறது? இதோ காகிதக் கட்டும் இங்கிப்புட்டியும்தான். போ அய்யா போ.

மணிய : ஒரு பாதியாவது—.

கிளர்க் : சரிதான், தெரியும். (கை குவித்து விடைகொடுத்து) போய்விட்டு வாங்க. வணக்கம்.

(மணியகாரர் ஏமாற்றத்தோடு கைகுவித்தபடியே சொல்லாமல் விடைபெறுகிறார்.)

அடுத்த கிளர்க் : என்ன அன்பர்! திருவள்ளூர்க்குப் போக'ணும் அமாவாசைக்கு. கையில் காலணு இல்லே. இலட்சுமி கடாட்சமும் ஒன்றும் கிடைக்க வில்லே.

முதல் கிளர்க் : ஆமாம். நானும் மாதம் தவருமல் எங்கள் ஊரில் அம்மனுக்கு அர்ச்சனே பண்ணுவது வழக்கம். இந்த மாதம் தடுமாற்றமாக இருக்கிறது.

அடுத்தவர் : தெய்வத்துக்குச் செய்வதைக் குறைக்க மனம் இல்லே; விட்டுவிடவும் மனம் இல்லே.

முதல் : வாழ்க்கையில் வேறு என்ன கண்டோம்? தெய்வ பக்தியாவது இருந்தால் போதும். அடுத்த பிறவியிலாவது நல்லபடி பிறப்போம்.

அடுத்தவர் : அடுத்த பிறவியில் இப்படித் தாலுக்கா ஆபீசில் பேனு ஓட்டும் வேலே வராமல் தெய்வம் காப்பாற்றினுல் போதும். (உடனே வாயில் பக்கம் கூட்டம் நிற்பதைக் கண்டு எழுந்து பார்த்தல். சிறிது தொலேவில் காணப்படும் போலீஸ்காரன் ஒருவனே அழைத்து) என்ன அய்யா? என்ன அது கூட்டம்?

போலீஸ் : யாரோ ஒருபையன் என்னவோ நீதி எழுதிய அட்டை வைத்துக்கொண்டு நிற்கிறான். அதைப் பார்த்துக் கூட்டம் நிற்கிறது.

அடுத்தவர் : நீதியா ? என்ன நீதி ? இந்த உலகத்தில் நீதியா ? நீதிக்கு இடம் இருக்கிறதா ?

போலீஸ் : லஞ்சம் கொடுக்காதீர்கள், ஊழல்வளர்க்காதீர்கள், சமூகத் துரோகமே கடவுள் துரோகம் என்று எழுதியிருக்கிறது.

முதல் : ஓ அந்தப் பைத்தியமா ? சரிதான்.

அடுத்த : பைத்தியமா ?

முதல் : பைத்தியம் என்றால் அசல் பைத்தியம் அல்ல. படித்துப் பைத்தியம் பிடித்தவன்.

அடுத்த : உனக்கு முன்னமே தெரியுமா ?

முதல் : பார்த்திருக்கிறேன் இந்தப் பயல்களை. இவர்கள் வீட்டில் கேட்கப் பெரியவர்கள் இல்லாமல், கன்னத்தில் இடிக்கப் பெண்டாட்டிமார் இல்லாமல், வளர்கிறவர்கள். பொழுது போகவில்லை.

அடுத்த : அதனால்—.

முதல் : பொதுநலக்கழகம் என்று ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுதந்தரம் பெற்ற இந்த நாட்டின் பெருமையைக் காப்பாற்றப் போகிறார்களாம்.

அடுத்த : பெற்ற அப்பனுடைய பேரை முதலில் காப்பாற்றினால் போதும். தடிப் பயல்கள் !

முதல் : ஆமாம். (போலீஸ்காரனைப் பார்த்து) அந்தப் பயலை ஏதாவது நியூசன்ஸ் குற்றம் சாட்டிப் பிடித்து உள்ளே தள்ளக் கூடாதா ?

போலீஸ் : காலையிலே மாஜிஸ்ட்ரேட்டும் சப் இன்ஸ்பெக்டரும் அதைப் பற்றித்தான் பேசிக்கொண் டிருந்தார்கள்.

முதல் : மாஜிஸ்ட்ரேட் அய்யா என்ன சொன்னார் ?

**போலீஸ் :** காலம் கெட்டுப் போயிருக்கிறது. நினைத்ததற் கெல்லாம் உரிமை உரிமை என்று சொல்கிறார்கள் என்றார்.

**முதல் :** அதற்காக—.

**போலீஸ் :** தொலையட்டும் ; இரண்டுநாள் நின்று கத்தி விட்டுப் போகட்டும் ; பிறகு சலித்துப் போய் விட்டு விடுவார்கள் என்று சொன்னார்.

**அடுத்த :** அவர் ஒரு தொடைநடுங்கிப் பேர்வழி. தண்டிப் பது என்றால் பயம்.

**முதல் :** அந்தப் பயலுக்கு இங்கே ஒரு கிளர்க் வேலை கொடுத்துப் பாரேன். அப்போது நீதி தெரிந்துவிடும். நமக்குமேலே வாங்குவான் லஞ்சம். வெட்டிப் பயல் !

**அடுத்த :** அது கிடக்கட்டும். நாம் எல்லாம் ஒன்று அரை என்று ரூபாய் ரூபாயாக வாங்குவோம் ; அவ்வளவு தான். மேலே உள்ள பெரிய ஆட்கள் ஆயிரம் ஆயிர மாக லட்சம் லட்சமாகப் புரட்டிக் கோடீசுவரர் ஆகிறார்களே. அதைக் கேட்க இவர்களுக்கு ஆண்மை இருக்குமா ?

**முதல் :** பேடிப் பயல்கள் ! (சிரிக்கிறார் கொல்லென.)

**அடுத்த :** உதவாப் பயல்கள் ! (சிரிக்கிறார் உரக்க.)

## காட்சி : 5

**இடம் முதலியன :** நடுத்தெருவில் ஒரு பிள்ளையார் கோவில் - காலை 8 மணி - வியாபாரி ஒருவர் காலில் செருப்புடன் நடந்து போனவர். செருப்பைக் கழற்றிப் பக்கத்தில் விட்டுவிட்டு வெறுங்காலில் நின்றபடியே தலையில் குட்டிக்கொண்டு பிள்ளையாரை வணங்குகிறார் - பொதுநலக் கழகத்தொண்டர் ஆராவமுதன் அவரைப் பார்த்தபடியே மெல்ல நடக்கிறார் - வியாபாரி வணக்கத்தை முடித்துக் கொண்டு காலில் செருப்பு அணிந்து இரண்டு அடி நடந்ததும் எதையோ நினைந்து நிற்கிறார். நடுத்தெருவில் எச்சில் துப்பிவிட்டு, சட்டைப்பையிலிருந்து ஏதோ காகிதம் எடுத்துப் பார்த்துக் கிழித்துத் தெருவில் எறிகிறார். பொதுநலக் கழகத் தொண்டர் அவரை அணுகி வருகிறார்.

**ஆராவமுதன் :** அய்யா! பொதுநலத் தொண்டே கடவுள் விரும்பும் தொண்டு. சுதந்தரம் பெற்ற நாட்டில் இப்படி நடுத்தெருவில் துப்புவது, குப்பை போடுவது, தெய்வத்துக்குத் துரோகம்!

(வியாபாரி உற்றுப் பார்த்து அவர் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை கொடுத்துச் சினம் கொள்கிறார். வழிப்போக்கர் ஒருவர் இதைக் கண்டு ஆத்திரம் கொள்கிறார்.)

**வழிப்போக்கர் :** ஏன் அய்யா! அந்த ஆளை நடுத்தெருவில் இப்படி அடிக்கலாமா?

**வியாபாரி :** பேசாமல் போ அய்யா! உனக்கு என்ன தெரியும் நடந்தது?

**வழிப் :** என்ன அய்யா நடந்தது? அவ்வளவு கோபமா என்ன இருந்தாலும்?

(ஆராவமுதன் கன்னத்தைத் தடவிக்கொண்டே உற்றுப் பார்க்கிருர்.)

வியாபாரி : நான் காலையில் பிள்ளையாரை வணங்கிவிட்டுக் கடையைத் திறக்கப் போகிறவன். வழியில் அபசகுனம் போல் குறுக்கே வந்து என்ன என்னவோ உளறினல், கோபம் வராதா ?

வழிப் : இருந்தாலும் நடுத் தெருவில் இப்படி—.

வியா : உனக்கு என்ன அய்யா தெரியும் ? எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ? இரண்டுமாதமாக வியாபாரம் சரியாக இல்லை. கடன் கொடுத்த இடத்தில் திரும்பி வரவில்லை. வழக்கிலே வேறே அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

வழிப் : இருக்கலாம், பாவம் !

வியா : நல்லபடி துணையாக இருந்து காப்பாற்ற'ணும் என்று பிள்ளையாரை வேண்டிக்கொண்டு அமைதியாகப் புறப்பட்டால், அபசகுனம் போல—. நான் இவனுடையவீட்டிலே துப்பினல் கேட்கட்டும் ; இவனுடையவீட்டிலே குப்பை போட்டால் கேட்கட்டும். இந்த வீண்பேச்சு எனக்கு ஆகாது. பொல்லாத கோபம் வந்துவிடும். தெய்வத்துக்குத் துரோகமாம். இதைக் கேட்டால் என் மனம் எப்படி இருக்கும் ?

வழிப்போக்கர் இன்னெருவர் : ' பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே ' (என்று பாடிக்கொண்டு செல்கிருர்.)

## காட்சி : 6

**இடம் முதலியன :** சட்டசபை உறுப்பினர் தனபாலர் வீடு — மாலை நேரம் — தனபாலரின் நண்பரும் பொதுநலக்கழகப் பொருளாளரும் பேசிக்கொண் டிருத்தல்.

**நண்பர் :** அவராகவே உன்னைப் பற்றிக் கேட்டார். நான் ஒன்றும் சொல்லவில்லை.

**பொருளாளர் :** எதற்காகவோ ?

**நண்பர் :** ஆச்சு, வரும் நேரம்தான். இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமே. தெரிந்துவிடும்.

**பொரு :** இருக்கலாம், அதற்கு என்ன ? உங்களிடத்தில் ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையா ?

**நண்பர் :** சொன்னர்.

**பொரு :** பார்த்தீர்களா ? மறைத்து மறைத்துப் பேசுகிறீர்கள். என்ன சொன்னர் ?

**நண்பர் :** வேறொன்றும் இல்லை, நல்ல குடும்பம், நல்ல பிள்ளை என்று அன்போடு சொன்னர்.

**பொரு :** அவர் மனம் வைத்தால் நல்ல வேலை ஒன்று வாங்கித் தரலாம்.

**நண்பர் :** வேலை எதற்காக ? அந்தச் சம்பளத்தை நம்பி இந்தக் காலத்தில் பிழைக்க முடியாதே.

**பொரு :** வேறு என்ன செய்வது ? வியாபாரம் செய்ய நமக்குச் சக்தி ஏது ?

**நண்பர் :** அதைத்தான் சொல்ல வந்தேன். கலெக்டரிடத்தில் தனபாலர் சொன்னல் போதும். எம். எல். ஏ. பேச்சைத் தட்ட முடியுமா அவர் ? தட்டினல் அந்த ஜில்லாவில் எந்தக் கலெக்டராவது நல்ல பெயரோடு வாழ முடியுமா ? ஒரு பங்கீட்டுக் கடை - ரேஷன் கடை - போதும். அதை வாங்கிக் கொடுத்தால்—.

போரு : நல்ல வருவாய்தான்.

நண்பர் : ஆனல் ஓர் ஆயிரம் ரூபாயாவது கையில் இருந்தால் நாளைக்கே முடிக்கலாம்.

போரு : நான் எங்கே போவேன் ? நான் படித்ததே சர்க்காரின் சம்பள உதவியால். ஏழை, ஆயிரம் ரூபாயைக் கண்ணுல் பார்த்ததும் இல்லையே.

நண்பர் : தெரிந்துதான் சொல்கிறேன். தனபாலர் ஒரு பங்கீட்டுக் கடை லைசென்ஸுக்கு இரண்டாயிரம் ரூபாய் கேட்பது வழக்கம். இப்போது உனக்காக ஆயிரம் கொடுத்தால் ஒத்துக்கொள்வார்.

போரு : என்ஞல்—.

நண்பர் : அந்த ஆயிரமும் அவருக்கு என்று எண்ணி விடாதே. அவர் அந்தப் பணத்தைத் தொடவும் மாட்டார். வழியில் ஆபீஸ்களில் உள்ள பூசாரிகளுக்குக் கொடுக்க வேண்டி யிருக்கிறது.

போரு : அவருமா கொடுக்க வேண்டும் ? எம். எல். ஏ !

நண்பர் : அவரும் கொடுத்துத்தான் தீர வேண்டும். பழக்க வழக்கம் என்பது கட்டாயச் சட்டம் போல்தான். தப்ப முடியாது.

போரு : என் கையில் ஒரு பைசாவும் இல்லீங்க.

நண்பர் : உன் பணம் அல்ல. என்ருலும், உன் கையில் இருக்கிறது. உன் பொறுப்பில் இருக்கிறது. கூட்டுறவு பாங்கியில். இல்லையா ?

போரு : கழகத்துப் பணம் சொல்கிறீர்களா ?

நண்பர் : எவ்வளவு இருக்கும் ?

போரு : ஏறக்குறைய ஐந்நூறு இருக்கும்.

நண்பர் : இப்போது அதைக் கொடு, போதும். அடுத்த மூன்று மாதங்களில் வரும் லாபத்திலிருந்து இன்னும் ஐந்நூறு கொடுத்துவிடு. போதும்.

போரு : அய்யய்யோ! பொதுப்பணத்தை எடுத்துச் செலவு செய்வதா ? அநியாயம் ! சே ! அது ஒரு வாழ்க்கையா?